# புதிய வன்னி

PUTHIYA WANNI

மாத இதழ்

மே - 2014 | இதழ் - 02 | விலை - 50/-



மோடி வருகை
நிகழுமா அற்புதங்கள்?



இரணைமடுக்குளத்தின் எதிர்காலம்
## முடிவற்ற சர்ச்சையும் சவால்களும்



விவசாய பீடம்
கிளிநொச்சிக்கு வருமா?

வற்றாப்பளையில் இருப்பது
கண்ணகியா ராஜராஜேஸ்வரியா?





# City Medical Centre

## சிற்றி மெடிக்கல் சென்ரர்

இல:56, ஏ9, வீதி,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

இல.72சேவியர் கடைசந்தி
கனகபுரம், கிளிநொச்சி.







வெளிநோயாளர் பிரிவு - OPD

வைத்திய நிபுணத்துவ சேவை – VOG, VP, Surger

ஆய்வுகூடம் - Laboratory

பாமசி அன் றோசறி Pharmacy & Grocery

ஸ்கான்- Scan, E C G

பல் வைத்தியம் - Dental

Tel: 0212285388,
Mob: 0778379677

Tel: 0212283956,
Mob: 0778379677




## பத்தி


- வற்றாப்பளையில் இருப்பது
  கண்ணகியா இராஜராஜேஸ்வரி **03**
- பூநகரி மொட்டைக் கறுப்பனுக்கு
  வந்த சோதனை **15**
- மாடுகளோடு வாழ்தல்சுகம் **22**


## கவிதை


- வரும் ஆனால் வராது **27**
- காட்சி மாற்றம் **20**
- எல்லாம் புனிதங்களின்
  பெயரால் **19**


## சிறுவர் பகுதி


- வீடு கட்டுவோமே **27**
- பாக்கியம் கிழவியின் விண்வெளிப் பயணம் **46**


## விளையாட்டு


- வன்னியின் சமர் சாதனையாளர்களை
  உருவாக்கத்தவறின்..... **36**


## கட்டுரை


- வன்னியின் கூட்டுறவுத்துறை **34**
- வன்னியை வாட்டி வதைக்கும் உளவியல் **48**
- இரணைமடுக் குளத்தின் எதிர்காலம் **09**
- முல்லைத்தீவில் **33**
- விவசாய பீடம்கிளிநொச்சி வருமா? **07**
- மெய்ப்பட்ட கனவு - பொறியியற் பீடம் **31**
- சொல்லியே தீரனும் **26**
- சிறுவர் துஸ்பிரயோகம் **38**
- கிளிநொச்சி வாழ்வும் அபிவிருத்தியும் **41**
- கலாசாரம் யார் பொறுப்பு? **14**
- மோடி வருகை **28**


## நேர்காணல்


- மீளத்துடிக்கும்
  முல்லை கடற்றொழிலாளர்கள் **12**

## புதிய வன்னி

**ஆசிரியர் குழு**
மு.தமிழ்ச்செல்வன்
சோபிதா தேவராஜா

**வடிவமைப்பு**
தீபன்
றெஜினா
சிவா
சதீஸ்

**விளம்பரம்**
சிவா

**அச்சுப்பதிப்பு**
ஸ்ரீ மாருதி அச்சகம்,
யாழ்ப்பாணம்.

**முகவரி**
புதிய வன்னி,
இல- 24,
06 ஆம் ஒழுங்கை,
குமரபுரம், பரந்தன்,
கிளிநொச்சி.

**இணையத்தளம் :**
www.newwanni.com
**மின்னஞ்சல் :**
puthiyawanni@gmail.com

*R. Pathmanaba Iyer*
*27-B High Street*
*Plaistow*
*London E13 0AD*
*Tel: 020 8472 8323*



# புதிய வன்னி
PUTHIYA WANNI
மாத இதழ்

**இதழ் 02** **மே 2014**


## மாற்றங்களை நோக்கி சிந்திக்க வேண்டும்

முடிவில்லாத யுத்தத்திற்குள் சிக்கித் திணறிக்கொண்டிருந்த நாடு, இப்பொழுது யுத்த வெற்றிக்கும் யுத்தத் தோல்விக்குமிடையில் சிக்கியுள்ளது.

யுத்தத்தின்போதும் இலங்கைச் சமூகங்கள் பிளவுண்டேயிருந்தன. யுத்தம் முடிந்த பின்னும் அவை பிளவுண்டேயிருக்கின்றன.

இலங்கைத்தீவில் தோற்கடிக்கப்பட்ட சமாதானம், அமைதியும், நல்லிணக்கமும், நம்பிக்கைகளுமே.

இந்த நிலையில், இலங்கையின் எதிர்காலம் எப்படியிருக்கப் போகின்றது? அதாவது இலங்கைச் சமூகங்களின் எதிர்காலம் எப்படி அமையவுள்ளது?

சர்வதேச ரீதியில் மேற்கு மற்றும் ஆசிய நாடுகளுக்கிடையிலான அதிகாரப்போட்டிகளுக்கு இலங்கையின் ஸ்திரமற்ற நிலையும் சமூகப்பிளவுக்கும் தொடர்ந்தும் வாய்ப்பளிக்கப் போகின்றனவா? இதற்கு இலங்கைச் சமூகங்கள் நிரந்தரமாகவே இடமளிக்கத் தீர்மானித்துள்ளனவா?

இலங்கையின் ஸ்திரமற்ற நிலையும் இலங்கைச் சமூகங்களின் பிளவுண்ட தன்மையும் கடந்த காலத்தில் வெளிச்சந்திகளுக்கு இடமளித்ததைப்போன்ற நிலையே இன்றும் தொடர்கிறது. இது இலங்கைத் தீவையும் இலங்கை வாழ்மக்களையும் அழிவுக்குள்ளாக்கியது. கடந்த கால வரலாறு அத்தகைய தொடுநிலையிலிருந்து எவரும் பாடங்களைக் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. எனவேதான் தொடர்ந்தும் முரண்பாடுகளை வளர்த்தும் கொண்டிருக்கின்றன.

வெளிச்சக்திகளிடம் தங்களின் தலைகளை அடகு வைக்க முண்டியடிக்கும் அரசியற்தலைமைகள் தமக்கிடையில் சகோதரத்துவத்துடனும் நம்பிக்கையோடும் கைகளை குலுக்கிக்கொள்ள முற்படுவதில்லை.

இதுதான் இலங்ககையின் துயரம்.


ஒரு நாட்டை வளப்படுத்த வேண்டிய நிதானமாக வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு அந்த நாட்டின் சமூக அமைப்புக்களும் புத்திஜீவிகளுக்கும் உரியது.

இலங்கையின் சமூக அமைப்புகளும், புத்திஜீவிகளும் மாற்றங்களை நோக்கிச் சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்திக்கத் தொடங்கினால், அரசியலாளர்களின் முரண் பயிர்செய்கைக்கும் பகை வளர்ப்புத் திட்டத்திற்கும் இடமிருக்காது.

இது இலங்கையை மீளவும் அமைதித் தோப்பாக்கும். அப்போது வன்னியிலும் மகிழ்ச்சிப் பூக்கள் பூக்கும்.

**அப்பு**

*நந்திக்கடலின் மேற்கு முகத்தில் இருக்கும் வற்றாப்பளை வயல்வெளியில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த சிறுவர்கள் ஒரு மாலைப்பொழுதில் வெள்ளைச்சேலை உடுத்தி முதிய பெண்ணொருத்தியைக் கண்டிருக்கிறார்கள். அந்தப் பெண், அந்தச் சிறுவர்களிடம் பழம் வாங்கி உண்டதாகவும் பிறகு, தானே கண்ணகி என்று கூறிச் சென்றதாகவும் வன்னியில் பேசுவார்கள்...*



## வற்றாப்பளையில் இருப்பது

# கண்ணகியா ராஜராஜேஸ்வரியா?

**வைகாசி** பிறந்தால் அப்பொழுது எங்களுக்குப் பெருங்கொண்டாட்டம். முதலில் திரியாய் அம்மன் கோயில் பொங்கல் நடக்கும். திருகோணமலையில் இருக்கும் திரியாய் வேறு. இந்தத் திரியாய் வேறு. இது இயக்கச்சியில் உள்ள முகாவில் என்ற கிராமத்தில் அமைந்த திரியாய். வடமராட்சி கிழக்கிற்கும் இயக்கச்சிக்கும் இடையில் இருக்கும் வீரக்களி ஆற்றங்கரையோரத்தில் உள்ள இந்த திரியாயில் அரசமரத்தோடமைந்த கண்ணகி கோயில் இருந்தது. இப்பொழுது இதை பறுவபதி அம்மன் என்று ஆக்கிவிட்டார்கள். இங்கேதான் வைகாசிப் பொங்கல் முத லில் நடக்கும். பிறகு இயக்கச்சிக் கண் ணகை அம்மன் பொங்கல். அது முடிய வற்றாப்பளை அம்மன் பொங்கல். நாங் கள் வரிசையாக ஒவ்வொரு கோயிலின் பொங்கலுக்கும் போவோம். வற்றாப் பளைக் கண்ணகி அம்மன்தான் இதில் விசேசம். அதுதான் மிகப் பிரசித்தி பெற்ற கோயில். கண்ணகி சிறு தெய்வமாக இருந்தாலும் வன்னியர்களுக்கும், வன்னிக்கும் அது பெருந்தெய்வம். யாழ்ப்பாணத்தில் கண்ணகிக்குப் பெரிய அளவுக்கு வழிபாடில்லை.

ஆறுமுகநாவலரின் சைவ விரிவாக்கப் பணியினால் கண்ணகியைத் தூக்கி யாழ்ப்பாணத்துக்கு வெளியே போட்டுவிட்டார்கள். அவருடைய எதிர்ப்பால் கண் ணகை அம்மன் கோவில்கள் மனோன் மணி அம்மன் கோயில்களாவும், இராஜரா ஜேஸ்வரி கோயில்களாகவும் மாற்றம் பெற்றன.

> **கஜபாகு மன்னனுக்கும் பாண்டிநாட்டுக்கும் இருந்த தொடர்பின் வழியாகவே கண்ணகி வழிபாடு இலங்கைக்கு வந்திருக்கிறது. அதன்பின்னரே இலங்கையில் பத்தினித்தெய்வ வழிபாடு தொடங்கியது. சிங்களச் சமூகத்தில் கண்ணகி ஒரு முதன்மையான தெய்வம் என்பதற்கு சரித்திரச் சான்றுகள் உள்ளன.**

சைவத்தில் சிறுதெய்வத்துக்கு இடமில்லைச் சிறப்புமில்லை என்று நாவலர் கருதினார். ஆனாலும் கிராமியத் தெய்வ வழிபாட்டில் ஆழமாக ஊறியுள்ள யாழ்ப் பாண மக்கள் கால்நடையாகவும், கடல் மூலம் வத்தையிலும் பிரசித்தி பெற்ற வற்றாப்பளை அம்மன் ஆலயத்துக்கு வரத் தலைப்பட்டனர். வட இலங்கையில் சுமார் முப்பது கண்ணகி அம்மன் கோயில்கள் இருந்தபோதும் அவற்றுள் வற்றாப்பளை அம்மன் கோயிலே பெருந்தொகையான பக்தர்களை ஈர்த்தது.

இதேவேளை வன்னியில் நிலைமை வேறு. வன்னியிலும், கிழக்கிலும் திருகோணமலை தொடக்கம் மட்டக்களப்பு, அம்பாறை வரையிலும் கண்ணகிதான் பெருந்தெய்வம். கண்ணகிக்குத்தான் மதிப்பும் கூட. கண்ணகியிடமே அருள் கூட என்ற நம்பிக்கை இங்குள்ள மக்களிடம் உண்டு. சேரநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த கண்ணகி அப்படியே கால்நடையாக நடந்து சென்ற வழிநெடுகவும் கண்ணகி கோயில்கள் உள்ளதாக ஊர்களில் சொல்வார்கள். வடக்கில் வற்றாப்பளைக் கண்ணகிதான் மிகப்பிரசித்தம். வற்றாப் பளைக் கண்ணகியைப்பற்றி ஏராளமான ஐதீகக் கதைகள் உண்டு.

➡

> **கண்ணகிக்கு மந்திர உச்சாடனங்கள் இல்லை. பிரதிஷ்டை கிடையாது. ராஜகோபுரம் இல்லை. கண்ணகி சிறு தெய்வம். அவதார புருஷ்யை. பெரிய கோயிலாக, ராஜகோபுரத்தோடு அதைக் கட்டவேணுமென்றால், அதற்குக் கண்ணகி பொருத்தமில்லை. அப்படியென்றால் கண்ணகியை வைத்திருக்க முடியாது. அவள் எளிய தெய்வம். சாதாரணவர்களின் தோழி. எனவே, கண்ணகியைத் தூக்கி அப்பால் வைத்து விட்டு. கண்ணகி இருந்த இடத்தில் ராஜராஜேஸ்வரியைக் கொண்டு வந்து குடியமர்த்தினார்கள். இது அநீதி. கோபக்காரக் கண்ணகி தன்னை இப்படி அநீதியாக அப்புறப்படுத்தும்போது கொதித்தாள்.**

நந்திக் கடலின்மேற்கு முகத்திலிருக்கும் வற்றாப்பளை வயல்வெளியில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த சிறுவர்கள் ஒரு மாலைப்பொழுதில் வெள்ளைச்சேலை உடுத்தி முதிய பெண்ணொருத்தியைக் கண்டிருக்கிறார்கள். அந்தப் பெண், அந்தச்சிறுவர்களிடம் பழம் வாங்கி உண்டதாகவும் பிறகு, தானே கண்ணகி என்று கூறிச் சென் றதாகவும் வன்னியில் பேசுவார்கள்........



இன்னொரு கதை இப்படி இருக்கிறது - இலங்கைக்கு வந்த கண்ணகி அப்படியே ஊர்கள் தோறும் யாத்திரை போயிருக் கிறார். அப்படிப் போகும்போது, பத் தாவதாக வந்தமர்ந்த இடம் பத்தாம்பள்ளை என்று ஆகியது. இதுதான் பிறகு வற்றாப்பளையாக மருவியது என்று.

வேறொன்று வேறுமாதிரி உள்ளது - ஒரு பெண் வந்து ஆடு மேய்க்கும் சிறுவர்களிடம் பால் கேட்டதாகவும் அவர்கள் பால் கொடுத்ததாகவும் அதன்பின் அந்தப் பெண், தன்னுடைய தலையில் ஏதோ இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். அதைப் பார்த்த சிறுவர்கள், அவை முட்கள் என்றிருக்கிறார்கள். அந்த முட்களை எடுத்து விடும்படி கிழவி கேட்க, பிள்ளைகள் தலையைப் பிரித்தனர். அப்பொழுது அங்கே ஏராளமான கண்கள் இருந்ததாம். அதைப் பார்த்துச் சிறுவர்கள் ஆச்சரியப்பட, கிழவி மறைந்ததாகவும் பின் ஒரு பூசகரின் கனவில் தோன்றி தனக்குப் பூசை செய்யப் பணித்ததாகவும் கோவில் மான்மியத்தில் உள்ளது. இந்த மாதிரிப் பல கதைகள் உள்ளன.

பண்டார[illegible]ன்னியன் காலத்தில் இந்தப் பகுதி முதலி[illegible]ார் முத்தரையர் என்பவருக்கும் நந்திஉடையார் என்பவருக்கும் ஏற்பட்ட பிணக்கில் இந்தக் கோவிலின்கரையிலிருந்த நெல் வயல்களுக்கு நீர் வருவதைத் தடுக்கவே முத்த ரையன் கட்டுக்கட்டி நீரை மேற்கே திருப்பியதாகவும், இந்த வேலையில் ஈடுபடுத தப்பட்ட பூதர்களுக்கு நிந்தமாக பூதன் வயல்பகுதியை வன்னியனிடம் பெற்று வழங்கியதாகவும் ஒரு குறிப்பு உண்டு.

போர்த்துக் கேயர் காலத்தே வற்றாப் பளை, முள்ளியவளை, முல்லைத்தீவு போன்ற இடங்களில் உள்ள மக்கள் தீவிர மத [illegible]ாற்றத்துக் குட்பட்டிருக்கிறார்கள். வற்றாப்பளையின் மகிமையை மறைக்கவே வற்றாப்பளையில் உள்ள பாட சாலை கூட றோமன் கத்தோலிக்கப் பாடசாலையாக ஆக்கப் பட்டது என்றும் சொல்லப் படுகிறது. இதைக்குறித்து மாறான கருத்துகளுமுண்டு.

கண்ணகி வழிபாடு கி.பி இரண்டாம் நூற்றாண்டில் கஜ பாகுமன்னன் காலத்தேதான் இலங்கைக்கு கொண்டு வரப் பட்டதாக வரலாற்றுத் தகவல்கள் சொல்கின்றன. கஜபாகு மன்னனுக்கும் பாண்டி நாட்டுக்கும் இருந்த தொடர்பின் வழியாகவே கண்ணகி வழிபாடு இலங்கைக்கு வந்திருக்கிறது. அதன்பின்னரே இலங்கையில் பத்தினித்தெய்வ வழிபாடு தொடங்கியது. சிங்களச் சமூகத்தில் கண்ணகி ஒரு முதன்மையான தெய்வம் என்பதற்கு சரித்திரச் சான்றுகள் உள்ளன.

மேலும் வன்னி, முத்துமாரி ஐயனார், வீரபத்திரர், நரசிங்கர், நாகதம்பிரான் என வனதேவதைகளின் வழிபாட்டையே முன்னர் கொண்டிருந்தது என்பதற்கு நாட்டார் கதைகளே சான்று சொல் கின்றன. இன்னும் இதைப்பற்றிய நாட்டார் பாடல்களும் நாட்டார் கதைகளும் ஏராளமாக உண்டு. ஆகவே இதுபோலப் பல கதைகள் வன்னியின் தெய்வ வழிபாடு பற்றி இருந்தாலும் கண்ணகிக்கே சிறப்பு.

வற்றாப்பளையில் நந்திக்கடலின் மேற்கு முகத்தில் ஒரு மகிழ மரத்தின் கீழே கண்ணகிக்குக் கோயில் இருந்தது. ஒரு சிறிய கோயில். இது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு. இப்பொழுது பெரிய கோயிலாகி விட்டது.

சனங்கள் பயபக்தியோடு கண்ணகியை வழிபட்டனர். கண்ணகி கோபக்காரி என்பது சனங்களின் நம்பிக்கை. மதுரையை எரித்தவள் அல்லவா! என்றாலும் தாய் பிள்ளை உறவைப்போல, பாட்டிக்கும் பேரக்குழந்தைகளுக்குமிடையிலான உருக்கத்தைப்போல தங்கள் அன்பையும் நெருக்கத்தையும் கண்ணகியிடம் காண்பித்தனர். அம்மாளாச்சி என்றும் கண்ணகி ஆச்சி என்றும் அத்தனை நெருக்கமாக கண்ணகியைக் கொண்டாடினார்கள். பொங்கல் என்றும் குளிர்த்தி என்றும் செய்து கண்ணகியை மகிழ்வித்தார்கள். அப்படியே தாங்களும் பொங்கலிலும் குளிர்த்தியிலும் மகிழ்ந்தனர்.

பங்குனியில் குளிர்த்தி. குளிர்த்திக்கு கண்ணகி கதையோ கோவலன் கூத்தோ நடக்கும். சனங்கள் விடிய விடிய அதைப் பார்ப்பார்கள். வைகாசி விசாகம் என்றால் பொங்கல்.

வைகாசி விசாகத்தில் சோளகம் வீசும். கோடை வெயிலாக இருந்தாலும் பாலாய் நிலவு பொழிந்து குளிரும் இர

➡



**கண்ணகியின் உக்கிரம் மதுரையை மட்டும் எரிக்கவில்லை. நந்திக்கடலிலும் நெருப்பெரிந்தது. ஆயிரம் ஆண்டு கள் போயினவாயினும் அருளுடை நெஞ்சில் நீதியின் செஞ்சோதி எரிந்து கொண்டேயிருக்கும். வைகாசி விசாகத்தில்தான் கௌதம சித்தார்த்தன் ஞானம் பெற்றான். வைகாசி விசாகத்தில்தான் வற்றாப்பளைக் கண்ணகிக்கும் பொங்கல். கண்ணகியின் பொங்கலில் ராஜராஜேஸ்வரி திளைக்கிறாள். கண்ணகி ஓரத்திலிருந்து சிரிக்கிறாள். சனங்கள் யாரையும் அறியவில்லை.**

வில், நந்திக்கடலின் முற்றத்தில் அம்ம னுக்குக்கு ஆயிரம் பானையில் பொங் கல். பொங்கலென்றால் சாதாரணபொங் கல் அல்ல. பெரும்பொங்கல். வன்னி முழுவதுக்குமான பொங்கல். என்றால் அது வன்னியின் பொங்கல்தான்.

வற்றாப்பளைப்பளை அம்மனுக்குப் பொங்கல் வருகிறது என்றால், பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்னரே வன்னியின் ஏனைய இடங்களிலிருந்து வண்டில் கட்டிக்கொண்டு வரத்தொடங்கி விடுவார்கள். அது மாட்டு வண்டில்களை அதிகமாக நம்பி வாழ்ந்த காலம். பொங்கலின்போது கோயிலின் பின்வெளி முழுதும் பனைகளின் கீழே நூற்றுக்கும் அதிகமான வண்டில்கள் நிற்கும். எருத்து மாடுகளின் சலங்கைச் சத்தம் அம்மனின் கொலுசும் தண்டையும் குலுங்குவதைப் போலிருக்கும். கோயிலுக்கு வரும் வண்டில்களில் வாழைக்குலைகள், பலாப்பழங்கள், அரிசி, தேங்காய், காய்கறிகள், சமைக்கும் பாத்திரங்கள், நீர் மொள்ளும் பட்டை, கத்தி, மண்வெட்டி, விளக்கு என்று தங்கும் ஏற்பாடு இருக்கு இருக் காதா பின்னே, இது வாரக்கணக்கான பயணம் அல்லவா. பொங்கல் முடிந் தாலும் திரும்பி ஊருக்குப் போக இரண்டோ மூன்றோ என நாட்கள் செல்லும் அல் லவா. ஆகவே ஒரு வாரத்துக்கான ஏற் பாடு கண்டிப்பாக இருந்தே ஆகவேணும்.

யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காம யாத்திரையில் கால்நடையாகப் போகிற வர்கள் கூட வற்றாப்பளைக்கு வந்தே தங்களின் யாத்திரையைத் தொடரு வார்கள். இது போக பொங்கலை அண் டிய நாளில் யாழ்ப்பாணத்தின் கிராமங்க ளிலிருந்து பத்து இருபது என்று இளை ஞர்கள் மிதிவண்டிகளில் ஊர்வலம் போவதைப்போல கோயிலுக்கு வருவார் கள். வழிநெடுகத் தண்ணீர்ப்பந்தலும் அன்னதானமும் கிடைக்கும். கொடைகள் கிடைக்கும் என்றால் வழிப் போக்கனுக்குக் கொண்டாட்டம் தானே. கால்நடை யாத்தி ரீகர்களுக்கும் சைக்கிளோட்டிகளுக்கும் தண்ணீர்ப்பந்தலும் அன்னதான ஏற்பாடு களும் நல்ல வாய்ப்பு. யாருக்கும் களை யில்லை. அம்மனின் பேரால் அனைத்தும் சிறப்பாக நடக்கும்.

வடக்கிலே வற்றாப்பளை அம்மனுக் குத் தனிச்சிறப்பு உண்டென்று சொன் னேன் அல்லவா! இங்கே ஏற்றப்படுகிற விளக்கு தண்ணீரில் நின்று எரிகிறது என்ற ஐதீகம்தான் அது. பொங்கலை யொட்டி நந்திக்கடலில் இருந்து எடுக் கப்படும் நீரில் ஒரு விளக்கூற்றப்படும். இந்த விளக்கு ஒரு வாரத்துக்கு அந்த நீரில் நின்றெரியும் என்பது சனங்களின் நம்பிக்கை. பொங்கல் நடப்பதற்கு முன்ன தாக பாக்குத்தெண்டல், தீர்த்தமெடுத்தல், விளக்கேற்றல் என்ற வைபவங்கள் நடக்கும். முள்ளியவளை யில் உள்ள காட்டா விநாயகர் கோயிலில் விளக்கு வைப்பார்கள். இதற்காக நந்திக்கடலில் தண்ணீர் எடுக்கும் சடங்கு நடக்கும். நந் திக்கடலில் இருந்து பானையில் எடுத்து வரும் தண்ணீரில் விளக்கேற்றி காட்டா விநாயகர் கோயிலில் வைப்பார்கள். விளக்கு வைத்த நாளில் இருந்து பொங் கல் நடக்கும் ஒரு கிழமையும் காட்டா விநாயகர் கோயிலில் கோவலன் கூத்து நடக்கும். வட்டக்களரிக் கூத்து. முல்லைத் தீவின் சிறப்பு என்று சொல்லக் கூடிய கலை இது. உடுக்கும் பாட்டும் ஆட்டமும் என்று வட்டக்களரிகளை கட்டியிருக்கும். இரவிரவாக நடக்கும் கூத்துக்காக அயல் ஊர்கள் எல்லாம் கூடிவிடும். எத்தனை மாற்றங்கள் வந்தாலும் இதில் ஒன்றும் மாற்றம் இல்லை. இந்தக் கூத்துக் காலத்தில், இந்தப் பொங்கல் காலத்தில் வெளியூர்களில் இருக்கின்ற முள்ளிய வளை, வற்றாப் பளை, தண்ணீரூற்றுப் பகுதி ஆட்கள் எல்லாம் வந்து விடுவார்கள். இந்தக் காலமே எல்லோரும் ஒன்று கூடும் காலம் என்பதைப்போல சொந்த பந்தங்களால் ஊரும் வாழ்வும் நிறைந்திருக்கும்.

பொங்கல் காலத்தில் - விளக்கு வைத்த நாளில் இருந்து யாரும் வெளியூர்க ளுக்குப்போவதில்லை. வேறு நிகழ்வுகள் செய்வதில்லை. வேட்டைக்குப் போவ தில்லை. கூத்தும் பொங்கலும் எல் லோருக்கும் வாழ்க்கை என்பதைப்போல அத தனை கரிசனையாக இருப்பார்கள். எல்லா வீடுகளிலும் விருந்தும் வரவேற்பும் கொண்டாட்டமும் என்று களைகட்டியி ருக்கும்.

பொங்கல் வைபவம் என்றால், மடை வைத்தல், தூளி பிடித்தல், கச்சுநேருதல், வளந்து நேருதல், பொங்குதல், அம் மானை ஆடல், உடுக்கடித்தல், சிந்து பாடுதல், குளிர்த்தி பாடுதல், பரிகலம் வழி விடுதல், பத்தஞானி பொங்கல் எனப் பல சங்கதிகள் நடைபெறும். இவற்றுக் காகப் பட்டு, உடுக்கு, முரசுப்பறை, வெள்ளிப்பிரம்பு, சிலம்பு, அம்மானைக்காய், வளந்து நூல், வெற்றிலை, பாக்கு, அரிசி என்று பல பொருட்கள் பயன்படுத்தப் படுகின்றன.

வைகாசியில்தான் வற்றாப்பளை, முள்ளியவளை, தண் ணீரூற்று, மாமூலை, குமுழமுனைக் கிராமங்களில் பலாப் பழச் சீசன். இந்தப் பகுதிப் பலாப்பழத்திற்குத் தனிச் சுவை யுண்டு. பொங்கலுக்காக வருகின்றவர்கள் தங்கி நிற்கும் காலத்தில் தா ாளமாகப் பலாப்பழங்களைச் சா ுடுவார்கள். பொங்கல் முடிந்து திரும்பும்போது ஆளாளுக்கு வேண்டிய பழங்களை எடுத்தும்போவார்கள். பொங்கல் முடிந்து திரும்பும் வண்டி, வாகனங்களில் பலாப்பழங்கள் அம்பாராமாக இருக்கும். ➡

14 ம் பக்கத் தொடர்ச்சி

## கலாசாரம்...

இப்ப உங்கட பிள்ளையை மடியில தூக்கி வச்சிருங்க பாப்பம். ஏண்டா ஒரு பிள்ளையும் தாயின்ர மடியில இராது

பின்ன முள்ளுப் பத்தையில பிள்ளை இருக்குமே.. உந்த மினுங்கிற ஜமிக்கி கல்லு கண்ணாடி எண்டு சேலையில கொஞ்சம் முள்ளோ கொட்டி....ச்ச... கட்டியிருக்கு... சர்வதேச மகளிர்தினம். பெண்களை மகிழ்விக்க விளையாட்டுப் போட்டி நடக்குது. ஆனா விளையாடுறவை அந்த நேரம் என்ன உடுப்புப் போட்டாலும் பரவாயில்லை. விளையாடி முடிய சாரி கட்டிப் போட வேணும். எண்டு மாதர் சங்கங்கள் சேர்ந்து ஒரு முடிவு எடுத்திருக்கினம்.

இனி விளையாட்டிலயும் பொம்பிளையளின்ர பாரம்பரியத்தை காப்பாற்ற தேங்காய் துரவ, ஊசி நூால் கோக்க கயிறு இழுக்க.....ங.... எல்லாம் அரைநேரத்தோட முடிச்சிட்டு வீட்ட போகோணுமாம். என்ன....? அப்ப

"காலம சமைச்சு வைச்சிட்டுத் தான் வந்த நாங்கள் போய் போட்டுக் குடுத்தாத்தானே. வீட்டில உள்ளவை சாப்பிட""மகளிர் தினத்திற்காக இண்டைக்கு நாலு மணிக்கே எழும்பி சமைக்கத் துவங்கினன்."

"பெண் விடுதலையோ.... இப்ப ஆரோ அவையப் பிடிக்கே வைச்சிருக்கினம். பொறுங்க கூட்டம் துவங்கீட்டுது." "மாட்டைஅடக்கி வசக்கி தொழுவினில் மாட்டும் வழக்கத்தை கொண்டு வந்ததே. வீட்டினில் எம்மிடம்......."

வண்டி போனாலும் பலாப்பழ வாசனை போகாமல் வழி நெடுக நிற்கும்.

வற்றாப்பளைக் கண்ணகியைப்பற்றிச் சொல்ல வந்து, பலாப் பழத்தைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கண்ணகியை மாற்றி அங்கே ராஜராஜேஸ்வரியை வைத்திருப்பதைப்போல இந்தக் கதையும் கண்ணகியை விட்டுப்பலாப்பழத்தில் வந்து நிற்கிறது. உங்களுக்குத் தெரியுமா? வற்றாப்பளையில் இப்பொழுது கண்ணகி இல்லை.

நாமெல்லாம் ஆச்சி என்றும் தாயே என்றும் அம்மா என்றும் அன்போடு அழைத்த, நாங்கள் உரிமையோடு கொண்டாடிய கண்ணகி அங்கே இல்லை.

மகிழ மரத்தின் கீழே, ஒரு சின்னஞ்சிறிய கொட்டகையில் தன்னந் தனியனாக இருந்த கண்ணகியை விரட்டி விட்டார்கள்.

மகிழ மரத்தின் கீழிருக்கும்போது, தன்னந்தனியனாக இருக்கும்போது, அந்தச் சின்னஞ்சிறிய கொட்டகையில் இருக்கும்போது கண்ணகி ஆச்சிக்கும் எங்களுக்கும் நெருக்கம் இருந்தது. நல்ல உறவிருந்தது. நாங்களே போய்ப் பொங்குவோம். நாங்களே படைப்போம். ஆச்சிக்குப் பக்கத்தில் நின்று பேசுவோம்.

எங்களுக்கும் கண்ணகிக்கும் அப்படியொரு நெருக்கமிருந்தது. யாரும் போய் கண்ணகியோடு உறவாடலாம். நேர்த்திக்கடன்களை முடிக்கலாம் என்றிருந்த நிலையை பெரிய கோயிலைக்கட்ட வேணும் என்ற பேராசையோடு மாற்றி விட்டார்கள். கோபுரங்கள், மண்டபங்கள், வாகனசாலைகள் என்று பெரிய கோயிலை விஸ்தாரம் பண்ண, கண்ணகிக்குப் பதிலாக ராஜராஜேஸ்வரி வந்து குடிகொண்டாள்.

கண்ணகிக்கு மந்திர உச்சாடனங்கள் இல்லை. பிரதி'டை கிடையாது. ராஜகோபுரம் இல்லை. கண்ணகி சிறு தெய்வம். அவதார புரு'யை. பெரிய கோயிலாக, ராஜகோபுரத்தோடு அதைக் கட்டவேணுமென்றால், அதற்குக் கண்ணகி பொருத்த மில்லை. அப்படியென்றால் கண்ணகியை வைத்திருக்க முடியாது. அவள் எளிய தெய்வம். சாதாரணவர்களின் தோழி. எனவே, கண்ணகியைத் தூக்கி அப்பால் வைத்து விட்டு, கண்ணகி இருந்த இடத்தில் ராஜராஜேஸ்வரியைக் கொண்டு வந்து குடியமர்த்தினார்கள். இது அநீதி. கோபக்காரக் கண்ணகி தன்னை இப்படி அநீதியாக அப்புறப்படுத்தும்போது கொதித்தாள்.

அதன் பயனே, 02.11.1987 அன்று இந்திய இராணு வத்தினரின் எறிகணைகளை வீச்சில் ஆலயத்தில் தங்கி யிருந்த 8 பேர் மணரமடைந்தனர்.

பிறகு, பொங்கல் தினமான 18.05.1992 அன்று ஆலய வளாகத்தில் இலங்கை இராணுவத்தினரின் எறிகணைகளை வீச்சில் 23 அப்பாவிப் பொதுமக்கள் மரணமாயினர்.

இது போன்று 1996ஆம் ஆண்டும் ஆலயமும் சூழலும் பலத்த சேதத்துக்குள்ளாயின. ஆலயக் கூரைகள், இராஜகோபுரம், மூலஸ்தானத்தூபி, மண்டபங்கள், கலையரங்கு, மடங்கள், குருக்கள் வீடு, முகாமையாளர் வீடு, நோற்பாளர் தங்குமிடம் என்பன சேதமாகின. ஆலயத்தின் மஞ்சமும், வாகனங்களும் முற்றாக அழிந்தன.

கண்ணகி ஆங்காரியல்லவா. அவளின் சினம் அப்படியா னது. கோபுரம் வெடித்தது. நான்கைந்து ஆண்டுகள் சீரான பொங்கல் இல்லை. எல்லாமே மாறின. பிறகு மெல்ல மெல்ல ராஜராஜேஸ்வரியைக் கொண்டாடத்தொடங்கினார்கள் எல்லோ ரும். இப்பொழுது வற்றாப்பளையில் ராஜராஜேஸ்வரிக்குத் திருவிழா நடக்கிறது.

தினப்பூசை செய்கிறார்கள். மந்திர உச்சாடனம் கேட்கிறது. கோயில் பெருத்து கோபுரம் வளர்ந்து வான் நோக்கி வளர்கிறது. சனங்கள் வந்து போகிறார்கள். வருகின்றவர்கள் எல்லாம் கண்ணகி என்று ராஜராஜேஸ் வரியைக் கும்பிடுகிறார்கள். அவர்களுக்குத் தெரியாது, அங்கே இருப்பது யார் என்று. எந்தத் தெய்வம் என்று.

கண்ணகியின் வரலாற்றை, வற்றாப்பளை அம்மாளாச்சியின் கதையை கோயிலின் பிரகாரத்தில் எழுதி வைத்திருக் கிறார்கள். அழகான ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளன.

ஆனால், கண்ணகி அங்கே இல்லை என்று எவருக்கும் தெரியாது. பெரிய கோயிலின் ஓரத்தில் சின்னதாக அமைக்கப்பட்டுள்ள சிறிய கொட்டகையில் கண்ணகி இருத்தப்பட்டிருக்கிறாள். ஆதி நாயகி இப்பொழுது அகதித் தெய்வமாகி விட்டாள்.

சொந்த மையத்திலேயே விலக்கப்பட்ட நாயகியானாள்! பாண்டி நாட்டில்தான் அவளுக்கு நீதி மறுக்கப்பட்டதென்றில்லை. கோவலன் காலத்தில்தான் அவள் சோதனைகளைச் சந்தித் தாள் என்றுமில்லை. இன்னும் கண்ணகிக்குச் சோதனைதான். அவள் பெண்ணல்லவா! பெண் தெய்வம் அல்லவா!

கண்ணகியின் உக்கிரம் மதுரையை மட்டும் எரிக்க வில்லை. நந்திக்கடலிலும் நெருப்பெரிந்தது. ஆயிரம் ஆண்டு கள் போயினவாயினும் அருளுடை நெஞ்சில் நீதியின் செஞ்சோதி எரிந்து கொண்டேயிருக்கும்.

நந்திக்கடல்....

வைகாசி விசாகத்தில்தான் கௌதம சித்தார்த்தன் ஞானம் பெற்றான். வைகாசி விசாகத்தில்தான் வற்றாப்பளைக் கண்ணகிக்கும் பொங்கல். கண்ணகியின் பொங்கலில் ராஜராஜேஸ்வரி திளைக்கிறாள்.

கண்ணகி ஓரத்திலிருந்து சிரிக்கிறாள். சனங்கள் யாரையும் அறியவில்லை.

பாலாய் நிலவு பொழிகிறது...

✸



# விவசாயபீடம் கிளிநொச்சிக்கு வருமா?

விவசாயபீடத்தை கிளிநொச்சிக்குக் கொண்டு வருவதற்கு மனதளவில் பெரும்பாலானவர்களுக்கு விருப்பமே இல்லை. இதை வெளியே சொல்ல முடியாது. இதற்காகச் சில சாட்டுப்போக்குகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்கிறார்கள் மாணவர்கள். சற்றுச் சூடாக. எல்லாவற்றுக்கும் அப்பால் எப்போது நாங்கள் புதிய வளாகத்தில் படிக்கப் போகிறோம் என்ற ஆவலோடு காத்திருக்கின்றனர் இந்த மாணவர்கள்.

சோபிதா தேவராஜா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் கிளிநொச்சிக்கு வருமா? என்று எல்லோரும்தான் கேட்கிறார்கள். இந்தக் கேள்விக்கு வயசாகிறதே தவிர, பதில்தான் கிடைப்பதாகத் தெரியவில்லை. இருபத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பீடம் கிளிநொச்சியில் இயங்கியது. பேராசிரியர் அ. துரைராஜா துணைவேந்தராகப் பதவியில் இருந்தபோது 1990 டிசெம்பர் 03 ஆம் திகதி இந்த விவசாயபீடத்தை ஆரம்பித்துக் கிளிநொச்சியில் இயங்கவைத்தார். ஆறு ஆண்டுகள் கிளிநொச்சி இரணைமடுச் சந்திக்கு அண்மையாக உள்ள பட்டுப்பூச்சித் தோட்டத்துக்கு அருகில் இந்த வளாகம் இயங்கியது.

இன்னொரு பக்கத்திலிருந்த தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கட்டிடத்தொகுதியில் மாணவர்களுக்கான விடுதி இருந்தது. சிறிய மண்டபங்களில் விரிவுரைகள் நடந்தன. விவசாய மாவட்டமாகக் கிளிநொச்சி இருந்ததால் மாணவர்களின் ஆய்வுக்கு பலவாய்ப்புகளும் வசதிகளும் கிடைத்தன.

கிளிநொச்சி நகரத்தின் மீதான இராணுவ நடவடிக்கையை அடுத்து 1990 லிருந்து ஆறு ஆண்டுகள் நல்ல முறையில் இயங்கிய விவசாயபீடம் இடம்பெயர்ந்தது. இடம்பெயர்ந்த பீடத்தை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரிப்பட்டமுறிப்பில் தற்காலிக நிலையில் சில மாதங்கள் வைத்திருந்தார்கள். பிறகு யுத்தம் தீவிரமாக, யாழ்ப்பாணத்துக்கு மாற்றி, அங்கே இயங்கத் தொடங்கியது பீடம். ஆனால், மீண்டும் கிளிநொச்சிக்கே திரும்பிச் செல்ல வேண்டுமென்பதால் தற்காலிக நிலையில் அதை வைத்திருந்தனர். இதனால் பீடத்துக்கான கட்டிடங்கள் புதிதாக நிர்மாணிக்கப்படவில்லை. புதிய போதிய வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லை. தனியார் வீடுகள் சிலவற்றை வாடகைக்கு எடுத்து, அந்த வீடுகளில் விவசாய பீடத்தின் நிர்வாகப் பிரிவும் விரிவுரைகளும் நடந்துவந்தன. இந்த வளங்களும் வசதிகளும் மாணவர்களுக்குப் போதவில்லை. என்றாலும் நாட்டு நிலைமையைக் கருத்திற் கொண்டு யுத்தம் ஓயும் வரை தங்களை ஒருவாறு சமாதானப்படுத்திக் கொண்டு படித்தனர்.

ஆனால், யுத்தம் முடிந்த பிறகு கிளிநொச்சி அறிவியல்நகர்ப் பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம், விவசாயபீடம் ஆகியவற்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்தன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வசந்தி அரசரத்தினத்தின் தகவலின்படி இந்த இரண்டு பீடங்களையும் அமைப்பதற்காக 570 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான நடவடிக்கையை பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் மேற்கொண்டிருந்தனர். இந்த வளாகப் பகுதியில் ஏற்கனவே இருந்த கட்டிடங்களைப் புனரமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. வளாகத்தை ஒழுங்கமைக்கும் வகையில் மாவட்டம் தழுவிய சிரமதானப் பணியை கிளிநொச்சி மாவட்ட மக்களும், மக்கள் அமைப்புகளும் அரச திணைக்களம் ஆகியன செய்தன.

இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா மற்றும் இந்தியத் தூதரக அதிகாரிகள், உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க உள்ளிட்ட பலர் இந்த வளாகத்துக்கு விஜயம் செய்து வேலைகளை அவதானித்து மேலதிக நிதி ஒதுக்கீட்டையும் செய்ய ஏற்பாடு செய்திருந்தனர்.

இவையெல்லாவற்றின் விளைவாகவும் இப்பொழுது விவசாய பீடத்தின் கட்டிடத் தொகுதிகளின் வேலைகள் முழுமைய

டைந்துவருகின்றன. மாணவர்கள் தங்குவதற்கான விடுதிகள், குடிநீர் விநியோகம், விரிவுரையாளர் விடுதிகள், பாதைகள் உள்ளிட்ட உட்கட்டுமான வேலைகள் அநேகமாகப் பூர்த்தியடையும் நிலைக்கு வந்துள்ளது. ஏற்கனவே பலதடவை நடந்த கூட்டங்களின் தீர்மானப்படி விவசாய பீடம் குறைந்த பட்சம் இந்த ஆண்டின் தொடக்கத்தில் கிளிநொச்சி வளாகத்தில் நடந்திருக்க வேண்டும். அதற்கு முன்னர் கிளிநொச்சியில் விவசாயபீடத்தை இயங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக கிளிநொச்சிப் பகுதியில் பொருத்தமான இடங்களைத் தேர்வு செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது குறித்த பத்திரிகை விளம்பரங்கள் கூட வந்திருந்தன. ஆனால், என்னதான் நடந்தாலும் நாங்கள் யாழ்ப்பாணத்தை விட்டு இதுவரையிலும் விவசாயபீடம் நகரவில்லை.

இதுபற்றி அறிவதற்காக நாம் முனைந்தபோது, வளாக வேலைகள் கிளிநொச்சியில் நடந்தாலும் திட்ட மிடலில் நடந்துள்ள குறைபாட்டின் காரணமாக தண்ணீர் விநியோகத்தைப் பற்றிச் சரியாகச் சிந்திக்கத் தவறியதால் இப்பொழுதே காலம் பிந்தியே அதற்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. எனவே இந்தவேலைகள் முடிந்தபிறகே மாணவர்களை இங்கே அழைத்துவர முடியும். அத்துடன் இன்னமும் மாணவர் விடுதிகளின் வேலைகள் முழுமையடையவில்லை. இதுவும் தாமதத்திற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. போதாக்குறைக்கு இப்பொழுதுதான் (2014 மே இறுதி வாரம்) உள்ளக வீதிகளின் வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த வேலைகளுக்கான தாமதம் ஏன் என்று புரியவில்லை என்கிறார் மூத்த விரிவுரையாளர் ஒருவர்.

இதை இன்னொரு விரிவுரையாளர் மேலும் விளக்கமளிக்கும் போது இதெல்லாம் திட்டமிடற் குறைபாடுகள். பல்கலைக்கழகத்தின் பொறியியற்துறை யினரின் அசமந்தப்போக்கினால்தான் இந்த மாதிரியான தாமதங்களும் தேவையற்ற செலவீனங்களும் ஏற்படுகின்றன. இதைச் சீர்ப்படுத்து வதற்கு பொறுப்பானவர்கள் எந்த மாதிரியான நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை என்பதே கவலையளிக்கிறது என்கிறார்.

விவசாயபீடத்தை கிளிநொச்சிக்குக் கொண்டுவருவதற்கு மனதளவில் பெரும்பாலானவர்களுக்கு விருப்பமே இல்லை. இதைவெளியே சொல்ல முடியாது. இதற்காகச் சில சாட்டுப் போக்குகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்கிறார்கள் மாணவர்கள் சற்றுச் சூடாக. எல்லாவற்றுக்கும் அப்பால் எப்போது நாங்கள் புதிய வளாகத்தில் படிக்கப் போகிறோம் என்ற ஆவலோடு காத்திருக்கின்றனர் மாணவர்கள். இதற்காக மாணவர்களிற் சிலர் தனியாக வந்து வளாகத்தைப் பார்வையிட்டுச் செல்கின்றனர். எப்பொழுது இந்த வேலைகள் முடியும்? தாங்கள் எப்பொழுது இங்கே வரலாம் என்பதே அவர்களுடைய ஏக்கம்? இருக்காதா பின்னே, அங்கே யாழ்ப்பாணத்தில் வீடுகளின் அறைகளில் நெரிசலின் மத்தியில் எத்தனை காலத்துக்குத்தான் தங்களை ஒடுக்கிக் கொண்டு அவர்களால் படிக்க முடியும். எங்களை ஒடுக்கி, ஒறுத்துத்தான் இதுநாள்வரை இருந்து வருகிறோம். இனியும் பொறுக்க முடியாது என்கிறார் ஒருமாணவி. 1997 லிருந்து இந்தக் கட்டுரையை எழுதும் 2014 மே மாதத்தின் இறுதி வரை இதுதான் நிலைமை. அப்படியென்றால், எப்போது கிளிநொச்சிக்கு வரும் விவசாயபீடம்?

இதற்கான பதிலை உயர் கல்வி அமைச்சரிடம் கேட்பதா? அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரிடம் கேட்பதா? அல்லது விவசாய பீடாதிபதியிடம் கேட்பதா? அல்லது யாராவது சோதிடர்களிடம் கேட்பதா?

> **மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் வீடுகளின் அறைகளில் நெரிசலின் மத்தியில் எத்தனை காலத்துக்குத்தான் தங்களை ஒடுக்கிக் கொண்டு அவர்களால் படிக்க முடியும். 'எங்களை ஒடுக்கி, ஒறுத்துத்தான் இதுநாள்வரை இருந்து வருகிறோம். இனியும் பொறுக்க முடியாது' என்கிறார் ஒரு மாணவி. 1997 லிருந்து இந்தக் கட்டுரையை எழுதும் 2014 மே மாதத்தின் இறுதிவரை இதுதான் நிலைமை. அப்படியென்றால், எப்போது கிளிநொச்சிக்கு வரும் விவசாயபீடம்?**





# இரணைமடுக்குளத்தின் எதிர்காலம்

## முடிவற்ற சர்ச்சையும் சவால்களும்

**உலகத்தில்** இனி வரப்போகிற யுத்தம் தண்ணீருக்காகத்தான் இருக்கும் என்று சொல்கிறார்கள். அந்த யுத்தம் எங்கே, எப்போது ஆரம்பமாகுமோ தெரியாது. ஆனால், இப்பொழுது உள்ளூர் மட்டத்தில் - கிளிநொச்சி - இரணைமடுவில் தண்ணீருக்கான போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே நடந்த யுத்தத்தினால் இரணைமடு பாதிக்கப்பட்டது. ஒரு காலம். இப்பொழுதோ தண்ணீருக்கான போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அதைப்போல கடந்த ஆண்டு நீர் நிரம்பித் தளம்பிய இரணைமடுக் குளம் இந்த ஆண்டு காய்ந்து போய்க் கிடக்கிறது. எதிர்பாராத வரட்சி எல்லோரையும் திகைப்படைய வைத்திருக்கிறது. இந்த வரட்சிதான் எல்லாப் பிரச்சினைகளுக்கும் எண்ணெய் வார்க்கிறது.

1902 இல் ஆரம்பிக்கப்பட்ட இரணைமடு வடக்கின் பெரிய நீர்த்தேக்கமாகும். இந்த நீர்த் தேக்கத்தை ஆதாரமாகக் கொண்டே கிளிநொச்சி நகரும் அதனையண்டிய பிரதேசங்களும் உருவாகின. கனகராஜன் ஆற்றை வழிமறித்துக் கட்டப்பட்ட இந்த நீர்த்தேக்கத்தின் மூலமாக கிளிநொச்சியில் பெரும்போகம், சிறுபோகம் என்று இரண்டு போக நெற்செய்கைகள் பண்ணப்படுகின்றன. பெரும் போகத்தில் சராசரியாக ஏக்கரில் பயிரிடப் படுகிறது. சிறு போகத்தில் சராசரியாக ஏக்கர் நெற்செய்கை பண்ணப்படுகிறது.

நூற்றாண்டுகளைக் கடந்த இந்தக்குளத்தின் அணைக் கட்டு கடந்த 30 ஆண்டுகளாகப் புனரமைக்கப் படவில்லை. இதனால், குளத்தின் நீர்க்கொள்ளளவு குறைக்கப்பட்டே நீர் தேக்கப்படுகிறது. மிஞ்சும் நீர் வான் பாய்கிறது. அதையும் விட அதிகமான நீர் வரும்போது குளம் திறந்து விடப்படுகிறது. இது ஒவ்வொரு ஆண்டும் மழைப்பருவ காலத்தில் நடக்கம் நிகழ்ச்சி. நீரின் கொள்ளளவை அதிகரிக்க வேண்டும் என்றால் குளத்தின் அணைக்கட்டைப் பலப்படுத்திப் புனரமைப்புச் செய்ய வேணும். அப்படிச் செய்தால் இரணைமடுக் குளம் இன்னொரு பரிமாணத்தைப் பெறும். விவசாயிகளின் வாழ்க்கை மட்டுமல்ல, இரணைமடுவை மைய மாகக் கொண்ட கிளிநொச்சி மக்களின் வாழ்க்கையிலும் செழிப்

கமக்காரன்

சிவசம்பு நவரத்தினம்

புண்டாகும். 'வரப்புயர, நீருயரும். நீருயர நெல்லுயரும். நெல்லுயரக் கோனுயரும். கோனுயரக் குடிகள் உயரும்' என்று தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள். அப்படி யென்றால் இரணைமடுவை எப்படிப் புனரமைப்புச் செய்வது என்பதே இன்றைய கேள்வி.

இதற்கு ஒரு திட்டத்தை கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன் சிலர் பரிந்துரைத்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரையின்படி, இந்தக் குளத்தைப் புனரமைப்புச் செய்வதற்கான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்க முன்வந்தது. ஆனால், அது தனியே இந்தக் குளத்தைப் புனரமைப்புச் செய்வதற்கான நிதியாக இருக்க மாட்டாது. யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள குடி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் திட்டத்தை குளம் புனரமைப்புச் செய்யும் திட்டத்துடன் இணைக்க வேண்டும். அப்படியென்றால்தான் நிதியை வழங்க முடியும் என்றது ஏடிபி. இந்தத் திட்டத்துக்கு புலிகளும் பச்சை விளக்கைக் காட்டினார்கள். விவசாயிகள் தரப்பிலிருந்தும் உடன்படிக்கை கேட்கப்பட்டபோது, குளத்தைப் புனரமைப்புச் செய்து அணைக்கட்டை மேலும் உயர்த்த வேண்டும். அப்படி உயர்த்தும்போது கூடுதலாகச் சேமிக்கப்படும் தண்ணீரை மட்டுமே தரமுடியும் என்ற நிபந்தனையை விவசாயிகள் முன்வைத்தனர். கூடவே, குளத்தின் கீழுள்ள வாய்க்கால்கள், விவசாயத் தெருக்கள், பாலங்கள் உள்ளிட்ட வேலைகளையும் செய்ய வேண்டும் என்று அழுத்தினர்.

இதற்கெல்லாம் சம்மதித்து ஒரு உடன்படிக்கையும் எட்டப்பட்டது. ஆனாலும் அது யுத்தகாலம் என்பதால் திட்டமிட்டவாறு எதையும் செய்ய முடியவில்லை. திட்டம் கிடப்பிற்குப் போய்விட்டது. இதேவேளை இந்தத் திட்டத்தில் இரண்டு பங்காளர்கள். ஒருதரப்பு நீர்ப்பாசனத் திணைக்களத்தினர். இன்னொரு தரப்பினர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர்.

யுத்தம் முடிந்த பிறகு இந்தத் திட்டத்தை என்ன செய்யலாம் என்று மீண்டும் எடுத்து மேசையில் வைத்தார்கள். இப்பொழுது விவசாயிகள் தரப்பிலிருந்து கொஞ்சம் கூடுதலான கோரிக்கைகள் எழுந்தன. குளத்தின் நீரை மேலதிக தேவைகளுக்காகப் பயன்படுத்துவதாக இருந்தால் விவசாயிகளுக்கான நன்மைகள் சார்ந்து யோசிக்க வேண்டும். அதன்படி மேலும் சில திட்டங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற மென் நிபந்தனைகள் விவசாயிகளாலும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினாலும் முன்னிறுத்தப் பட்டன. இது மெல்ல மெல்ல விவாதப்பொருளாக மாறியது.

இப்படியே இருந்த இந்தத் திட்டமும் இதைப்பற்றிய உரையாடல்களும் வடக்கு மாகாணசபைத் தேர்தலை அடுத்து அரசியலாகி விட்டது.

நீர்ப்பாசனத் திணைக்களம் மாகாண சபையின் நிர்வாகத்துக்குக் கீழே வருகிறது. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை மத்திய அரசின் கீழே இயங்குகிறது. எனவே அரசியலில் எதிரும் புதிருமாக இருப்பதைப்போல நிர்வாக நடைமுறையிலும் எதிரும் புதிருமாகவே இரண்டு அலகுகளும் உள்ளன போலத்தெரிகிறது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் குடிநீர்ப்பிரச்சினை ஒரு தீராப்பிரச்சினையாக வளர்ந்து கொண்டிருக்கிறது. தமிழர்கள் எந்தப் பிரச்சினையையும் தீர்க்காமல் அதற்கு உரமிட்டு வளர்ப்பதைப்போல இந்தப் பிரச்சினையையும் தீர்க்காமல் வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். நல்ல தண்ணீரைப் பெற்றுக்கொள்வது யாழ்ப்பாணத்தின் கரையோரங்களிலும் வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவுப்பகுதிகளிலும் பெரிய சவால். அங்கே நல்ல தண்ணீரைத் தேடிப் பெறுவது நாளாந்தப் பிரச்சினை. இவ்வாறு செய்யப்பட்டால் அதாவது விவசாயிகளின் தேவைகள் நிறை வேற்றப்பட்டால்தான் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு ஒப்புதலளிக்க முடியும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

தீவுகளில் இது இன்னும் நெருக்கடி நிறைந்த சவால். இதைத் தவிர்த்து, யாழ்ப்பாணத்தின் உள்நிலப் பகுதிகளிலும் குடிநீர் ஒரு பிரச்சினைக்குரிய சங்கதியாகவே மாறி வந்து கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது. இந்த நூற்றாண்டில் அதிகரித்திருக்கும் நீர்ப்பயன்பாடும் குடிப்பரம்பலும் விவசாயச் செய்கை முறையும் யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரைச் சவாலுக்குரிய ஒன்றாக மாற்றியுள்ளன. எனவே இதற்கு நிவாரணமாக நல்ல குடிநீரை வழங்க வேண்டும் என்று சொல்லி வருகிறார்கள்.

இதற்காகவே யாழ்ப்பாணம் - கிளிநொச்சி குடிநீர்த்திட்டத்தை ஆரம்பித்து அதற்காக இரணைமடு அபிவிருத்தித் திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியில் அரசாங்கம் முன்னெடுக்க வந்தது.

இதன்படியாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் குடிநீர்த் தேவைகளுக்காக இரணைமடுக் குளத்திலிருந்து தண்ணீரை எடுக்க வேண்டும் என்று நீர் வடிகாலமைப்புச் சபை கேட்கிறது. இதற்காக குளத்தைப் புனரமைப்புச் செய்வதற்காகவும் குளத்தின் கீழ் உள்ள வாய்க்கால்கள், வடிகாலமைப்புகள், பாலங்கள், வீதிகள் போன்றவற்றை



நிர்மாணிப்பதற்காகவும் 2,300 கோடி ரூபாய்கள் செலவழிக்கப்படும் என்கிறது நீர் வழங்கல் வடிகால மைப்புச் சபை. இதன் மூலமாக குளத்தைப் புனரமைப்புச் செய்து, அணைக்கட்டை உயர்த்திப் பலப்படுத்தி, விரிவாக்கம் செய்வதன் மூலம் ஒவ்வொரு மழைக்காலத்திலும் குளத்தில் தேக்க முடியாமல் பெருக் கெடுத்துப் பாயும் தண்ணீரைக் கூடுதலாகச் சேமிக்க முடியும். அப்படிச் சேமிக்கின்ற நீரில் .... வீதத்தை மட்டுமே யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் குடி நீர்த் தேவைக்காக எடுக்கவுள்ளோம் என்கின்றனர் நீர்வழங்கல் வடிகாலமை ப்புச் சபையினர்.

ஆனால், இதற்கு விவசாயிகள் மத்தியில் இரண்டு பட்ட கருத்துகள் உண்டு. ஒரு தரப்பினர் இந்தத் திட்டத்தை மறுக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் குளமும் வாய்க்கால்களும் புன ரமைப்புச் செய்யப்பட வேண்டும். ஆனால், அது விவசாயத் தேவையை மட்டும் கொண்டதாகவே இருக்க வேணும். வேண்டுமானால் கிளிநொச்சி நகரப்பகுதிக்கான குடிநீருக்கு இரணைமடுவின் நீரைப் பயன்படுத்த லாம். அதற்கு அப்பால் யாழ்ப்பாணத்துக்குத் தண்ணீரைக் கொண்டு போவதற்கு தாங்கள் சம்மதிக்க மாட்டோம். ஏனென்றால், இது விவசாயிகளின் குளம். விவசாயத் தேவைகளுக்காகவே கட்டப்பட்ட குளம். இந்தக் குளத்தை நம்பியே 3,000 இற்கும் அதிகமான விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய வயிற்றில் அடிக்கிற காரியத்தைப் பார்க்க அனுமதிக்க முடியாது. விவசாயத் தேவைக ளுக்கே தண்ணீர் போதாமலிருக்கும் போது நாங்கள் எப்படி மேலதிகமாக யாழ்ப்பாணத்தின் குடிநீருக்குத் தானம் பண்ண முடியும்? என்று கேட்கிறார்கள். தங்களுடைய இந்த நிலைப்பாட்டையும் நியாயத்தையும் சொல்லி சிறிய அளவில் மட்டுப்படு த்தப்பட்ட போராட்டங்களை இதில் சிலர் நடத்தி வருகின்றனர்.

இன்னொரு தரப்பினர், இதை வேறு விதமாகப் பார்க்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில், இந்தக் குளத்தைப் புனரமைப்புச் செய்வது அவசியம். அத்தோடு மேலதிகமாக குளத்தை அண்மித்த பகுதிகளையும் குளத்தின் கீழான பகுதிகளையும் முழுமையான அளவில் விருத்தியாக்கம் செய்து கொள்ளலாம். கூடவே குளத்தின் அணைக்கட்டை உயர்த்தி மேலதிக நீரைத் தேக்கலாம். அப்படி மேலதிக நீரை குளத்தினுள் அடக்கும்போது ஆண்டுதோறும் வெளியேற்றப்படும் நீரையும் சேமிக்க முடியும். கூடவே, குளத்தின் கீழான பரந்தன், பன்னங்கண்டி, கண்டாவளை, முரசுமோட்டை, ஊரியான் போன்ற பகுதிகளில் ஏற்படும் வெள்ளப் பெருக்கு அனர்த்தத்தையும் கட்டுப் படுத்தலாம். இதற்கெல்லாம் ஏடிபியின் நிதிப்பங்களிப்பும் அரசாங்கத்தின் கரிசனையும் ஒரு நல்ல வாய்ப்பு என்று எண்ணுகிறார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, விவ சாயிகளின் உச்சபட்சத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் இவர்கள் சிந்திக்கிறார்கள்.

இந்தத் திட்டத்தின் இன்னொரு பங்காளிகள் நீர்ப்பாசனத் திணைக் களத்தினர். அவர்கள்தான் இது தொடர்பாக விவசாயிகளுக்கும் பிறருக்கும் உத்தரவாதத்தைக் கொடுக்க முடியும். நீர் முகாமைத் துவம் மற்றும் நீர்ப்பங்கீடு, நீர் சேகரிப்பு உட்படக் குளத்தின் அத்தனை பொறுப்புகளையும் அவர்களே கவனிப்பதால் அவர்க ளுடைய பதில் முக்கியமாக இருக்கிறது. அதாவது, இந்த இரணைமடு – யாழ்ப்பாணம், கிளிநொச்சி குடிநீர்த்திட்டம் தொடர்பாக என்ன மாதிரியான பதிலை நீர்ப்பாசனத் திணைக்களம் சொல்கிறது என்று இதுவரை எவருக்கும் தெரியவில்லை. ஆண்டு தோறும் கணக்கிடப்படும் புள்ளிவிபர மதிப்பீட்டில் சராசரியாக இந்தக் குளத்தில் மேலதிகமாக எத்தனை மீற்றர் நீரைத் தேக்க முடியும்? அதன் மூலம் எத்தனை ஏக்கர் நிலப் பகுதியில் விவசாயச் செய்கை செய்ய முடியும்? எவ்வளவு நீரை குடிநீர்த்தேவைக்கு வழங்க முடியும்? இதனால் விவசாயிகளுக்கு ஏதாவது பாதிப்புகள் நிகழுமா? அப்படி நிகழு மென்றால் அதன் வலு எப்படியானது? இதற்கெல்லாம் இதுவரை பதில்கள் இல்லை.

குளத்தின் பராமரிப்பும் கட்டமைப்பும் நீர் வழங்கலும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழிருப்பதால் இதைக் குறித்த அறிவும் மதிப்பீடும் அவர்கள் மையத்திலேயே உண்டு. ஆகவே இந்த முடிச்சை அவிழ்க்க வேண்டி பொறுப்பு மற்றும் உத்தரவாதம் எல்லாமே நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வசமே இருக்கிறது.

இதெல்லாம் ஒரு பக்கம் இருக்கும் போது இந்த விவகாரம் இப்பொழுது பிரதேச சபைகள், மாகாணசபை, பாராளுமன்றம், ஜனாதிபதி செயலகம், திறைசேரி, பல்கலைக் கழகம், சந்தி, தெரு, என்று எல்லா இடங்களிலும் விவாதப்பொருளாகி விட்டது. இந்த நிலையில் ஊடகங்கள் மட்டும் சும்மா இருக்குமா? இணையத்தளங்கள் பக்கம் பக்கமாக ஆய்வுகளை எழுதிக்குவிக்கின்றன. இந்தக் கட்டுரையை எழுதிக் கொண் டிருக்கும் போது கூட பேராசிரியர் இரா. சிவச்சந்திரனின் கட்டுரை ஒன்று இணையத்தளமொன்றில் பிரசுரமாகி யிருக்கிறது.

இந்தத் திட்டத்தை இன்னொரு வகையாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று வடக்கு மாகாண சபை சார்பாக ஒரு தீர்மானம் முன்மொழியப்பட்டதாக தெரி விக்கப்படுகிறது. இதன்படி இரணை மடுக்குளத்தைத் தனியாகப் புனரமைப்புச் செய்வது, யாழ்ப்பாணத் திலுள்ள நீரேந்து குளங்களையும் குண்டுகளையும் புனரமைப்புச் செய்து புதுப்பிப்பது. உப்பு நீரை அதாவது கடல் நீரைச் சுத்தப்படுத்தி, நன்னீராக்கிப் பயன்படுத்துவது என்று இந்தத் திட்டம் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதெல்லாம் சாத்தியக்குறைவான திட்டங்கள் என்று இதை மறுத்து ரைக்கின்றனர் வல்லுனர்கள். இதற்கி டையில் இந்த விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்காக முதலமைச்சர் ஒரு நிபுணர் குழுவையும் நியமித்திருந்தார். அந்தக் குழுவிலும் இரண்டு பட்ட அபிப்பிராயங்கள் இருந்ததால் அதைக் குறித்தும் ஒரு சரியான முடிவுக்கு வரமுடியவில்லை.

இந்த நிலையில் இப்பொழுது இரணைமடுக்குளம் பற்றிய உசாவல்கள் பலவிதமாக நடந்து கொண்டிருக்கின்றன. இதன்படி இதுவரையிலும் இந்தக்குளத்தின் நீர்ப் பயன்பாடு தொடர்பாக இருந்த நடைமுறைகள் மீள்பார்வைக் குட்படுத்தப்பட்டு, தேசிய நீர்ப் பயன்பாடு மற்றும் தேசிய நீர் முகாமைத்துவக் கொள்கைகளுக்கு அமைய அத்தியாவசிய நீர்ப் பயன்பாட்டிலிருந்து அடுக்க நிலைப் படுத்தப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கின் பெரிய நீர்த்தேக்கம், வடக்கின் நெற்களஞ்சியம் என்ற கிளிநொச்சி மாவட்டத்தின் இதயம், விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கு மிடையிலான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்காக அன்ரன் பாலசிங்கம் விமானத்தில் வந்திறங்கிய நீர்த்தளம், லட்சக் கணக்கான சுற்றுலாப் பயணி களின் சிறப்புக் காட்சி மையம் என்றெல்லாம் பலவிதமாக பதியப் பெறும் இரணைமடு இப்பொழுது சர்ச்சைகளும் சவால்களும் நிறைந்த– புனரமைப்புக்காகக் காத்தி ருக்கும் அரசியற் தளமாக மாறி யுள்ளது வரலாற்றின் சோகமே.

-குமுதன்-

நீண்டகால யுத்தத்தின் பாதிப்புக்களை வடக்கில் எதிர்கொண்ட முதன்மைப் பிரதேசம் முல்லைத்தீவு. 2004 ஆம் ஆண்டில் நிகழ்ந்த சுனாமிப் பேரலைத் தாக்கத்தால் முற்றாக அழிந்துபோன நகரம். இந்த அனர்த்தங்களின் போதெல்லாம் பாதிப்புக்களை அதிகமாக சந்தித்தவர்கள் கடற்றொழிலாளர்களே. மேற்கே சுண்டிக்குளம் - நல்லதண்ணி தொடுவாய் தொடக்கம் கிழக்கே கொக்கிளாய் வரையான பகுதி முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் தொழில் பிரதேசம். இந்த கடல் பகுதிக்குள்தான் சுமார் 5,500 வரையான குடும்பங்களின் வாழ்க்கை அடங்கிக்கிடக்கிறது. இந்தக் கடலில் ஏற்படுகின்ற இயற்கை மாற்றங்கள், மாறுபட்ட கடற்றொழில் செயற்பாடுகள், வெளியிடத்து மீனவர்களின் வருகை என்பன இந்த மக்களின் வாழ்வைக் கேள்விக் குறியாக்கி விடுகிறது. இதனால், இவர்கள் எப்போதும் விழிப்பாகவே இருக்க வேண்டியுள்ளது. இதை இந்தமக்கள் உணராமலும் இல்லை. ஆனாலும், அவ்வப்போது இவர்கள் பல சவால்களை எதிர்கொள்ள நேரிடுவதாக சில ஆதாரங்களைப் பதிவு செய்துள்ளனர்.

முற்றாகச் சிதைந்துபோன இவர்களின் வாழ்வும், பொருளாதாரமும் மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பது இவர்களுடைய பெருமுயற்சி. எனினும், மீள்குடியேற்றத்திற்கு பின் இவர்களுக்கு தேவையான உதவிகள் கிடைக்கப்பெறவில்லை என ஏங்குகிறார்கள் இந்தமக்கள். இதேவேளை, தொழில் சார் செயற்பாடுகளில் பெரும் சவால்களையும் எதிர்கொள்கின்றனர் என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் குறிப்பிடுகின்றது.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியராசா புதிய வன்னிக்கு வழங்கிய விசேட நேர்காணலில் குறிப்பிடுகிறார்.

# மீளத்துடிக்கும் முல்லை கடற்றொழிலாளர்கள்

**மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் தொழிற்துறை முன்னேற்றம் குறித்து கூறுங்கள்?**

முல்லைத்தீவில் 2010 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியேற்றப்பட்டனர். ஆனால், அந்தக் காலப்பகுதியில அரசாங்கமோ அரச சார்பற்ற நிறுவனங்களோ இந்தப் பகுதி கடற்றொழிலாளர்களுக்கு உதவ முன்வரவில்ல. கடலுக்குள்ள இறங்கிறதுக்கு கூட எந்த வசதியும் இருக்கவில்ல. அதால, அந்த வருசம் தொழிலே செய்ய முடியாமல் போச்சு. ஆனா, 2011 இற்கு பிறகு இந்தப் பகுதியில உதவி வழங்கும் நிறுவனங்கள் செயற்படத் தொடங்கியது. ஆனாலும், கடற்றொழிலாளர்களுக்கு உதவிகள் முறையாக கிடைக்க இல்ல. முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களைப் பொறுத்தளவில கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்தான் கடற்றொழிலாளர்களின் செயற்பாடுகளுக்கு எல்லாம் முதுகெலும்பாக கடந்த காலங்களில செயற்பட்டது. தொழிலாளர்களின்ர தேவைகள வெளிப்படுத்த வேண்டியதும் அமைப்பு ரீதியாக உதவி வழங்கிற ஆக்களின்ர கவனத்திற்கு கொண்டுசெல்ல வேண்டிய பொறுப்பும் சமாசத்துக்குத்தான் இருந்தது. இருந்தபோதும் மீள்குடியேற்றத்துக்கு பிறகு அதாவது 2011 ஆம் ஆண்டுக்கு பிறகு சமாசத்தின்ர செயற்பாடு மந்தகதியில இருந்ததால உதவி வழங்கிற நிறுவனங்களோ, அரச திணைக்களங்களோ கடற்றொழிலாளர்களின்ர தேவைகள

இந்திய ரோலர் படகுகள் எங்கட கடற் பிராந்தியத்துக்குள்ள வந்திட்டுது. அவையள் இஞ்ச தடைசெய்த முறைகளையெல்லாம் பாவிச்சு மீன்பிடிக்க தொடங்கிச்சினம். எங்கட சமாசம் அதைக் கட்டுப்படுத்த எல்லாத் தரப்போடயும் தொடர்புகொண்டவ. ஆனா, பயன்கிடைக்க இல்ல. அதால, 2011 தொடக்கம் 2013 ஆம் ஆண்டுகாலம் வரைக்கும் இந்திய மீனவர்கள் ரோலரில வந்து எங்கட கடல்ல தொழில் செய்தவ. அவங்கள் எங்கட பகுதியில தடைசெய்திருந்த இரட்டை மடி வலைகளையும் பயன்படுத்தி தொழில் செய்ததால எங்களுக்கு தொழிலே இல்லாமல் போச்சுது. அதால,அந்த மூண்டு ஆண்டுகளிலயும் இறால் தொழில்கூட எங்களுக்கு இல்லாமல் போச்சுது. கடன் பட்டதொழிலாளர் எல்லாம் கடனதிருப்பிகட்டமுடியாமல் கஸ்ரப்பட்டவ



முக்கியத்துவப்படுத்திப் பார்க்க இல்ல. ஆனாலும், கடற்றொழில் சார்ந்த திணைக்களங்கள் ஒட்டு மொத்த கடற்றொழிலாளர்களுக்கும் முன்னுரிமை கொடுக்காம விட்டாலும் ஒரு சில கிராமங்கள தெரிவு செய்து உதவிகள வழங்கின. முல்லைத்தீவு மாவட்டத்தில 26 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிய போதும் ரெண்டு சங்கங்கள் மட்டுமே உதவிகள பெற்றிருந்தன.மற்ற சங்கங்களுக்கு முழுமையா தொழில் கிடைக்காட்டிலும் பகுதி பகுதியாக சில உதவி கிடைச்சிருந்தது. அதோட தொழிலாளர்கள் வட்டிக்கு கடன் வாங்கியும் உறவுகளிட்ட உதவி வாங்கியும் தொழில ஆரம்பிச்சிருக்கினம்.

**முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டதால் இப்பகுதி தொழிலாளர்கள் எவ்வகையான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்?**

முல்லைத்தீவு இறால் வங்கி எண்டு சொல்லுறவ. அதாவது மாசி, பங்குனி, சித்திரை ஆகிய மாதங்கள் இறால் பிடிபடுற காலம். அந்தக் காலம் கடல் தொழிலாளர்களுக்கு ஒரு சந்தோசமான காலம். அது அவைக்கு நிறைய வருமானம் பெறுற காலம்.

ஆனா, 2011 ஆம் ஆண்டு வழமைக்கு மாறா இறால் தொழில் குறைஞ்சு போச்சுது. அதால, தொழிலாளர்களின்ர எதிர்பார்ப்பு எல்லாம் அடிபட்டு போக அடுத்த கட்டமா என்ன செய்யிறதெண்டு தெரியாமல் கடலப் பாத்து தொழிலாளர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிற சந்தர்ப்பத்தில் தொழிலுக்கு இன்னுமொரு பெரிய சவாலை எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகிற்று.


அதாவது, இந்திய ரோலர் படகுகள் எங்கட கடற் பிராந்தியத்துக்குள்ள வந்திட்டுது. அவையள் இஞ்ச தடை செய்த முறைகளையெல்லாம் பாவிச்சு மீன்பிடிக்க தொடங்கிச்சினம். எங்கட சமாசம் அதைக் கட்டுப்படுத்த எல்லாத் தரப்போடயும் தொடர்பு கொண்டவ. ஆனா, பயன் கிடைக்க இல்ல. அதால, 2011 தொடக்கம் 2013 ஆம் ஆண்டு காலம் வரைக்கும் இந்திய மீனவர்கள் ரோலர்ல வந்து எங்கட கடல்ல தொழில் செய்தவ. அவங்கள் எங்கட பகுதியில தடை செய்திருந்த இரட்டை மடி வலைகளையும் பயன்படுத்தி தொழில் செய்ததால எங்களுக்கு தொழிலே இல்லாமல் போச்சுது. அதால, அந்த மூண்டு ஆண்டுகளிலயும் இறால் தொழில்கூட எங்களுக்கு இல்லாமல் போச்சுது. கடன்பட்ட தொழிலாளர் எல்லாம் கடன திருப்பி கட்ட முடியாமல் கஸ்ரப்பட்டவ. ஆனாலும், எங்கட நிலையைப் புரிஞ்சு கொள்ள எவரும் முயற்சிக்க இல்ல.

இந்த நிலையிலதான் இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒண்டு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில நானும் கலந்து கொண்டிருந்தனான். அதில பேசின எல்லாரும் சொன்னவ, முப்பது வருசமா வடக்கு கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டவர்கள் எண்டு. நான் சொன்னன். முப்பது வருசமா யுத்தத்துக்குள்ள வாழ்ந்து அதை அனுபவித்தவர்கள் நாங்கள். ஏனையவர்கள் அந்த கால கட்டத்தை சொல்லி கதைத்தாலும் அந்த யுத்தத்தின் நேரடித் தாக்கத்தை எதிர்கொண்டவர்கள் நாங்கள் தான். அதாலதான் இண்டைக்கும் கையேந்திக் கொண்டிருக்கிறம். யுத்தத்தால அழிந்து போனது எங்கட வாழ்க்கை.

அதால, நாங்கள் எங்கட மூதாதையரின் தொழில் முறைகளத்தான் இப்பவும் கையாண்டு வாறம், பெரிய தொழில் வள்ளங்கள் எதுவும் எங்களிட்ட இல்ல. பதினெட்டடி போட்டோடயும் பதினைந்து கோஸ் பவர் இஞ்சினோடயும் தான் நாங்கள் இப்பவும் தொழில் செய்யிறம். எங்கட தொழில் கிட்டத்தட்ட ஆறு லட்சம் தான். ஆனால், எழுபத்தைந்து இலட்சம் பெறுமதியாக தொழிலைக் கொண்டு வந்து இந்திய மீனவர்கள் எங்கட பகுதியில தொழில் செய்தால் கடல்ல இருக்கிற எல்லா உயிரினங்களும் வழிச்சு எடுக்கப்படுது. அதில தேவையானத மட்டும் எடுத்திட்டு மிச்சத்த கடல்ல போட்டிட்டு போயினம். அது கடல்ல செத்து மிதக்குது. அதால, எங்கட வாழ்வாதாரம் சிதைஞ்சு போகுது எண்டுறத நாங்கள் சுட்டிக்காட்டினம். அந்த பேச்சுவார்த்தையின் படி இனி அவையள் எங்கட பக்கம் தொழில் செய்ய வரமாட்டினம் எண்டு நாங்கள் நினைக்கிறம்.

(அடுத்த இதழில் தொடரும்...)





தமயந்தி

# கலாசாரம்
## யார் பொறுப்பு?

*பொடியள் என்ன வேட்டியோடதான் வருகினமோ? உதென்ன கதை கலாசாரம், பண்பாடு எல்லாத்தையும் பொண்டுகளின்ர சேலையில கட்டிவிட்டுட்டு தாங்கள் கழிசானுக்க நுழைஞ்சு கொண்டு வரலாமாமோ?*

**ராஜி** அலுவலகம் ஒண்டில வேலைக்குச் சேர்ந்திட்டாவாம். அவசரமா சேலையொண்டு வாங்கோணுமாம். காசுக்கு ஒடுப்பட்டுத்திரியிறாள். பாவம் முட்டுப்பட்டதுகள் தாய் மனிசி இங்கின அங்கின கூலிக்குப் போய் பெட்டையப் படிப்பிச்சுப் போட்டாள். இப்ப எங்கனயோ வேலை கிடைச்சிட்டுதாம்.

"ஏன்ரியப்பா இவள நாளும் உடுத்த துணியில்லாமயே இருந்த நீங்கள். உடுத்ததில நல்லதா ஒண்டக் கட்டிக்கொண்டு போனா என்ன?" எண்டு புறுபுறுக்கிறாள் பேத்திக்கிழவி

" என்ன கதையெணை பறையிறாய்....ங... பாவாடை சட்டையள் தானே கிடக்கு...ரெண்டு பஞ்சாபியுங் கிடக்கு. அதுகளப் போட வேண்டாமாம். தமிழருக்கெண்டுள்ள பண்பாடாம் சேலையோடதான் வரட்டாம்"

"ஆமோ.... 'வித்தாரக் கள்ளி விறகுக்குப் போனா ளாம்...கத்தாளை முள்ளு கொப்போட ஏறிச்சாம்" ப்பூ... அப்ப...பொடியள் என்ன வேட்டியோடதான் வருகினமோ? ங உதென்ன கதை கலாசாரம், பண்பாடு எல்லாத்தையும் பொண்டுகளின்ர சேலையில கட்டிவிட்டுட்டு தாங்கள் கழிசானுக்க நுழைஞ்சு கொண்டு வரலாமாமோ? ...அந்த நாளையில பொண்டுக ளுக்கு வீட்டு வேலைய விட்டா வேற வேலையில்ல அடுப்பும் நெருப்பும், உரலும் உலக்கையும் ,அம்மியும் குழவியுமா மாயவுஞ்சரியா இருந்திச்சு இப்ப அப்பிடியே எங்கட பூட்டியாச்சி சொல்லுவா தாங்கள் பதி னாறு முழஞ் சேலை கட்டினவையாம். பின் கொய்யகம் வச்சு ரவுக் கையில்லாம் ஒரு துண்ட மார்பில சுத்தி மற்ற பகுதியால மாறாடி போட்டு இழுத்து மூடக் கொள்ள வசதியாயிருக்கும். பிறகை பாத்தா பன்னெண்டு முழமாக் குறைஞ்சிட்டுது. முன்கொய்யகம் வச்சு கட்டுறாளவை' எண்டு சொல்லுவா

அதுகும் ஏழைபாழை யெண்டா முன்கொய்யகம வச்சா' நாக்கு வளைப்பா ளவை.' ஏண்டு தட்டுப்பாத்தான் கட்டுறது. குனிஞ்சு வளைஞ்சு வேலை செய்யச்சுகம். ஏன் நிலத்தில போட்டு நெல்லுத்தொலிக்கவும் குந்தியிருந்து அடுப்பில வறுக்கவும். சரியாயிருக்கும்.

அந்தக்காலத்தில பெண்டுகள் மாதசூதகம் வந்தா கோடித் திண்ணைக்க குந்தவச்சு கோடு கிழிச்சு வசிருவினம் அஞ்சு நாளும் வெளியில விடாயினம். "எங்கையெடி பெடிச்சியக் காணேல்ல"எண்டா அவள் தொடமாட்டாளெணை" என்பாளவை.

இப்பத்தையில் பெண்டுகளுக்கு,ஸ்ரேபறீ, கெயாபிறீ விஸ்பர் ஈவா எண்டு பிறியா திரியுதுகள் வாரதும் தெரியாது போறதும் தெரியாது பதினாறு மூலம் சீலைக்குள்ளேயும் பின் கோசுவத்துக்குள்ளேயும் அடங்கியிருந்த இரகசியம் இதுதான். பெண் கல்வி பெண் விடுதலை சம உரிமை எண்டெல்லாம் பேசிப் பேசி உலகத்தின்ர பாதி சனத்தொகையாய் இருக்கிற பெம்பளையள் வீட்டுக்க கிடந்தால் நாட்டுக்கு அபிவிருத்தி எப்படி வருமென்று கேட்டுக் கேட்டு பெண்டுகள வெளியால கொணர்ந்தாச்சு

அதுகளும் வீட்டு வேலையையும் விடாமல் செய்து வெளியால போய் உழைச்சு இரட்டைச் சுமையை எடுத்துற்றுதுகள். ஏதோ இழுக்குதுகள் இதில என்ன கொடுமை என்றால் பாருங்க பொண்டுகளுக்கு சீலை கட்டி விடுறதில இன்னும் சமூகம் அக்கறையாத்தான் இருக்கு. ஏனெண்டு கேக்கிறியளே தமிழருடைய கலாசாரத்தை தைப் பேணுகினமாம். பொம்பளையள் கட்டுற சீலையில தான் கலாசாரம் இருக்காம். இவை கட்டின வேட்டியில கழண்டு விழுந்து போச்சாமோ மிதிவண்டி உந்துருளி அது இதெண்டு வசதியா போக வர சேலை சரி வருமோ.... இனி சேலையில என்ன மரியாதை. இருக்கெண்டு கேக்கிறன். அடி வயித்தில சேலையை கட்டி மேல போடுற ரவிக் கையில பின் முதுகில ஒரு ஏக்கர் தெரியும் முன்னுக்கும் இருக்கிற வாய்க்கால் தெரியக்கட்டி இடையில யன்னல் கதவு வச்ச ரவிக்கை..... மரியாதையாம். முழு உடலையும் மூடுற பஞ்சாபி, பாவாடை சட்டை சரியில்லையாம். அதை விடுங்கோ இண்டைக்கு பள்ளிக்கூடத்தில ஞாயமான பெண்டுகள் சரிகைப்பட்டுகளும், யிகினாப்பட்டுகளுமா நிக்கினம். பெற்றார் கூட்டமாம் அதுக்கு... கலியாண வீட்டுக்கு போற மாதிரி கல கலப்பா வந்திருக்கினம். என்னடியப்பா... கோலம் எண்டா பள்ளிக்கூட சட்ட மாம் அம்மா எண்டா சீலை யோட உள்ள ஒரு இமேச் இருக்காம். அதாலதான் கட்டி வரச்சொன்னவை. அப்பிடி வந்திருக்கிறம் எண்டாள் ஒருத்தி.

எட அதுக்கு இவ்வளவு பெறுமதியாகவோ.... அய்யோ ஆருங்கோ இப்ப சீலை கட்டிற.....? கலியாணவீடு கோயிலெண்டால் தானே கட்டிறது. பெறுமதியான சீலை மட்டும் தான் எல்லோரிட்டையும் இருக்கு.

(பக்கம் 06)

## பூநகரி

# மொட்டைக் கறுப்பனுக்கு வந்த சோதனை

கருணாகரன்

பூநகரி மொட்டைக் கறுப்பன் அரிசி' என்று பரிஸிலும் ரொறென்ரோவிலும் சூரிச்சிலும் லண்டனிலும் இந்திய அரிசியைவிற்கிறார்கள்' என்று சொல்லிக் கவலைப்படுகிறார் ஒரு புலம்பெயர் பூநகரி வாசி. வெளிநாடுகளில் மட்டுமல்ல, உள்ளூரில் வாழ்கின்ற பூநகரி வாசிகளே பூநகரிஅரிசி என்ற பேரில் வேறு இடத்தின் அரிசியைத்தான் வாங்க வேண்டியிருக்கு. அந்த அளவுக்கு வலுத்திருக்கிறது மோசடி. 'உலகில் நடக்கும் ஆயிரமாயிரம் பென்னாம் பெரிய மோசடிகளில் இது எம்மாத்திரம்?' என்று நீங்கள் கேட்கலாம். ஒவ்வொன்றையும் உணர்வதைப் பொறுத்தே அதன் லாப நட்டங்கள் இருக்கும். பூநகரி மொட்டைக் கறுப்பன் அரிசியை அறிந்தவர்களுக்கு அதைப்போலி செய்வதைச் சகிக்க முடியாது. ஒரு காலம் பூநகரி மொட்டைக்கறுப்பன் என்றால் அதற்கென்று தனி மவுசு இருந்தது. தனி ருசியே இதற்குக் காரணம். இப்பொழுது கலப்படம். கலப் படம் என்றாலும் பரவாயில்லை. மொட்டைக்கறுப்பனே இல்லாத ஒன்றை 'மொட்டைக் கறுப்பன்' என்று சுத்தமாகப் பொய்சொல்லி விற்கிறார்கள். பலருக்கு அசல் அரிசியைத் தெரியாத நிலை வேறு. எல்லாவற்றுக்கும் காரணம் பூநகரி மொட்டைக் கறுப்பனைத் தேவையான அளவுக்கு விளைவிக்க முடியவில்லை என்பதே.


மொட்டைக்கறுப்பன், பச்சைப் பெருமாள் என்ற இரண்டு வகை நெல்லினங்கள் அதிகமாகப் பூநகரியில் செய்கை பண்ணப்பட்டன. பாரம்பரிய இனங்கள். உவர் கலந்த களித்தறையில் - ..............

.......ஆறுகள் கொண்டு வந்து சேர்த்த வண்டல் மண்ணில், மானாவாரிக்கு அவை நன்றாக விளைந்தன. இரணைமடுக்குளம் கட்டப்பட்டு, கிளிநொச்சியில் நெற்செய்கை செய்யப்படுவதற்கு முன், யாழ்ப்பாணத்தின் அரிசித் தேவையைப் பூநகரிதான் பூர்த்தி செய்தது. யாழ்ப்பாணத்திலுள்ள பலருக்கும் அந்த நாட்களில் பூநகரியில் காணிகள் - வயல்கள் - இருந்தன. (காணி இருந்தால் கலியாண உறவு தானாக வந்து விடும்). இதனால் பூநகரி மொட்டைக் கறுப்பனும் பச்சைப் பெருமாளும் யாழ்ப்பாணத்தாரிடம் மிகப் பிரசித்தம். யாழ்ப்பாணத்துக்கான அரிசி விநியோகத்தைக் கிளிநொச்சி எடுத்திருந்தாலும் பூநகரி மொட்டைக் கறுப்பன், பச்சைப் பெருமாளின் மவுசு குறையவில்லை. இப்பொழுது பாசிமணிச் சம் பாவைத் தேடி வாங்குவதைப் போல அன்று கொண்டாட்டங்களுக்கெல்லாம் பூநகரி மொட்டைக் கறுப்பனையே வாங்கினார்கள். இதனால், புதிது புதிதாக ஏராளம் நெல்லினங்கள் வந்தாலும் இந்த இனங்களைப் 'பூநகரியார்' கைவிடவில்லை. பூநகரிக்கு அது ஒரு தனி அடையாளம், தனிச்சிறப்பு என்று விதைத்தும் அறுத்தும் விளைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், இந்தச் சிறப்புக்குச் சோதனை வந்தது. முதற் சோதனை, ......................

......ஆறுகளை வழிமறித்து வன்னேரிக்குளமும் அக்கராயன் குளமும் கட்டப் பட்டதோடு பூநகரி வளரத் தொடங்கியது. அடுத்த சோதனை யுத்தம்.

1980 களில் இலங்கையின் வடக்குக் கிழக்கில் உருவாகிய 'யுத்தப் புயல்'

பூநகரியையும் தாக்கியது. யாழ்ப்பாணத்தைப் பாதுகாப்பதற்காக பூநகரியில் 1656 இல் ஒல்லாந்தர் கட்டிய கோட்டை ஒன்றிருந்தது. (இப்பொழுது அது சிதைந்த நிலையில் உள்ளது). இப்படிப் பாதுகாப்புக் கோட்டை இருந்தால் அதன் பொருள், அது ஒரு இராணுவக் கேந்திரம் என்பதே. யுத்தம் என்றால் பாதுகாப்புக் கேந்திரங்களே அதன் மையம். இப்படிக் கேந்திரங்கள் இருந்தால், கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் சனங்களுக்கும் வளங்களுக்கும் சோதனை தான். அப்படித்தான் நடந்தது பூநகரியிலும். ஒல்லாந்துக் கோட்டை என்றும் வாடியடி என்றும் ஊரவர்கள் சொல்லிக் கொண்டிருந்த - நீண்ட காலமாக எந்தப் படைகளும் இல்லாதிருந்த - அந்தக் கோட்டையில் 1981 இல் வந்து குந்தினர் படையினர். தொடக்கத்தில் பெரிய அளவில் பிரச்சினைகளிருக்கவில்லை. ஆனால், நாட்டில் நிலைமை பிழைக்கத் தொடங்க, பூநகரிக் கோட்டையிலும் நிலைமைகள் பிழைத்தன. 1986 இல் புலிகள் அங்கிருந்த படையினரைக் கலைப்பதற்காக அல்லது அழிப்பதற்காக என்று புலிகள் ஒரு பெருந்தாக்குதலைத் தொடுத்தார்கள். ஆனாலும் நினைத்த மாதிரிக் காரியங்கள் நடக்கவில்லை. கோட்டையின் மீது புலிகள் பாயப் படைகள் பூநகரி நாலாம் கட்டையில் இருந்த புதிய பொலிஸ் நிலையக் கட்டிடத்திற்குப் பின்வாங்கி, நிலைகொண்டனர். 1987 இல் இந்திய அமைதிப்படையினர் வந்தபோது கோட்டை



அவர்கள் வசமாயிற்று. ஆனாலும் ஊர்களில் சனங்கள் இருந்தனர்.

வயல்களில் வெள்ளாமை விளைந்தது. ஆனாலும் இதெல்லாம் நீடிக்கவில்லை. 1990 இல் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்குமிடையில் சண்டை தொடங்க ஆனையிறவுப் பாதையைப் படையினர் மூடினர். ஆனையிறவுப் பாதைக்குப் பதிலாக பூநகரி (கேரதீவு — சங்குப்பிட்டிப்பாதை) பதிற் பாதையாகியது. ஆனால், இதுவும் நீடிக்க வில்லை.

1991 இல் 'வலம்புரி நடவடிக்கை' மூலமாக மீண்டும் படையினர் பூநகரியைக் கைப்பற்றினர். படையினர் பூநகரிக்கு வந்ததோடு இந்தப் பாதையின் கதையும் முடிந்தது. பிறகு புலிகளும் சனங்களுமாக இயக்கச்சி ஊடாக கொம்படிக்கும் ஊரியானுக்கும் ஒரு பாதையை ஆனையிறவுக்குப் பின்பக்கமாகத் திறந்தனர். பூநகரிக்குப் படையினர் வந்ததோடு பூநகரியின் துயரம் தொடங்கியது. வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பிரதேசம் போர் நிலமானது. பூநகரிக் கோட்டையில் நிலைகொண்டிருந்த படையினரை முற்றுகையிட்டனர் போராளிகள். விளைவு முடிவில்லாச் சண்டை. சனங்கள் பெயர வெறிச்சோடின ஊர்கள். பூநகரியின் அடையாளங்கள் அத்தனையும் தொலைந்தன. மொட்டைக்கறுப்பனும் பச்சைப்பெருமாளும் விளையாமற் போனது. அகதி வாழ்க்கையில் மொட்டைக்கறுப்பன் மட்டுமல்ல, சாதாரண அரிசிக்கே வக்கில்லாத நிலை. பச்சைப்பெருமாளுக்குப் பதிலாக அம்மாப்பச்சை அரிசிக்கே அலைய வேண்டி விதி விளைந்தது.

பூநகரியிலிருந்து பெயர்ந்தவர்கள் அப்படியே தெற்கே நகர்ந்து செம்மண்குன்றிலும் முட்கொம்பனிலும் ஜெயபுரத்திலும் குடியேறினார்கள். விவசாயிகள் சைக்கிளில் மண்ணெண்ணெய் கட்டி விற்றார்கள். விறகு வெட்டினார்கள். சில்லறைக் கடை போட்டார்கள். பலர் என்ன வேலை செய்கிறோம் என்று தெரியாமலே நாளுக்கொன்றாகக் கிடைக்கும் வேலைகளைச் செய்தார்கள். பூநகரியில் மொட்டைக்கறுப்பனுக்குப் பதிலாக சாவு அமர்க்களமாக விளைந்தது.

பூநகரிக்கோட்டையில் நிலைகொண்டிருந்த படையினர் சுற்றிவரத் தாக்குதல்களை நடத்தினர். கோட்டையில் இருந்த படையினரை இலக்கு வைத்துப் போராளிகள் தாக்கினர். இப்படி நடந்தால் சாவு விளையாமல் வேறு என்னதான் விளையும்? இயற்கையாகவே பெருவெளியாக இருக்கும் பூநகரி சனங்களும் ஆடு, மாடுகளும் இல்லாமல் இன்னும் வெறிச்சிட்டிருந்தது.

கேரதீவு — சங்குப்பிட்டிப் பாதை மூடுண்டது. அது யாழ்ப்பாணத்திலிருந்து நாவற்குழி வழியாக பூநகரிக்கு வந்து, பிறகு தெற்கே மன்னார் செல்லும் ஏ. 32 சாலை. பெருந்தெரு. ஒரு காலம் இந்த வழியால்தான் திருக்கேதீஸ்வரத்துக்கு யாத்திரை சென்றார்கள். நான் கூட மன்னாரில் வேலை செய்த நாட்களில் (1981 இல்) இந்தவழியால் பயணித்திருக்கிறேன். இப்போதையைப் போல இந்தப் பாதை அன்று இருக்கவில்லை.

அப்பொழுது, உயர்ந்த காட்டின் மத்தியில் ஒடுங்கிச் செல்லும் ஒரு சிறிய பாதையாக இருந்தது. கேரதீவு — சங்குப்பிட்டிப் பாலம் அன்று கிடையாது. பூநகரியிலிருந்து யாழ்ப்பாணம் போக வேணுமென்றால், சங்குப்பிட்டி வரைக்கும் போய், அங்கிருந்து 'பாதை' என்ற மிதவை மூலமாக கேரதீவுக்குச் செல்ல வேண்டும். அப்படித்தான் கேரதீவிலிருந்து சங்குப்பிட்டிக்கு பயணித்துப் பூநகரிக்கு வரலாம். ஏ.32 பாதை தடையான பிறகு பயணங்கள் இல்லை. ஆனால், 1994 இல் யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளுக்கும் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்துக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் இந்தப் பாதையைத் திறக்கும்படி புலிகள் கோரிக்கை வைத்தனர். அந்தக் கோரிக்கை பிறகு நிபந்தனையாகியது. சந்திரிகா அரசாங்கமோ புலிகளின் கோரிக்கையையும் ஏற்கவில்லை. நிபந்தனையையும் ஏற்கவில்லை. விளைவாகப் போர் நிறுத்தம் முறிந்தது. போர் நிறுத்த முறிவு எல்லா இடங்களிலும் தலைகளை உருட்டியதைப் போல பூநகரியிலும் உருட்டியது. இதனால், மண்ணித்தலைச் சிவன் கோவிலுக்கு யாரும் போக முடியவில்லை. அது சோழர்காலக் கோயில். சோழர்கள் இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கோயில் அது என்கின்றார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம். பூநகரியில் சோழர்களின் செல்வாக்கு ஒரு காலம் மிகப் பலமாக இருந்துள்ளது. மண்ணித்தலை தொடக்கம் பூநகரி — நல்லூர் வரையில் உதிரிகளாகக் கண்டெடுக்கப்பட்ட

> **"பூநகரியிலிருந்து பெயர்ந்தவர்கள் அப்படியே தெற்கே நகர்ந்து செம்மண்குன்றிலும் முட்கொம்பனிலும் ஜெயபுரத்திலும் குடியேறினார்கள். விவசாயிகள் சைக்கிளில் மண்ணெண்ணெய் கட்டி விற்றார்கள். விறகு வெட்டினார்கள்."**




சிற்பங்களும் நாணயங்களும் இதைச் சொல்கின்றன. இதைப் பற்றிப. புஸ்பரட்ணம் தனியாக இரண்டு புத்தகங்களே எழுதியிருக்கிறார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் படிக்கிற மாணவர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இந்தப் பகுதிகளுக்கு வந்து நாணயங்ளைச் சேகரிப்பதிலும் இடங்களைப் பார்ப்பதிலும் மண்ணித்தலைச் சிவன் கோவிலை ஆராய்வதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்பொழுதும் அப்படி வந்து போகிறார்கள்.

மண்ணித்தலைச் சிவன் கோவில் ஒன்றும் பெரிய கோயில் அல்ல. சின்னஞ்சிறிய சிதைவு மட்டுமே கோயில் என்று சொல்லத்தக்க அளவுக்கு உருப்படியாக மிஞ்சியிருக்கிறது. அதற்குப் பக்கத்தில் ஒரு சிதைந்த தேவாலயமும் உண்டு. இந்தத் தேவாலயத்தின் காலப்பகுதியைப் பற்றி பலவிதமாகச் சொல்கிறார்கள். எதையும் சரியாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. மண்ணித்தலை — கௌதாரிமுனை என்ன இந்தச் சின்னஞ்சிறிய கிராமத்தில் அதிகபட்சமாக 200 குடும்பங்களுக்குள்தான் உள்ளன. ஆனால், கண்ணெட்டும் தொலைவு வரை தென்படுவது மணல்குன்றுகள். அழகான வெள்ளை மணல் குன்றுகள். இந்தப் பிரதேசத்தின் பெரும் செல்வம் அது. சிறு மலைகளைப் போல வெளி முழுதும் நிரம்பியிருக்கும் இந்த மணல் குன்றுகளை மூன்று பக்கமும் சுற்றி சிறு பரவைக்கடல். இதை ஒழுங்கான முறையில் வடிவமைத்தால் அழகிய ஒரு சுற்றுலாத்தலமாகும்.

'சுற்றுலாப் படகு' வழியாக யாழ்ப்பாணத்திற்கும் மன்னாருக்கும் செல்லும் காலம் ஒன்று வந்தால் நிச்சயமாக மண்ணித் தலை —கௌதாரி முனை கவர்ச்சிமிக்க ஒரு சுற்றுலா மையம். மணல் குன்றுகளின் நடுவே முளைத்திருக்கும் வீடுகள், பனைகள். இடையிடையே புதையவோ அழியவோ போவதாகத் தோன்றும் ஒழுங்கைகள். ஆனால், யுத்தம் என்று வந்து விட்டால் எதுவும் நாம் சொல்வதைப் போல இருப்பதில்லை. மண்ணித்தலை— கௌதாரிமுனையிலும் அப்படித்தான். அங்கே நின்ற ஆயிரக்கணக்கான — லட்சக்கணக்கான பனைகளில் பாதியை அது தின்றது. கௌதாரிமுனை ஒரு தொல் குடியிருப்பு என்ற சாயலே அற்றுப்போகும் அளவுக்கு யுத்தம் அனைத்தையும் சிதைத்தது. யுத்தத்தினால் கௌதாரிமுனை மட்டுமல்ல, பூநகரி வாடியடியைச் சுற்றிய கிராமங்களான மட்டுவில்நாடு, செட்டிய குறிச்சி, பரமங்கிராய், கறுக்காய்த் தீவு, நாலாம் கட்டை, .... என்று எல்லாமே சிதைந்தன. அல்லது சனங்கள் இல்லாமல் வெறிச்சது. சனங்களில்லாத இடத்தில்தான் சண்டை உச்சம் என்றொரு காலம் இருந்தது. படையினர் நிலைகொண்டுள்ள அல்லது படை நடமாட்டம் உள்ள பகுதிகளை விட்டுச் சனங்கள் விலகிச் சென்று விடுவதால் அவை சூனியப் பிரதேசங்கள் ஆகிவிடும். அப்படிச் சன நடமாட்டமில்லாத சூனியப் பிரதேசங்களில் சண்டை நடந்ததால் சனங்களுக்குப் பெருமளவு சேதங்கள் குறைவு.

1990 களில்தான் பூநகரியில் சண்டை உச்சம். தொடக்கத்தில் இங்கே, வாடியடி என்று சொல்லப்படும்கோட்டையிலிருந்த படையினரின் மீது புலிகள் தாக்குதலை நடத்தினார்கள். என்றாலும் கோட்டை விழவில்லை. புலிகளும் விடவில்லை. தொடர்ந்து மாறி மாறித்தாக்குதல்கள் நடந்து கொண்டிருந்தன. ஒரு கட்டத்தில் இயக்கச்சிப் பாதையும் மூடப்பட, யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்குமிடையிலான போக்குவரத்தே இல்



லாமற் போனது. இந்த நேரத்தில்தான் புலிகள் கிளாலி — பூநகரிக் கடல் வழிப்பாதையைத் திறந்தனர். இது பாதையல்ல. கொலைக்களம். கடல் வழியாகச் சின்னஞ்சிறிய படகுகளில் பயணிப்பது என்றால் ஆபத்தில்லாமல் வேறு எப்படியிருக்கும்? அதிலும் இயந்திரம் பொருத்தப்பட்ட ஒரு படகில் ஆறு அல்லது ஏழு, எட்டுப் படகுகள் என்று பிணைக்கப்பட்ட தொடுவைகளில் பயணிப்பதென்றால்? இந்தத் தொடுவைகள் கடலில் தத்தளிக்குமேதவிர, நகராது. இந்த எட்டுப் படகுகளுக்குமான இயந்திரத்தின் குதிரை வலு எவ்வளவு தெரியுமா? எட்டு மட்டுமே. எரிபொருட்தட்டுப்பாடு காரணமாக தனித் தனியாக ஒவ்வொரு படகுக்கும் இயந்திரங்களைப் பொருத்த முடியாது என்பதால் இந்த இழுபறி. இப்படி எட்டுக் குதிரை வலு இயந்திரத்தோடு ஏழு, எட்டுப்படகுகளைப் பிணைத்துக்கொண்டு கடலில் தத்தளித்துப் பயணிக்கும் போதுதான் இலங்கைக் கடற்படையினர் படகுகளையும் பயணிகளையும் வழி மறிப்பார்கள். ஏதோ சோதனை நடவடிக்கைக்காக நடக்கும் வழி மறிப்பல்ல அது. தடை செய்யப்பட்ட பாதையின் வழியாக பயணிப்பது குற்றம் என்பதற்காக நடக்கும் வழி மறிப்பு. இந்த வழிமறிப்பு என்றைக்கும் இரத்தம் சிந்தாமல் நடந்ததில்லை. போதாக் குறைக்கு விமானத்தாக்குதல்கள், வான்வெளித்தாக்குதல்கள் வேறு. இதனால், இந்தக் கடனீரேரி சிவந்து செந்நிறமாகியது. என்னதான்





யுத்தம் எல்லாவற்றையும் தீர்மானிக்கும் ஒன்றாக இருந்தபோது சனங்கள் எதையும் தீர்மானிக்க முடியாதிருந்தார்கள். இதுதான் யுத்தத்தின் விதி. இதுதான் போரின் வலு. போரை வெல்ல முடியாத சனங்கள் போரினால் தோற்கடிக்கப்பட்டுக்கொண்டேயிருந்தனர். சொந்த நாட்டுக்காகப் போராடிய மக்கள் சொந்த ஊர்களிலேயே இருக்க முடியாத நிலை. சொந்த ஊரில் மட்டுமல்ல, புகலிடம்தேடி வேறு ஊர்களிலும் கூட இருக்க முடியாத வாழ்க்கை.

நடந்தாலும் பயணங்கள் நடந்து கொண்டிருந்தன. வேறு வழியில்லை என்றால், நெருப்பையும் தின்னத்தான் வேணும் என்றமாதிரி இந்தப் பாதையைத் தவிர்க்க முடியாத நிலையில் சாவோடு போராடியே சனங்கள் போய் வந்தனர். நான்கூட இந்த அபாயத்தின் வழியாக பத்துப் பன்னிரண்டு தடவைகள் பயணித்திருக்கிறேன். என்றால், அந்த நாட்களில் பத்துப்பன்னிரண்டு தடவைகள் செத்துப் பிழைத்திருக்கிறேன். ஒரு கட்டத்தில் இந்தப் பயணமும் நெருக்கடிக்குள்ளாகும் நிலை தோன்றியது. பூநகரிப் பிரதேசத்தில் உள்ள நாகதேவன்துறையில் கடற்படை ஒரு படைத் தளத்தை நிறுவி, இந்தக் கடல்வழிப் பயணத்தைத் தடுக்க முயன்றது. அதுவரையிலும் இராணுவத்தினர் மட்டுமே நிலைகொண்டிருந்த பூநகரியில் கடற்படையினரும் சேர்ந்து கொண்டனர். ஒரு காலம் (சோழர் காலத்தில்) பூநகரிக்கான துறைமுகமாக விளங்கிய நாகவேதன்துறை படைகளின் துறையானது. தினமும் புலிகளுக்கும் இலங்கைக் கடற்படைக்கும் இடையில் கடுமையான மோதல்கள் நடந்தன. தினமும் கொலைகளும் பலிகளும் நிகழ்ந்தன. ஒருகட்டத்தில் - 1993 11.11 இல் - பூநகரிப் படைத்தளத்தின் மீது புலிகள் பாய்ந்தனர். 'தவளைப் பாய்ச்சல்' என்று இந்த நடவடிக்கைக்குப் புலிகளால் பெயர் சூட்டப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கையில் அவர்கள் படையினரின் இராணுவத்தின் கனரக 'ராங்' ஒன்றையும் கடற்படையிடமிருந்து அதிவேகப் படகுகளையும் கைப்பற்றியிருந்தனர். இது புலிகளை படைக்கல ரீதியிலும் உளவியல் ரீதியாகவும் பலப்படுத்தியது. பிறகு, கடற்படையிடம் கைப்பற்றிய படகை வைத்தே கடலில் பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்தார்கள். என்றாலும் தொடுவைப் பயணம் தான். ஆபத்துத் தான். ஆனால், குறைந்த ஆபத்து.

இப்படி கடல் வழியாக தொடுவையில் வருவோர் பூநகரி - நல்லூரில் இறங்கி (அப்பொழுது ஆலங்கேணி - நல்லூரில் துறை ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது) உவர் வெளியால் பயணித்து, நல்லூருக்கு வந்து, பிறகு பரந்தனுக்கோ, முட்கொம்பன் வழியாக அக்கராயனுக்கோ போவர். இதுவும் நீண்ட காலத்துக்கு நீடிக்கவில்லை. யுத்தம் எல்லா நிலைப் புள்ளிகளையும் நிரந்தரங்களையும் சிதறடித்துக் கொண்டிருந்தது. இல்லா விட்டால் மாற்றியமைத்துக் கொண்டோ கலைத்துக் கொண்டோ இருந்தது.

1996 ஏப்ரலில் யாழ்ப்பாணக் குடாநாடு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் வந்த பிறகு, குடாநாட்டுக்கும் வன்னிப் பகுதிக்குமான பயணங்கள் முடிவுக்கு வந்தன. பூநகரியும் சனமின்றி வடிந்தது. காய்ந்துலர்ந்த வெளியில் காற்றுத் தனித்து வீசியது. மற்றும்படி வயல்களும் காடும் சிறுகடலுமாக அமைந்த பண்டைய ஊர்கள் ஆளரவமற்றுத் தனித்தன. கடலோரத்தில் புலிகள் மட்டும் காவலரண்களை அமைத்திருந்தார்கள். சிறு பரவைக் கடல் மீன்களைப் பிடிக்கவும் ருசிக்கவும் ஆட்களில்லாமல் சில ஆண்டுகள் கழிந்தன. பூர்வீகக் குடியிருப்புகளின் சொந்தக்காரரெல்லாம் ஊரூராய் அலைந்து கொண்டிருந்தார்கள்.

யுத்தம் எல்லாவற்றையும் தீர்மானிக்கும் ஒன்றாக இருந்தபோது சனங்கள் எதையும் தீர்மானிக்க முடியாதிருந்தார்கள். இதுதான் யுத்தத்தின் விதி. இதுதான் போரின் வலு. போரை வெல்ல முடியாத சனங்கள் போரினால் தோற்கடிக்கப்பட்டுக் கொண்டேயிருந்தனர். சொந்த நாட்டுக்காகப் போராடிய மக்கள் சொந்த ஊர்களிலேயே இருக்க முடியாத நிலை. சொந்த ஊரில் மட்டுமல்ல, புகலிடம தேடி வேறு ஊர்களிலும் கூட இருக்க முடியாத வாழ்க்கை. ஒவ்வொரு தனி மனிதரின் உரிமைகளுக்காகவும் குரல் வைக்கிற உலகம் ஊர்களை விட்டும் வாழிடங்களை விட்டும் அலைந்து கொண்டிருப் போரைக் கண்டும் பேசாதிருந்தது. யுத்தம் உச்சக் கட்டத்தை எட்டி 2008. 2009 இல் இறுதித்தாண்டவம் முடிந்தது.

மீண்டும் சனங்கள் போர் நடந்த நிலத்துக்கு-தங்கள் சொந்த ஊர்களுக்கு 2009 இன் இறுதி மாதங்களில் திரும்பிவந்தனர். கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசத்தில்தான் முதல் மீள்குடியேற்றம் நடந்தது. ஆனால் அது முழங்காவிலில். பிறகு தான் பூநகரியில் மீள் குடியேற்றம் ஆரம்பமானது. மீள் குடியேற்றத்துக்குச் சவாலாக இருந்தது, கண்ணி வெடிகளே. பூநகரியில் ஏராளம் கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டிருந்தன. நெல் விதைப்பு நடக்காது விட்டாலும் கண்ணி வெடிகளும் மிதிவெடிகளும் தாராளமாக விதைக்கப் பட்டிருந்தன. இந்தக் கண்ணிகளை அகற்ற அகற்ற அந்தந்தப் பகுதிகளில் மீள் குடியேற்றம் நடந்தது. மீள்குடியேற்றம் நடக்க நடக்க ஊர்களில் மீண்டும் சனங்களின் காலடிகள் பட்டன. ஆனால் சனங்கள் ஊருக்கு வந்திருந்தாலும் அவர்களிடம் எதுவுமே இருக்கவில்லை.

ஆயிரக்கணக்கான மாடுகளும், ஆடுகளும் மேயும் வெளிகளில் ஒரு ஆடும் இல்லை. ஒரு மாடும் இல்லை. ஏன் யாருடைய வீட்டிலும் நாய் கூட இல்லை. வெளியில் விரிந்திருக்கும் வானத்தை ஏந்தி நிற்பதாகத் தோன்றும் பனைகளில் பாதியும் இல்லை. வேற்றூர்களில் இருந்து வந்த வேற்றாளர்களைப் போலவே அவர்கள் தங்கள் புதிய வாழ்வைத் தொடங்க வேண்டியிருந்தது.

பிறகென்ன? சனங்கள் மெல்லமெல்ல தங்கள் 'மண்பட்டினத்தைக் கட்டத் தொடங்கினார்கள். மனிதர்கள் வல்லமை படைத்தவர்கள். எதையும் மீள உருவாக்கவும் புதிதாக உண்டாக்கவும் வல்லவர்கள். பூநகரி மனிதர்களும் தங்கள் மூதாதையரின் சுவடுகளை அழியவிடாமல் மீண்டும் அதைப் புதுப்பித்தனர். மெல்ல மெல்ல

ஆடுகளும் மாடுகளும் ஊர் களுக்கு வரத்தொடங்கின. வயல்களை விளைக்க விளைந் தார்கள். ஆனால், எதுவும் அத்தனை சுலபமாக இருக்க வில்லை. மீண்டும் விதைப்ப தற்கு அவர்களுடைய அருமை யான 'மொட்டைக்கறுப்பனும் பச்சைப்பெருமாளும்' இல்லை. அந்த நெல்லைத்தேடி அவர் கள் சாவகச்சேரிக்கும் மறவன் புலவுக்கும் போனார்கள்.

காரைநகரில் தேடினார்கள். மூடைக்கணக்காக – லொறிலொறியாக மொட்டைக் கறுப்பனையும், பச்சைப் பெருமாளையும் ஏற்றி அனுப் பிய விவசாயிகள் கிலோக் கணக்கில் விலைபேசி அதை வாங்கி வந்தார்கள். காலம் தான் என்னமாதிரி விளையாடியது பார்த்தீர்களா?

பூநகரி மெல்ல மெல்லத் துளிர்க்கத் தொடங்கியது. பூநகரிக்கும் யாழ்ப்பாணத் துக்கும் இடையில் தொடக்கப் படாமல் நீண்ட காலமாகவே இருந்த காலம் வரலாற்றில் முதற்தடவையாக தொடுக் கப்பட்டது. இந்தப் பாலத் தைப் போட்டதுடன் பூநகரியின் முகமே மாறிவிட்டது. அப்படியே பூநகரியையும் பரந்தனையும் யாழ்ப்பாணத் தையும் மன்னாரையும் இணைக்கும் வீதிகளும் புனரமைக்கப்பட்டன.

பரந்தன் வீதியில் முந்தியி ருந்த ஆஸ்பத்திரி பாதுகாப்பு மையமாகியது. புதிய மருத்துவமனை யாழ்ப்பாணம்வீதிக்கு மாறியது.

சந்தையும் தெருக்களும் பள்ளிக் கூடங்களும் புத்தம் புதியதாகின. மின்சாரம் ஊர்களை ஒளிர வைத்தது. தொலைத் தொடர்புக் கோபுரங்கள் முளைத்து வெளியை ஆட்சி செய்கின்றன. ஆனால், ஒல்லாந்துக் கோட்டை மட்டும் அப்படிச் சிதைந்த படியே கைவிடப்பட்டிருக்கிறது. இந்தக் கோட்டையை மீண்டும் அதே பழைய நிலை

யில் கட்டுவிப்பதற்கு, பூநகரியின் தொன்மையை அழியவிடாமல் பாதுகாப்பத ற்கு முயற்சிகள் எடு க்கப்படுகின்றன என்று தகவல். மண்ணித்தலைச் சிவன் கோவிலையும் அங்கிருக்கும் பாழடைந்த தேவாலயத்தையும் புனரமைப்பதற்கும் முயற்சிகள் நடந்தால் சிறப்பு.

சனங்கள் புழுங்கப் புழுங்கத்தான் ஊர்களும் பட்டினமும் சிறக்கும். பள்ளிக்கூடாவில் உள்ள மீன்பிடித்துறையில் அலைகளோடு பேசிக் கொண்டிருக் கும் படகுகளில் பகலிலும் இரவிலும் மீனுக்கும் இறாலுக்கும் கடல் அட் டைக்குமாக போய் வருகி றார்கள். அட்டைக்குளிப்பு ஒரு நல்ல தொழிலாக மாற வேணும் என்று பல விதமாக வெல்லாம் முயற்சி செய்து பார்க்கிறார்கள். பூநகரியில் பச்சை காண வேணும். அங்கே நீடித்துப் படர்ந்திருக்கும் வரட்சியைப் போக்க வேணும் என்று மாளாப்புக் குளத்தைக் கட்டும் முயற்சிகளும் நடக் கின்றன. அது வெற்றியடைந் தால் பூநகரியின் தண்ணீர்ப் பஞ்சம் தீர்ந்துவிடும். தண் ணீர்ப்பஞ்சம் இந்த மாதிரிப் பலதும் பத்தும் நடக்கிறது.

பூநகரியில் பல நூற் றாண்டுகளுக்கு முன், ஒரு ராஜ்ஜியம் இருந்திருக்கிறது. அதற்கான அடையாளச் சின் னங்கள் அங்குமிங்குமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சோழர் காலத்தில் பூநகரி ராஜ்ஜியம் செழித்தி ருக்கலாம் என்று வரலாற் றாய்வாளர்கள் சொல்கிறார் கள். பன்னெடுங் காலத்திலி ருந்தே மக்கள் குடியிருப் புகளும் விளைநிலங்களும் இருந்து வருகின்றன. தொல் குடியிருப்பு என்ற வகையி லேயே ஊர்களும் உள்ளன. தொழில் ரீதியாக, சமூக ரீதியாக ஒருகாலம் அப்படி அமைந்திருக்கலாம். இடைக் குறிச்சி, மறவர் குறிச்சி, செட்டிய குறிச்சி, கொல்ல குறிச்சி...அரசபுரம், கறுக்காய்த் தீவு, தம்பிராய், ஞானிமடம், நாகதேவன்துறை, அத்தாய், நல்லூர், ஆலங்கேணி... என. இது எப்படி வந்தது என்று தெரியவில்லை. சில பெயர்கள் அழகும் அருமையும். சில அப்படியல்ல. என்றாலும் பொருந்தாதவையும் இப்படியே இன்னும் வைத்திருக்கத்தான் போகிறோமா?

# எல்லாம் புனிதங்களின் பெயரால்


*மயானங்கள் புனிதமான காலத்திலிருந்து*
*வெளிக்கிளம்பிய தீயின் நாவுகள்*
*பசுந்தரைகளில் படர்ந்தது*
*குருவிச்சை படர்ந்த தோப்புக்களின்*
*இலைகள் உருவப்பட்டன*
*புனிதர்கள் ஆசீர்வதிக்கப்பட்ட*
*சொற்களில்*
*இரத்தம் கசிந்தபடியே இருந்திருக்கிறது*
*மறைப்புக்கள் இன்றியே*
*புணரத்தொடங்கின மிருகங்கள்*
*ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் நாவில்*
*சட்டம் சிறைப்பட்டது.*

*புராணகாலத்து*
*புஸ்பக விமானத்தில்வந்து*
*தேவகுமாரர்கள் மீட்பார்கள் என*
*மகாஜனங்கள் நம்பினார்கள்.*
*இரக்கமற்ற அரக்கர்களின்கோடரிகள்*
*தலைகளை பிளந்தபடியே இருந்தன.*


*புனித நீர் தெளிக்கப்பட்டவர்களாய்*
*அலைந்தவர்கள்*
*வேள்விக்காய்*
*இன்னும் வெள்ளாடுகளைச்*
*சாய்த்தபடியே இருந்தனர்.*

*தப்பித்த ஆடுகளைச் சாய்ப்பதற்கென*
*அம்புகள் புறப்பட்டன*
*எல்லாம்*
*புனிதங்களின் பெயரால் நடந்தேறியது*
*மயானங்கள்.*

*புனிதங்களான காலத்திலிருந்து*
*இரட்சிய மயானங்களாலான காலத்தில்*
*வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.*




-கு.ரஜீவன்-



# காட்சிமாற்றம்

வெளிவாசல் பாலன்


எங்கள் ஊர்களிலின்று முள்முருக்கம் மரங்களில்லை
நண்டுச் சினையைப்போலந்தச் சிவந்த பூக்களுமில்லை
எங்கள் தோட்டத்தில் பூசினிச் செடியில்லை
மஞ்சள் இதழ் விரித்த பூவரச மரங்களுமில்லை
தோப்பிலே மாட்டுக்கொட்டிலும் வண்டிலுமில்லை.
முற்றத்து வேம்பின் கீழே
மாலைக் காற்று வாங்கும் ஆட்களுமில்லை
அவர்களுக்கு நேரமுமில்லை
மாலையில் வளையமுருட்டும் சிறுவர்களில்லை.
கெந்திக்கோடு விளையாடும் சிறுமிகளும்
பாடிக்கொண்டும் பேசிக்கொண்டும் பறந்து செல்லும்
கிளிக் கூட்டமுமில்லை.
பொந்துகளில் மைனாக்களுமில்லை
மைனாக்களைத் தேடிச் செல்லும் பாலுச்சித்தப்பாவுமில்லை
உடும்பு வேட்டைக்குச் செல்லும் மாயழகுவும்
வீமன் நாயுமில்லை.
வைகாசிக் காற்றுக்கு வெள்ளைவெளி மணலில் நடந்து
சுரவுன்னம் பழம் பறிக்கும் அழகிகளுமில்லை
ஆடியிலே பட்டமேற்றும் சின்னத்தம்பி மாமாவும் தங்கராசுவுமில்லை
அம்மி கொத்தவும் சாத்திரம் சொல்லவும் வருகிற
சிங்காரம் குடும்பமுமில்லை
ஆண்டுக்கொரு தடவை யாத்திரை போகிற ராமசாமித்
தாத்தாவுமில்லை
பங்குனிக் குளிர்த்திக்கு
மடை பரவிக் கலையாடும் செல்லையாப் பூசாரியுமில்லை
கைப்பணத்தை மார்பு கச்சைக்குள் மறைத்து வைத்து
கணக்குப் பார்க்கும் பசுபதியும் தங்கமும்
சீட்டுக்கார அன்னமுமில்லை
ஆற்று மீனைக் கலைத்து வந்து குளத்திலிறக்கி
குளத்து மீனைத் தேடிச் சுழியோடும்
சிவலை குறாப்புமில்லை.



காலைச் சூரியனுக்கு சலங்கை கட்டி
ஊரெல்லைத் தெருவிலே கிடுகேற்றிப் போகும் வண்டிகளுமில்லை
செம்மண் புழுதியோடு தானுமொரு புழுதியானாய்
உழுது புரட்டும் கந்தம்மானும் அவருடைய மயிலைக் காளைகளுமில்லை.
நாவலடி வளவில் நுங்கு பொறுக்கும் காலைகளுமில்லை அம்மாவுமில்லை
பனம் பழங்களை ஈக்கும் மாடுகளும்
மாடுகளின் மனமெங்கும் வாசமாய்த் தங்கிய பொன்னுக் கிழவியுமில்லை.
வாகையடி, ஆலடி, புளியடி, புங்கடி
சின்னத்தம்பி கடையடி எங்குமிருந்த மரங்களும் கடைகளுமில்லை.
முட்டியிலே கள்ளேந்தி வரும் வல்லியில்லை
ஆலமரத்தடியில் கதையளக்கும் சிவமுமில்லை
ஆலமரமுமில்லை.
விழுதுகளில் ஊஞ்சலாடிய யோகனும் சின்னாம்பியும்
சிவச்செல்வமுமில்லை.
ஆனி உத்திரத்துக்கு காளி கோயிலில்
தீ மிதிக்கும் வெள்ளைச்சாமியும்
சீனடி சிலம்படி ஆடும் முத்துக்கறுப்புவுமில்லை
வட்டி வாங்கினாலும்
ஊரோடு ஒத்தோடி
நாலுபேர் வாயில் நல்ல மனுசன் என்று சொல்கிற அய்யம்பிள்ளையுமில்லை.
ஆடுகளின் கத்தலும் கதறலோடும்
துருப்பிடித்த காரில்
ஊர்ந்து வரும் ஆட்டுக்காரக் கந்தையாவும் இல்லை
ஆட்டு யாவாரமுமில்லை.
மாடுகளைத் தீர்த்து வாங்கும் கரீம் காக்கவுமில்லை.
கள்ளுமணத்தோடு கமழ்ந்து வருகின்ற பாட்டோடு உலவும்
காத்தார் ரத்தினமுமில்லை.
நிலமெல்லாம் நிறைஞ்சு விளைஞ்சிருக்கிற நெருஞ்சியும்
இக்கிரியுமில்லை
கோடை வெக்கைக்கு கொப்பெல்லாம் பூவாகி
மரமெல்லாம் மலராகி நிற்கும் கொண்டலும் ஆவரசுமில்லை.

அழியவேயில்லை
அன்றிருந்த வானமும் நிலவும் நட்சத்திரங்களும்
சூரியனும் கடலும் மலைகளும் ஆறுகளும்
பறவைகள் இன்னும் பறவைகளாக இருப்பதும்
அவை பறக்க மறக்காதிருப்பதும்
புற்கள் இன்னும் புற்களாகவும் பூக்கள்
இன்னும் பூக்களாகவே இருப்பதும்.





காஞ்சனா வரதரூபன்

மல்லாவி முத்துக்குமார் கமலநாதன் (சந்திரன்)

# மாடுகளோடு வாழ்தல் அல்லது வாழ்தலின் சுகம்

**"மாத்தளனிலிருந்து வெளியேறிப் படையினரிடம் போய், பிறகு அங்கேயிருந்து அகதி முகாம் வாழ்க்கையைக் கண்டு அனுபவித்த பின்னர், மீண்டும் மல்லாவியில் இன்னொரு அகதிக் கோலத்தில் வந்திறங்கினார் சந்திரன். வந்திறங்கிய சந்திரனுக்கு வெறுமையாக இருந்த பட்டிகளைப் பார்க்க சகிக்க முடியவில்லை. அப்படியொரு கோலத்தில் அவருடைய வயதில் வெறுமையான பட்டியைக் காணவேயில்லை. அதை விட அவருடைய தெருவிலும், வீட்டிலும் மாடுகளின் வாசனையே இல்லாமலிருந்தது."**

**வன்னி** - மல்லாவியிலிருக்கும் சந்திரன் என்ற முத்துக்குமாரு கமலநாதன் வியப்பூட்டுகின்ற ஒரு மனிதர். எதற்கும் கிறுங்காத, கவலைப்படாத ஒரு பிறவி. யுத்தம் அவரைக் களைப்படைய வைத்தாலும் அவர் ஓய்ந்து விடவில்லை. சோராமல் ஓடிக்கொண்டிருக்கிறார். ஓயாமல் இயங்கிக் கொண்டிருக்கிறார். எப்போதும் சிரித்துச் சந்தோசமாகவே இருக்கும் சந்திரனுக்கு போர் முடிந்த பிறகு பிரச்சினையாக இருந்தது அவருடைய ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகளையும் எப்படியாவது தேடிக் கண்டு பிடித்து விடவேண்டும் என்பதுதான்.

யுத்தம் தீவிரமாகியபோது விட்டுச் சென்ற மாடுகளை மீண்டும் சேர்த்துக் கொள்வது பெரும்பாடாக இருந்தது. இதற்காக அவர் இரவு பகலாக அலைந் தார். மாடுகள் எங்கெல்லாமோ சிதறி விட்டன. வட்டக்கச்சி, முத்தையன்கட்டு, இயக்கச்சி, ஆனையிறவு, விசுவமடு, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு என எல்லா இடங்களிலும் அவருடைய மாடுகள் நின்றன. ➡

எல்லாவற்றையும் எப்படிப் பிடித்துக் கொள்வது? இது ஒரு பெரிய சவால் அல்லவா! அவருடைய மாடுகளைப் போல இன்னும் பலருடைய மாடுகளும் இப்படி எல்லா இடங்களிலும் நின்றன. ஒன்றல்ல, இரண்டல்ல. ஆயிரக்கணக்கிலுமல்ல. லட்சக்கணக்கில். இந்தப் பெரும் போருக்குள் சிக்கித் தப்பிய மாடுகளின் தொகையே இது. யுத்தத்துக்கு முன்னர் வன்னியிலிருந்து மாடுகளின் தொகை பன்னிரண்டு லட்சம் என்று தகவல்.

எத்தனை லட்சம் மாடுகள் நின்றாலும் தன்னுடைய மாடுகளை சந்திரனுக்குத் தெரியும். அவருடைய மாடுகளுக்கு அடையாளக் குறிகள் உண்டு. குறியில்லா விட்டாலும் நாளும் பொழுதும் பழகியதால் தன்னுடைய மாடுகளின் குணங்குறி எது என்று அவருக்குத் தெரியும். பட்டியை வைத்திருக்கும் எவருக்கும் அவர்களுடைய மாடுகளை அடையாளந் தெரியும். இது தங்களுடைய மாடுகளா இல்லையா என்பதை பார்த்தவுடனே சொல்லிவிடுவார்கள். மட்டுமல்ல, ஏனைய மாடுகள் யாருடைய மாடுகள்? எந்தப் பட்டியைச் சேர்ந்த மாடுகள்? என்பதையும் கூட. அப்படியொரு பழக்கம் மாடு வளர்ப்பில் உண்டு. தினமும் பார்த்துப் பழகிய பழக்கம். இதுவொரு விசித்திரமான அனுபவந்தான். ஆயிரத்துக்கு மேலான மாடுகளையும் மனதில் பதிந்துவைத்திருக்கிறதென்றால், அப்பப்பா.. எந்தக்கணனி தோற்றுவிடும்.

சந்திரன் பள்ளிப் பருவத்திலேயே மாடுகளோடு கூடிவாழத் தொடங்கியவர். அவருக்குப் பாடங்களை விடப் படிப்பை விட இதுவொரு அலாதியான உலகமாக இருந்தது. மாட்டுக்கார வேலன் படத்தை மட்டும் பதினேழு தடவை பார்த்ததாகச் சொல்கிறார் சந்திரன். அவர் பிறந்தது சிலவேளை காளை (ரிஷப) ராசியோ தெரியாது. மாடுகளின் மீது அப்படியொரு பிடிப்பு. அத்தனை காதல். இப்போதும் மாடுகளோடுதான் சந்திரனின் வாழ்க்கை போகிறது. அவருக்கு மட்டுமில்லை. அவருடைய பிள்ளைகளுக்கும் அதுதான் உலகம். அதுதான் வாழ்க்கை.

யுத்தத்துக்கு முன்பு, 2008 காலப்பகுதியில் சந்திரனிடம் ஆயிரத்தி எண்ணூறு மாடுகளுக்கும் அதிகமாக நின்றன. மூன்று சாதி மாடுகள். ஒன்று கொக்குத்தொடுவாய் வெள்ளை வடக்கன் இனம். நீளக் கொம்புகளையுடைய இந்த மாடுகள் அத்தனையும் வெள்ளை. அடுத்தது, ஊர் மாடுகள். மூன்றாவது, கலப்பு. கலப்பினம் என்றால், நல்ல இனக் காளைகள் மூலம் சினைப்படுத்தப்பட்டவை. இந்தக் கலப்பினமே அவரிடம் கூடுதலாக நிற்கிறது.

சந்திரனின் பூர்வீகம் நெடுந்தீவு. அப்பா முத்துக்குமாரு நெடுந்தீவிலிருந்து 1950 களில் வன்னி – மல்லாவியில் குடியேறினார். சந்திரனின் இளமைக்காலம் மல்லாவி யிலேயே கழிந்தது. முத்துக்குமாருவிடம் அந்த நாட்களில் ஆயிரம் மாடுகளுக்கு மேல் நின்றன.

ஆரம்பத்தில் அவர், வன்னியில் இருந்த பூர்வ குடிகளிடம் கொஞ்ச மாடுகளை வாங்கினார். பிறகு நெடுந்தீவிலிருந்த மாடுகளையும் வள்ளத்தில் ஏற்றி, மல்லாவிக்குக் கொண்டு வந்தார். நெடுந்தீவுத் துறையில் ஏற்றி, பள்ளிக்குடா, நாச்சிக்குடா, வலைப் பாட்டுப் பகுதிக்குக் கொண்டு வந்து இறக்கி, பிறகு, அங்கேயிருந்து நடத்திக் கொண்டு மல்லாவிக்கு வந்திருக்கிறார். சிலபோது கோடையில் வள்ளம் கொண்டு வரமுடியாதபடி தரை தட்டுமென்பதால், பூநகரி இறங்கு துறையில் இறக்கி, பிறகு அங்கேயிருந்து அக்கராயன்குளம், உயிலங்குளம் வழிகளால் கொண்டுவந்திருக்கிறார். இன்னும் கொஞ்ச மாடுகளை குறிகட்டுவான், ஊர்காவற்றுறை போன்ற இடங்களிலுள்ள துறைகளால் இறக்கி, பிறகு, அங்கேயிருந்து நடத்திக் கொண்டும் வந்திருக்கிறார். இப்படியெல்லாம் முத்துக்குமாரு கொண்டு வந்த மாடுகளின் சந்ததியே இப்பொழுது சந்திரனிடம் பெருகி, யுத்தத்தில் சிதைந்து சந்திரனைத் தேடப்பண்ணி...



**சந்திரன் பள்ளிப் பருவத்திலேயே மாடுகளோடு கூடிவாழத் தொடங்கியவர். அவருக்குப் பாடங்களை விடப் படிப்பை விட இதுவொரு அலாதியான உலகமாக இருந்தது. மாட்டுக்கார வேலன் படத்தை மட்டும் பதினேழு தடவை பார்த்ததாகச் சொல்கிறார் சந்திரன். அவர் பிறந்தது சிலவேளை காளை ரிஷப ராசியோ தெரியாது. மாடுகளின் மீது அப்படியொரு பிடிப்பு. அத்தனை காதல். இப்போதும் மாடுகளோடுதான் சந்திரனின் வாழ்க்கை போகிறது. அவருக்கு மட்டுமில்லை. அவருடைய பிள்ளைகளுக்கும் அதுதான் உலகம். அதுதான் வாழ்க்கை.**

1970 களில், 1980 களில் மல்லாவி யில் கால் நடை வளர்ப்புக்கான மையத் தின் மூலமாக நல்லினச் சினைப் படுத்தல்கள் நடந்தன. அதில் முத்துக்கு மாருவின் ஊர் மாடுகளும் சேர்க்கப்பட்டு, கலப்பினம் உருவாகியது. கலப்பினம் உருவாக பட்டி பெருகியது. பெருகிய பட்டி தெருநீளத்திலும் வயல் வெளி யிலும் நிறைந்திருந்தது.

இப்படி முத்துக்குமாரு சேர்த்து, வளர்த்த மாடுகள் ஆயிரத்துக்கு மேல். இந்த மாடுகளோடு சேர்ந்து வளர்ந்தார் சந்திரனும். சந்திரனுடைய சகோதரர் களுக்கும் தாராளமாக மாடுகள் நிற்கின் றன. ஆனால், அவர்களை விடச் சந்திர னிடமே கூடுதலான மாடுகள் உண்டு.

சேர்த்துச் சேர்த்து வளர்த்த மாடு களை யுத்தத்தின் போது காப்பாற்று வதற்காக சந்திரன் படாத பாடெல்லாம் பட்டார். முதலில் மல்லாவியிலிருந்து இடம்பெயர்ந்து மாங்குளத்துக்குப் போனார். அங்கே பட்டிகளை அடைத்தார். ஆறு பட்டிகள். ஒவ்வொரு பட்டியிலும் தனித்தனி இனங்கள். புதிய இடங்களில் பட்டிகளை அடைப்பது என்றால்,





**ஒரு வீட்டில் மாடுகள் நின்றால் அங்கே செல்வம் தானாகத் தேடிவரும் என்று எங்கள் ஐயா சொல்வது நினைவில் வருகிறது. இது வீட்டில் மட்டுமல்ல நாட்டிலுந்தான். அந்தச் செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பவர்களில் மல்லாவிச் சந்திரன் என்ற கமலநாதனும் ஒருவர். இப்பொழுது சந்திரனிடம் மீண்டும் பட்டி பெருகி விட்டது. தந்தை முத்துக்குமாருவைப் போலச் சந்திரனும் மாட்டு வாசனையோடு மல்லாவியில் உலாத்துகிறார்.**

பெருங்கஸ்ரம். அதிலும் தொகையான மாடுகளைக் கட்டி ஆள்வது ரொம்பக் கடினம். ஆனாலும் வேறு வழியில்லை. எப்படியோ சமாளித்துப் பட்டிகளை அடைத்துக் கொண்டார்.

அப்படி அங்கே பட்டியை அடைத்துப் பராமரித்துக் கொண்டிருக்கும்போது அங்கேயிருந்தும் இடம் பெயர வேண்டி வந்தது. அப்படியே கிளிநொச்சிக்கு வந்து, வட்டக்கச்சிக்குப் போனார் சந்திரன். வட்டக்கச்சியில் பட்டியை அடைத்தார். அங்கே தனித்தனியாக பட்டியைப் போட முடியவில்லை. இருக்கிற நிலைமைக்கேற்றமாதிரி, பெரிய தென்னங் காணிகளில் மாடுகளை விட்டார். அங்கே எல்லா இனமும் ஒன்றாகக் கலந்தன.

ஆனால், அங்கேயும் யுத்தம் வந்தது. பிறகென்ன? ஓட்டந்தான். மாடுகளைச் சாய்த்தார். ஆனால், எங்கே கொண்டு போகிறது என்றுதான் அவருக்குத் தெரியவில்லை. மாடுகளை விற்கவும் மனமில்லை. விலையும் குறைவு. வைத்திருப்பதும் சிரமம். மாடுகளைவிட, அவருக்குக் குடும்பம் வேறுண்டு. வயதுக்கு வந்த மகன். அந்த நாட்களில் வயதுக்கு வந்த பிள்ளைகளை பாதுகாப்பதே பெருஞ்சிரமம். யுத்தம் எப்போதும் இளைய தலைமுறையில்தான் அதிகம் குறி வைக்கிறது. தவிர, வீட்டுப் பொருட்கள், உழவு இந்திரம், நெல்மூடைகள் என்று ஏராளம் பொறுப்புகளும் பொருட்களும்.

சந்திரனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஆனாலும் எதையாவது செய்துதானே ஆகவேணும். சந்திரனுக்கு மட்டுமா இப்படி நெருக்கடி? இப்படிப் பிரச்சினைகள்? ஒரு கட்டத்தில், மாத்தளனை நோக்கிப் போகும் போது மாடுகளை கைவிட்டார். அதைவிட வேறு வழிகள் இல்லை. ஆனால், அப்படி அதுகளை அந்தரிக்க விட்டிட்டுப் போகிறதை நினைக்க அவருக்கு வந்த வேதனையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வாய்விட்டே அழுதார். ஒவ்வொரு மாடும் சந்திரனைப் பொறுத்தவரை அவருக்குப் பிள்ளைகளே. பல்லை இறுகக் கடித்துக் கொண்டு, நெஞ்சிலே பெருகிய அத்தனை வலிகளையும் தாங்கிக் கொண்டு அவர் மாத்தளனுக்குப் போனார். பிறகெப்போதும் தான் கைவிட்டு வந்த மாடுகளை பார்ப்பேன் என்ற நம்பிக்கை மாத்தளனில் அவருக்குக் குறையத் தொடங்கியது.

மாத்தளனிலிருந்து வெளியேறிப் படையினரிடம் போய், பிறகு அங்கேயிருந்து அகதி முகாம் வாழ்க்கையைக் கண்டு அனுபவித்த பின்னர், மீண்டும் மல்லாவியில் இன்னொரு அகதிக் கோலத்தில் வந்திறங்கினார் சந்திரன். வந்திறங்கிய சந்திரனுக்கு வெறுமையாக இருந்த பட்டிகளைப் பார்க்க சகிக்க முடியவில்லை. அப்படியொரு கோலத்தில் அவருடைய வயதில் வெறுமையான பட்டியைக் காணவேயில்லை. அதை விட அவருடைய தெருவிலும், வீட்டிலும் மாடுகளின் வாசனையே இல்லாமலிருந்தது. ஊருக்கு வராமலே இருந்திருக்கலாமோ என்று எண்ணினார்.

சந்திரனுக்குப் பசிக்கவில்லை. நித்திரை வரவில்லை. ஒரு இடத்தில் இருப்புக் கொள்ள முடியவில்லை. தான் கைவிட்டுச் சென்ற மாடுகள் எங்கே? என்ன மாதிரி, என்ன கோலத்தில் நிற்கும்? என்று பார்க்க வேணும் என்று மனம் துடித்தது. எத்தனை மாடுகள் மிஞ்சியிருக்கும்? குண்டு வீச்சிலும் ஷெல்லடியிலும் செத்திருக்குமா? பிறகு யாராவது பட்டி பட்டியாக ஏற்றிக்கொண்டு வெளியூர்களுக்குக் கொண்டு போயிருப்பார்களா?

அப்பொழுது கிளிநொச்சிக்குப் போவதற்கு யாருக்கும் அனுமதி வரவில்லை. என்றாலும் அவர் அங்குமிங்குமாக அலைந்து கொண்டிருந்தார். இடையில் ஒரு நூறு மாடுகள் வரையில் மல்லாவியில் வயற்கரைப்பக்கமாக நிற்பதாக அறிந்தார். உடனே அங்கே பறந்தார். எதிர்பார்த்த மாதிரியே அங்கே நூற்றுக்கும் அதிகமான மாடுகள் நின்றன. அதுகளைப் பார்த்து அவர் அழுதார். அது பிரிந்தவர் மீண்டும் கூடும்போது நிகழும் ஆனந்தக் கண்ணீர். மகிழ்ச்சியின் விசும்பல்.

என்றாலும் மீதி மாடுகள்...?

மிகுதி மாடுகளை எப்படியாவது தேடவேணும். அதற்கு வழியென்ன? சந்திரனைப் போல வேறு ஆட்களும் தங்களுடைய மாடுகளுக்காக இப்படி அந்தரித்துக் கொண்டி ருந்தார்கள். மல்லாவி, துணுக்காய், பனங்காமம், கல்விளான் பகுதிகளில் அனேகமாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் சராசரியாக பத்துப் பதினைந்து மாடுகளுக்குக் குறையாமல் நிற்கும். இந்த இடங்களில் இருக்கின்ற சிலரிடம் சந்திரனைப்போல ஆயிரம், இரண்டாயிரம் மாடுகள் என்று நிற்கின்றன. இதையெல்லாம் விட்டுவிட முடியுமா?

அதனால், கிராம சேவையாளருக்குக் கடிதம் எழுதி, பிரதேச செயலரிடம் விண்ணப்பித்து, கால் நடைச் சங்கத்திடம் உறுதிப்படுத்தி, கால் நடை வைத்தியரிடம் சிபாரிசு வாங்கி, படைத்தரப்பில் அனுமதி பெற்றுக் கொண்டுபோய், மாடுகள் நிற்கிற பகுதிகளிலுள்ள கிராம அலுவலர், பிரதேச செயலர், கால் நடை அபிவிருத்திச் சங்கம், படைத்தரப்பு ஆகியவற்றிடம் மீண்டும் அனுமதிகளை வாங்கி அங்கும் இங்கும் அலைந்து, சாப்பாடு, தண்ணீர் இல்லாமல் கிடந்து இன்னும் கொஞ்ச மாடுகளைப் பிடித்து வந்திருக்கிறார் சந்திரன்.

இப்படிக் கைவிட்டுப் போன மாடுகளைப் பிடிப்பதற்காகப் பொதுப்பட்டியை அடைத்து வைத்திருந்தனர் சிலர். இது சிலருக்கு ஒரு புதிய தொழிலாகியிருந்தது. கைவிடப்பட்ட மாடுகள் கட்டாக்காலிகளாக அங்கும் இங்குமாக நிற்கும்பொழுது அதைப் பட்டியில் அடைத்து மாட்டின் உரிமையாளர்களிடம் மீண்டும் ஒப்படைப்பது.

சந்திரன்ஓடிக் கொண்டே இருந்தார். போரில் கொல்லப்பட்ட. காயப்பட்ட மாடுகளை விட. மிஞ்சிய மாடுகளை எப்படியாவது சேர்த்துக் கொண்டுவந்து விட வேண்டும் என்று பாடுபட்டார். அவரைப் போல வேறு மாட்டுக் காரர்களும் இப்படித்தான் காடு. மேடெல்லாம் அலைந்தார்கள். கள்வருக்காக பயப்பட்டார்ள். தொலைந்து போனவை. தவறிப்போனவை எல்லாவற்றையும் விட்டு. தேடிக்கண்டு பிடித்தவற்றோடு ஊருக்கு வந்தார்கள். ஊரில் புதிய மாடுகளையும் வழங்கும் திட்டம் வந்தது. நல்லின மாடுகளை மானியமாகவும் கடனுக்கும் அரசாங்கமும் தொண்டர் அமைப்புகளும் வழஙின. மெல்லமெல்ல மாட்டு வாசனை ஊரில் தலையெடுத்தது.

அதற்காக அவர்கள் பணம் கொடுப்பார்கள். ஆகவே அந்த மாடுகள் நிற்கின்ற பிரதேசங்களில், பொதுப் பட்டிகளை அடைத்திருந்தனர்.. இப்படிப் பொதுப்பட்டி களை அடைக்கிறவர்கள் குறியுள்ள மாடுகளை உரியவர்களிடம் அடையாளங் களின்படி ஒப்படைக்கிறார்கள். மாடு களோடு நிற்கும் கன்றுகளை தங்களு டையவை என்று உரிமை கோருகிறார் கள். கன்றுகளுக்கு குறிகள் இல்லை என்பது இவர்களுக்கு வசதி.

ஆனால், பால் குடிமாறாத கன்றுகளை ஓரளவுக்கு காப்பாற்றி விட்டதாகச் சொல் கிறார் சந்திரன். தாய்ப் பசுவைத் தேடும் கன்றை வைத்து தாங்கள் அடையாளங் காண்பதாக அவர் சொல்கிறார். ஆனால், கன்றுகளைத் தனியாகப் பிரித்து, வேறிடங்களில் தனிப்பட்டி அடைத்து, ஆயிரக்கணக்கில் கன்றுகளைச் சேர்த்தும் சிலர் வைத்திருக்கிறார்கள். இது தொடர்பாக கால் நடைச் சங்கத்திடம் சந்திரன் உட்படச் சிலர் முறைப்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். சில கன்றுகள் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டன. மற்றவை அவர்களுடைய சொத்துகளாகி விட்டன.

கன்றுகளைப் பிரித்ததால், தாய்ப்பசுக்களின் பால் மடி கனத்து நோவெடுக்க அந்தப் பசுக்கள் கத்தித்திரிவதைப் பார்த்தபோது கவலையாக இருந்தது என்று சொல்லித் துக்கப்படுகிறார் சந்திரன். மாடுகளோடு வாழ்ந்தவருக்குத்தான் தெரியும் அவற்றின் துக்கவும் வலியும். ஆனாலும் யுத்தத்தில் மிஞ்சியது பொக்கிஷம். அப்படித்தான் சந்திரனும் ஆறுதலடைந்தார்.

சந்திரனுக்கு இன்னும் 200 மாடுகளுக்கு மேல் வரவேண்டியிருக்கிறது. இது வரையிலும் ஆயிரத்து ஐநூறு வரையான மாடுகளைச் சேர்த்து விட்டார். மிகுதி மாடுகளுக்காக அவர் தன்னுடைய கூட்டாளிகளுடன் அலைந்து திரிந்தார். மாடுகளைத் தேடி வீட்டை விட்டுப் போனால், மறுபடியும் வீடு திரும்புவதற்கு இரண்டு வாரங்கூட ஆகியிருக்கிறது.

அவருடைய புதிய கூட்டாளிகளில் ஒருவராக இருந்தவர் முள்ளியவளையில் இருந்து 1990 இல் வெளியேற்றப்பட்டுப்போன நமீம். இவருக்குச் சிங்களம் நன்றாகத் தெரியும் என்பதும் மாடுகளைப் பிடிப்பதில் இவர் தேர்ச்சியுள்ளவர் என்பதும் சந்திரனுக்குப் பிளஸ் விசயங்கள். என்னதான் பிளஸ்கள் இருந்தாலும் மாடுகள் நிற்கும் இடங்கள் எல்லாத்துக்கும் போவதற்கு அனுமதியில்லை. இதற்கிடையில் மலிவு விலைக்கு மாட்டிறைச்சி விற்கும் ஆட்களின் ஆபத்துகள் அதிகம். அதையும் முறியடிக்க வேணும். கட்டாக்காலியாக நிற்கும் மாடுகளை இரவோடிரவாக அடித்து இறைச்சியாக்கி விடுகிறார்கள் சிலர். 'அவர்களுக்கென்ன கொண்ட முதலில் நட்மா? ' என்று கோவத்தோடு கேட்கிறார் மாடுகளை வளர்க்கும் இன்னொருவரான வட்டக்கச்சியைச் சேர்ந்த மணியம்.

யுத்தம் தின்ற மாடுகளை விட மனிசர் தின்கிற மாடுகள் அதிகம். யுத்தத்தின் போது அழிந்த மாடுகளை விடவும் யுத்தத்துக்குப் பின்னர் கள்வர்களாலும் இறைச் சிக்காரராலும் இழக்கப்பட வேண்டியிருக்கிற மாடுகளின் தொகை கூடுதலாக இருக்கிறது என்று சொல்கிறார் சந்திரன். ஆனால், இதையெல்லாம் பார்த்துக் கொண்டும் பொறுத்துக் கொண்டும் இருக்கு ஆளல்ல அவர். அவரிடம் எப்போதும் கயிறும் கத்தியும் இருக்கிறது. 'மாடு வளர்க்கிறவன் கயிறில்லாமலும் கத்தியில்லாமலும் வாழ முடியாது' என்கிறார் அவர்.

மாட்டைக் கட்டுவதற்கும் கயிறு வேணும். கள்வரைக் கட்டுவதற்கும் கயிறு வேணும். இருக்காதா பின்னே, ஒரு மாடு இப்போது முப்பது ஆயிரத்திலிருந்து அறுபது ஆயிரம் வரையில் விலையாகிறது. இந்த விலைக்கு மாடு விற்கும்போது திருட்டுக்குக் குறைவிருக்காது. இந்த விலையான மாடுகளை லேசில் விட்டுவிடவும் முடியாது.

சந்திரன் ஓடிக் கொண்டே இருந்தார். போரில் கொல்லப்பட்ட, காயப்பட்ட மாடு களை விட, மிஞ்சிய மாடுகளை எப்படியாவது சேர்த்துக் கொண்டுவந்து விட வேண்டும் என்று பாடுபட்டார். அவரைப் போல வேறு மாட்டுக் காரர்களும் இப்படித்தான் காடு, மேடெல்லாம் அலைந்தார்கள். கள்வருக்காக பயப்பட்டார்கள். தொலைந்து போனவை, தவறிப்போனவை எல்லாவற்றையும் விட்டு, தேடிக்கண்டு பிடித்தவற்றோடு ஊருக்கு வந்தார்கள். ஊரில் புதிய மாடுகளையும் வழங்கும் திட்டம் வந்தது. நல்லின மாடுகளை மானியமாகவும் கடனுக்கும் அரசாங்கமும் தொண்டர் அமைப்புகளும் வழங்கின. மெல்ல மெல்ல மாட்டு வாசனை ஊரில் தலையெடுத்தது.

ஒரு வீட்டில் மாடுகள் நின்றால் அங்கே செல்வம் தானாகத் தேடிவரும் என்று எங்கள் ஐயா சொல்வது நினைவில் வருகிறது. இது வீட்டில் மட்டுமல்ல நாட்டி லுந்தான். அந்தச் செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பவர்களில் மல்லாவிச் சந்திரன் என்ற கமலநாதனும் ஒருவர். இப்பொழுது சந்திரனிடம் மீண்டும் பட்டி பெருகி விட்டது. தந்தை முத்துக்குமாருவைப்போல சந்திரனும் மாட்டு வாசனையோடு மல்லாவியில் உலாத்துகிறார்.

பாலைக் கொள்வனவு செய்வதற்காக சந்திரன் வீட்டுக்கு - சந்திரனின் பட்டிக்கு வண்டிகள் வருகின்றன. மல்லாவியில் மட்டுமல்ல, வன்னியெங்கும் இந்த மாதிரிப் பால் பெருக்கெடுக்கும் பட்டிகள் பெருக வேண்டும். அப்படிப் பெருகினால் முன்னரைப் போல பாலும் தேனும் பெருகியோடிய வன்னியை நாம் மீண்டும் காணலாம். அந்த வன்னியில் மகிழ்ச்சியாக வாழலாம்.

# சொல்லியே தீரணும்...

என்ர மருமோளுக்கு காத்தால எழும்பினா பிள்ளையள எழுப்பி பள்ளிக்கூடம் விடுறதுக்கிடையில பிறசர் ஏறிப்போகுது. மூச்சுக்குமுன்னூறு தரம் பிள்ளை எனக்கு பிரசர ஏத்தாமக் குளியம்மா? எட கண்ணணா கோம்வேக் இப்பதான் எழுதிறியா? மணிக்கூட்டப்பார் பாப்பம். ஒரே சத்தந்தான்.

இதுக்கு வெள்ளணக் காத்தாலதான் எழும்பி பாணை வாங்கி ஒரு பருப்புச் சாம்பாரோ சம்பலோ செய்யிறதுதான். இடையில நான் தானுங்கோ எழும்பி பருப்பு வைக்கிறதும் அந்த நாளையில நாங்களும் மூண்டு நாலு பிள்ளையளப் பள்ளிக்கனுப்பி புரியன வேலைக்கனுப்பி நாங்களும் தோட்டத்துக்க வேலை செய்து வீட்டிலையும் மூண்டு வேளை சமைச்சுத்தானே திண்ட நாங்கள்.

எங்களுக்கு உந்தப் பிறசரும் தெரியாது பீபீயும் தெரியாது. பின்ன சும்மாவோ காலைச் சாப்பாட்டுக்கு அரிசி நனையப்போட்டு நானும் மூத்தவளுமா இடிச்சரிச்சு வறுத்து வைக்கிறதுங்கோ சனி நாயித்துக் கிழமையில பிள்ளையள் வீட்டில நிக்குங்களெண்டு அப்பத்துக்கு தோசைக்குப் போடுவன். நான்தான் ஆட்டுக்கல்லில உழுந்தரைச்சு அரிசியிடிச்சுப்போடுவன். சின்னனுகள் அங்கின அரிக்கக்கொள்ளவருங்கள்.

இதுக்க பட்டி கூட்டியள்ளி பசுமாடுகள அடைச்சு காலை மாலை பால் கறந்து கண்டுகள மேயக்கட்டி. அதுகும் பாப்பன்.

இப்ப உங்கட காலம் மாதிரியே பிள்ளையள பள்ளிக்கூட வாசலிலகொண்டே விடோணும். எவ்வளவு வாகனம் ஓடுது. ? திரும்ப கூட்டிக்கொண்டர பிறகு டீசனுக்குவிட சும்மாவோ?. அதுகளின்ர ஹோம்வேக்கே எவ்வளவு? பிள்ளையள இப்ப கவனிச்சுப் படிப்பியாட்டி அதுகளின்ர எதிர்காலம் போச்சே.


மருமேள் சொல்லுறதுகேக்கிதே? நாங்கள் வாய் திறக்கேலாது. சுவிச்சப் போட்டாமா அரையுது சம்பல். தேங்காய எல்லாம் அரையுது. எங்களப்போல குந்தியிருந்து குனிஞ்சுஅடுப்பூ ஏதும் வினைக்கெடுகினமோ? டக்கெண்டா காஸ் அடுப்பு பத்துது. நிண்ட நிலையில சமையல் . நாங்கள் அப்பிடியே? ஈர்க்குக் கட்டால குனிஞ்சு முத்தம் கூட்டி. ஈச்சோலைக் கட்டால வீடு கூட்டி சும்மா கம்புபோலதானே இப்பவும் திரியிறம்.

ஏன்ர மூத்தவள பாத்த நீங்கள்தானே. சின்னனில அவள நெருப்புக்குச்சு எண்டுதான் சொல்லுறது. குச்சி உடம்பு இப்ப பாக்கமாட்டியள். அவ்வளவு பருமன். என்ன பிறசராம் கொலற்றோலாம் சுகராம் என்னமயிருப் பேருகள். சனம் இப்ப தாங்கள்தான் இங்கிலீசில கதைக்கினமெண்டா நோயளையும் இங்கிலீசில சொன்னாத்தான் பெறுமதியாம். அதிலயும் காச்சல், தடிமல், வயித்துவலி.கால்கை மூட்டுவலியள் வந்தா நாலாம் பேருக்கும் தெரியாது. பெறுமதியானவருத்தம் வந்தாத்தான் தெரியிது .

ஏனோ அதுதான் பணக்கார வருத்தங்கள். அதைத்தான் பெருமையா சொல்லித்திரியலாம். உதையேன் கேக்கிறியள் மேளோட ஆசுப்பத்திரிக்குப் போனா என்ர மாரியம்மாளே. ஊரில பாதிச்சனம் அங்கதான் நிக்குது. இவ்வளவு தொகையா எப்பிடி வருத்தம் வருகிது. எங்கட அயண்டயீனங்கள் தானே? உடல் பருமனக் குறையுங்கோ. அரை மணிநேரம் தினமும் உடற்பயிற்சி செய்யுங்கோ. எண்டு எழுதியுந்தான் போட்டிருக்கினம் . எங்கட ஆக்கள். இப்ப எங்கட மண்ணில விளையுறத தின்னவே வெக்கப்படுகினம். பீட்சா. பிரியாணி. றிச்கேக். சிக்கன் ரோஸ்ற் என்னவெல்லாம் கொழுப்புப் பிடிச்ச தீனுகள். திண்டு கொழுப்ப ஏத்திப்போட்டு கிளினிக் வழியகொப்பியும் கையுமாத் திரியினம். உலகத்தில மருத்துவ வசதி கூடிப்போச்சாம். அதால மருத்துவத்தை நாடுறவையும் கூடித்தான் போச்சினம்.

என்ர பேரப்பெட்டை பிள்ளப்பெத்து எட்டு மாசம் . தலைமயிர் கொட்டுதாம். பிள்ள முகம் பாத்துச் சிரிக்க மயிர் கொட்டுமெண்டு எங்கட பூ ட்டியாச்சி முன்ன சொல்லுவா. ஆனா பிரசவத்துக்க வாற குருதியிழப்பிலயும் பலயீனத்திலயும்தான் மயிர் கொட்டுறது எனக்குத் தெரியும். எட இவள்பாவி அதுக்கு பெஸலிஸ்றாம். ஆரோ டாக்குத்தரதேடி ஏறியிழந்து போட்டாள். அய்யோ சொன்னா நம்பமாட்டியள் மயில்த்தாளுகளெல்லோ உந்த மயிருக்குச் செலவு

நீங்கள் என்ன நினைக்கிறியளோ தெரியாது இப்பத்தையில் பொண்டுகளுக்கு இயற்கையிலேயா அழகு அல்லது பேசியல், கிறீமுகளால தான் அழகா? எண்டு பட்டிமன்றம் வச்சுத்தான் கண்டு பிடிக்கவேணும். ச்ச சொல்லமாட்டியள். இப்ப மாதுளம் பழம், பப்பாசிப்பழம், நெல்லிக்காய், மாம்பழம், கற்றாளை, பால், தயிர் இதெல்லாம் சாப்பாட்டுப் பொருளுகள் எண்டோ நினைக்கிறியள்.? அதெல்லாம் மயிருக்கும் மூஞ்சைக்கும் பூ சிக்காயவிட்டு கழுவிவிட்டு பிறகு உவையள் எங்க வீட்டில வேல செய்ய நேரம். உதுகளக் காணக்காண எனக்குப் பிறசர் எகிறுது.



-தமிழ்க்கவி-



# வரும் ஆனால் வராது

"மாங்குளத்துக்கு மாகாண சபை வருமா?"
**வரும் ஆனால் வராது**

"கிளிநொச்சிக்கு விவசாய பீடம் வருமா?"
**வரும் ஆனால் வராது**

"யாழ்ப்பாணத்துக்கு இரணைமடுத் தண்ணீர் வருமா?"
**வரும் ஆனால் வராது**

"இனப்பிரச்சினைக்கு தீர்வு வருமா?"
**வரும் ஆனால் வராது**

"கிளிநொச்சி நகருக்கு பஸ் நிலையம் வருமா?"
**வரும் ஆனால் வராது**

"போர்க்குற்ற விசாறணைகள் வருமா?"
**வரும் ஆனால் வராது**

"இலங்கையில் நல்லிணக்கம் வருமா?"
**வரும் ஆனால் வராது**

"பாறாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ்த்
தேசியக் கூட்டமைப்பு வருமா?
**வரும் ஆனால் வராது**

"இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா
முன்வருமா?"
**வரும் ஆனால் வராது**

"இலங்கையில் நீதியும் அமைதியும் வருமா?"
**வரும் ஆனால் வராது**

- பெருமாள் விநாயகன்

## கிருஸ்ண மூர்த்தி அரவிந்தன்



# மோடி வருகை
# நிகழுமா அற்புதங்கள்

> அரசியல் என்பது
> சதுரங்க மேடையில்
> சாதுரியமாகக்
> காய்களை நகர்த்துவது
> பிச்சைப் பாத்திரத்திரத்துடன்
> நின்று கையேந்துவதல்ல

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி வெற்றியடைந்த பொழுது எனக்கு நினைவில் வந்தது, 2009 இல் நடந்த தேர்தல்தான். அது ஈழப்போரின் இறுதிக்காலம். விடுதலைப் புலிகள் முற்றுகைக்கும் முடிவுக்கும் உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருந்த சந்தர்ப்பம். வரவர நிலைமைகள் மோசமடைந்து வருகின்றன என்பதைப் புலிகள் நன்றாக உணர்ந்திருந்தனர். புலிகள் எதிர்பார்த்ததற்கு மாறாகவே நிலைமை சென்று கொண்டிருந்தது. ஒரு சிறிய அவகாசத்தைக் கொடுப்பதற்கும் இலங்கை அரசு தயாரில்லை. சர்வதேச சமூகமும் புலிகளுக்குச் சார்பாக இருக்க வில்லை. இந்தக் கட்டத்தில்தான் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் காங்கிரஸுக்குப் பதிலாக பாரதீய ஜனதாக் கட்சி வெற்றியடைந்தால் நிலைமைகளில் மாற்றம் ஏற்படலாம் என்ற அபிப்பிராயம் புலிகளின் உயர் மட்டத்தில் இருந்தது. இதற்குக் காரணம், அந்தத் தேர்தலில் வை. கோவும் ஜெயலலிதாவும் பா.ஜ.க வுடன் கூட்டணி வைத்திருந்தனர். இதனால், வைகோ புலிகளுக்கு தன் சார்பாக நம்பிக்கையூட்டினார்.

'காங்கிரஸ் கண்டிப்பாகத் தோல்வியைத் தழுவும். பதிலாக பா.ஜ.கவே வெற்றிவாகை சூடும். எதைப் பற்றிய தீர்மானங்களையும் எடுக்க முடியாத - ஆளுமை இல்லாதவராக, அதிகார மற்றவராக பிரதமர் பதவியில் இருக்கும் மன்மோகன் சிங்கிற்குப் பதிலாக பா.ஜ.கவின் அத்வானி பிரதமராகுவார். அத்வானி தனித்துவமான ஆளுமையுடைய தலைவர். ஆகவே, தீர்மானங்கள் வேறுவிதமாக எடுக்கப்படும். காங்கிரஸ் எப்பொழுதும் புலிகளுக்கு எதிராகவே சிந்தித்து வருகிறது. எனவே காங்கிரஸ் அல்லாத பா.ஜ.க வருமாக இருந்தால், மாற்றங்களுக்கு வாய்ப்புண்டு. 1987 இல் காங்கிரசும் ராஜீவும் கொண்டு வந்திருந்த

இலங்கை இந்திய உடன் படிக்கையையும் இந்திய அமைதிப் படையையும் பின்னர் ஆட்சிக்கு வந்த வி. பி. சிங்கின் கூட்டணி அரசாங்கம் பின்னெடுத்திருந்தது. புலிகளுடன் இந்திய அமைதிப் படை நடத்திய போரும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதைப் போன்றதொரு நிலை இந்தச் சந்தர்ப்பத்திலும்



ஏற்பட்டு, இப்பொழுது உருவாகியிருக்கும் நெருக்கடி நிலையில் மாற்றமோ தளர்வோ ஏற்பட வாய்ப் பேற்படும்' என்றார் வைகோ.

வைகோவின் இந்த நம்பிக்கையூட்டல் புலிகளுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. இந்தியத் தேர்தல் வரையில் தாக்குப்பிடித்தால் பிறகு நிலைமைகளின் மாறுதல்களுக்கு அமைய தங்கள் நடவடிக்கை களையும் தீர்மானங்களையும் மாற்றி யமைக்கலாம் என்று விடுதலைப் புலிகளின் உயர் மட்டம் கருதியது. இந்த நம்பிக்கைக்கு மேலும் உறுதிப்பாடாக, வைகோவோ பா.ஜ.கவோடு நெருக்கமாக இருக்கிறார். வை.கோ புலிகளின் அபிமானியல்லவா. ஆகவே கண்டிப்பாக அவர் தங்களுக்காகப் பேசுவார். மாற்றங்களுக்கான அழுத்தங்களையோ கோரிக்கை களையோ விடுப்பார் என்ற நம்பிக் கையும் அவர்களிடம் இருந்தது. ஆகவே நல்லவை நிச்சயமாக நடக்கும் என்று நம்பப் பட்டது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தேர்தல் முடிவுகள் எதிர் பார்க்கப்பட்டன.


இதைப்பற்றி அப்பொழுது புதுக் குடியிருப்பு - இரணைப்பாலையில் இருந்து வெளியிடப்பட்ட ஈழநாதம் பத்திரிகையும் புலிகளின் வானொலியும் செய்திகளையும் ஆய்வுகளையும் தெரிவித்து வந்தன. தனிப்பட்ட சந்திப்புகளின் போது விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளராக அப் போதிருந்த பா. நடேசன் இந்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் பலரிடத்திலும் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார். ஆனால், நம்பிய வையும் எதிர்பார்த்தவையும் நடக்க வேயில்லை. நம்ப முடியாத காரியங் களும் எதிர்பார்க்காத சங்கதிகளுமே நடந்தன. காங்கிரசும் தி.மு.கவும் இணைந்த கூட்டணியே ஆட்சியைக் கைப்பற்றியது.

புலிகள் தோற்கடிக்கப்பட்ட பிறகு, காங்கிரஸ் மற்றும் தி.மு.க எம்.பி.மார் இலங்கைக்கு வந்து முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த மக்களைப் பார்த்ததோடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துச் சென்றனர். இதில் இன்னும் வேடிக்கை என்னவென்றால், விடுதலைப்



புலிகளுடன் மிகநெருக்க மானவராக இருந்த விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் தொல். திருமாவளவனும் இந்தக் குழுவில் இணைந்து வந்து ஜனாதிபதியைச் சந்தித்துச் சென்றதுதான். திருமா வளவன் அப்படிமகிந்த ராஜபஷவைச் சந்தித்த போது, 'உங்கள் நண்பரை (பிரபாகரனை) நீங்கள் காப்பாற்றி யிருக்கலாம். அவருக்கு (பிரபாகர னுக்கு) நீங்கள் சில விடயங்களை எடுத்துச் சொல்லி ஆலோசனை வழங்கியிருக்கலாம்' என்று ஜனா திபதி திருமாவளவனிடம் சொன்ன தாகச் செய்திகள் வெளியாகி யிருந்தன.

இப்பொழுது இன்னொரு காலமும் இன்னொரு காட்சியும் நம் முன்னே விரிந்திருக்கிறது. கடந்த வாரம் நடந்த தேர்தலில் காங்கிரசுக்குப் படுதோல்வியைக் கொடுத்துவிட்டு பா. ஜ. க வெற்றிக் கொடியை ஏந்திக் கொண்டிருக்கிறது. பா. ஜ. க பெற்ற வெற்றி சாதாரண வெற்றியல்ல. மிகப் பெரும் வெற்றி. மோடி என்ற பெயர் இன்று ஆச்சரியத்துக்கும் கவர்ச்சிக்கும் உரிய ஒன்றாக மாறியுள்ளது. இது இந்தியாவுக்குள் மட்டுமின்றி, இந்தியாவைச் சுற்றியும் வியப்பை ஊட்டிக் கொண்டிருக்கிறது. மோடி மீதான கவர்ச்சியும் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இலங்கையிலும் உண்டு. அதிலும் தமிழர்களிடத்திலே இன்னும் அதிகமாக உள்ளது. இதற்கும் முக்கிய காரணமாக இருப்பது,



பா.ஜ.கவில் இப்பொழுதும் வை.கோ கூட்டாளியாக இருக்கிறார். ஜெயலலிதா பங்காளியாக இல்லையென்றாலும் கூட்டாளி நிலையில்தான் உள்ளார். இவர்களோடு விஜயகாந்த், பாட்டாளி மக்கள் கட்சி ராமதாஸ் போன்றோரும் உள்ளனர். ஆகவே மோடியைத் தமிழர் விவகாரத்தின் பக்கம் திரும்பிப் பார்க்கவைக்கலாம் என்ற நம்பிக் கையும் எதிர்பார்ப்பும் சிலரிடத்தில் உண்டு.

ஆனால், மோடி இதையெல்லாம் எப்படிப் பார்க்கப் போகிறார்? எப்படிக் கையாளப்போகிறார்? என்று சரியாக மதிப்பிட முடியவில்லை. அவர் தனிப் பெரும்பான்மையோடு ஆட்சிய மைக்கிறார். பிறருடைய தயவோ தாட்சணியமோ அவருக்குத் தேவையில்லை. முன்பு காங்கிரஸ் தி.மு.க மற்றும் பிற கட்சிகளின் தயவில் தட்டுத்தடுமாறி ஆட்சியில் இருந்ததைப் போல மோடி சிரமப்படப் போவதில்லை. ஏறக்குறைய அவர் இப்பொழுது தனிக்காட்டு ராஜா. அவருடைய காட்டில் நன்றாக மழை பொழிகிறது.

இந்த நிலையில்தான் அவர் இந்தியா வைச் சுற்றியிருக்கும் நாடுகளை — சார்க் நாடுகளின் அணி என்ற

அடையாளத்தின் கீழ் தன்னுடைய பதவியேற்புக்கு அழைத்திருக்கிறார். இதில் இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அழைக்கப் பட்டவர்களில் ஒருவராக உள்ளார். ஆனால், மகிந்த ராஜபக்ஷவை அழைக்க வேண்டாம் என்று தமிழ் நாட்டினர் மோடியை வற்புறுத்தினர். ஆனால், மோடி இதை வேறுவிதமாகச் சிந்திக்கிறார். வேறுவிதமாகவே கையாளப் பார்க்கிறார். அவர் டில்லியின் சிந்தனை முறையை உடனடியாகத் தூக்கிவீசிவிடுவார் என்று எதிர்பார்க்க முடியாது. அதிலும் குறிப்பாக இந்திய வெளிவிவகாரக் கொள்கைகளைப் பொறுத்தவரை சடுதியாக மாற்றங்களை நினைத்த மாத்திரத்தில் ஏற்படுத்திவிட முடியாது. மேலும் தென்னாசியப் பிராந்தியத்தின் புவிசார் அரசியலில் இலங்கையை எதிர்நிலையில் வைத்துக் கொண்டு இந்தியாவின் எதிர்காலத்தைப் பற்றிச் சரியாகச் சிந்திக்க முடியாது.

ஆகவே தமிழ்நாட்டின் எதிர்ப்புக்கொடி, கறுப்புக் கொடிகளை மீறி மோடியின் பதவியேற்புக்கு மகிந்த ராஜபக்ஷ அழைக்கப்படுவது உறுதி. மகிந்த ராஜபக்ஷவும் கலந்து கொள்வது சாத்தியம். என்றாலும் தமிழ்நாட்டில் வரையறுக்கப்பட்ட அளவில் இதற் கான எதிர்ப்புகள் நடக்கும். அப்படி யென்றால்,மோடியின் ஆட்சியில் நடக்கும் முதலாவது எதிர்ப்பு நடவடிக்கையாக இது அமைகிறது. எனவே ஒரு வலுவான மாநிலத்தின் எதிர்ப்பு நடவடிக்கைகளின் மத்தியில் மோடி ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறார். அதிலும் அயல் நாடொன்றின் விவகாரங்களையிட்ட எதிர்ப்பு நடவடிக்கை. எனவே, இலங்கையின் இனப்பிரச்சினை என்பது, இந்தியத் தேர்தலில் மட்டுமல்ல, தேர்தலுக்குப் பின்னான ஆட்சியிலும் தாக்கம் செலுத்தும் ஒன்றாக மாறி வலுப்பெற்றுள்ளது. இதை மோடி உணர்ந்தே தீரவேண்டும்.

ஆனால், மோடி இதையெல்லாம் எப்படி எடுத்துக் கொள்ளப்போகிறார்? பிராந்தியத்திலும் இந்தியாவிலும் தன்னை அவர் வலுவான சக்தியாக பிரகடனப்படுத்தப் போகிறாரா? அல்லது நிபந்தனைகளுக்கு அனுசரணையாக இருக்கப் போகிறாரா? என்று தீர்மானிக்க முடியவில்லை. என்றாலும் இந்தியா வின் சிந்தனையானது கொழும்பைக் கவரும் வகையிலேயே இருக்கக் கூடிய சாத்தியங்களே அதிகமாகத் தென்படுகின்றன. டில்லியின் தேவைகளும் அதன் நிகழ்ச்சி நிரலும் கூட அப்படித்தான் உள்ளன.







ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அவர் இனப்பிரச்சினை தொடர்பான விவகாரத்தையும் நட்பின் அடிப் படையில் - உறவின் அடிப்படையில் பேச முனையலாம். எதிர்நிலையில் வைத்துப் பேசுவதைவிட நட்பு நிலையில் வைத்துப் பேசுவதில் அனுகூலங்கள் அதிகமல்லவா. இதேவேளை மோடியின் அழைப்பை மகிந்த ராஜபக்ஷ தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தக் கூடிய நிலைகளும் ஏற்படலாம். அரசியல் என்பது சதுரங்க மேடையில் சாதுரியமாகக் காய்களை நகர்த்துவது. தெருவோரத்தில் நின்று கையேந்தும் பிச்சையல்ல.

இந்த நிலையில் தமிழர்கள் சில விடயங்களை தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியம். ஆசியப் பிராந்தியக் கூட்டும் ஸ்தரத்தன்மையும் அதிகமாக உணரப்பட்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் சிறிய சமூகங்கள் பேரரசுகளிடம் எதையும் அதிகமாக எதிர்பார்த்துவிட முடியாது. மிகத் தந்திரமாக மேற்குலகத்தை ஆசிய வலயத்துக்கு அப்பால் நிறுத்தும் எண்ணம் ஆசியப் பிராந்திய நாடுகளிடையே உள்ளுணர்வாக உண்டு. இதை அழுத்தமாக இந்தியாவும் சீனாவும் முன்னெடுக்க முயற்சிக்கின்றன. இந்த நிலையில்தான் மோடி – பா.ஜ.கவின் ஆட்சிப் பொறுப்பேற்பு நிகழ்கிறது. ஆகவே ஆசியப் பிராந்தியக் கூட்டை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதைப் பற்றியே மோடி சிந்திப்பார். அவர் அகன்ற இந்தியக் கனவின் நாயகன். இந்தியச் செல்வாக்கை அயலெங்கும் விரிக்க விரும்பும் தலைவர். ஆகவே, இதன் வழியாகத்தான் நாம் ஆட்சியைப் பொறுப்பெடுக்கும் மோடி அடுத்து என்ன செய்வார்? என்பதைப் பார்க்க வேண்டும்.

புலிகளின் காலத்தில் பா. ஜ. க பதவியை ஏற்றிருந்தாலும் அது இப்படித்தான் சிந்தித்திருக்கும். இப்படித்தான் செயற்பட்டிருக்கும். அதாவது புலிகள் இல்லாத கால மாகிய இப்பொழுது நடப் பதைப் போல. ஏனென்றால், டில்லியின் இதயம் எப்பொழுதும் இந்தியாவைப் பற்றியே சிந்திக்கிறது. அது அப்படித்தான் சிந்திக்கும்.

முற்றும்.






# மெய்ப்பட்ட கனவு

# கிளிநொச்சியில் பொறியியற் பீடம்

அச்சுதன்

**1974-07-19 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பல்கலைக்கழகம் 39 ஆண்டுகளில் இத்தனை பெரிய வளர்ச்சியைப் பெற்றிருப்பது பெரிய சாதனைதான். அதுவும் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் யுத்தமும் இடப்பெயர்வுகளும் நெருக்கடிகளும் போராட்டங்களுமாக இருந்த நிலையில் இந்த வளர்ச்சியை அது எட்டியிருக்கிறது என்றால் அது வியப்புத்தான்.**

கனவு மெய்ப்படும் என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியற்பீடம் கிளிநொச்சியில் இயங்கிக் கொண்டிருப்பதுதான். ஏறக்குறைய 39 ஆண்டுகளாக நடக்குமா நடக்காதா, கிடைக்குமா கிடைக்காதா, வருமா வராதா என்று கேள்விகளின் மீதிருந்த பொறியியற்பீடம் இப்பொழுது நிஜமாகவே கிளிநொச்சியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதை நம்பக் கடினம்தான். ஆனால், நம்பித்தான் ஆக வேண்டும். ஏற்கனவே கிளிநொச்சியல் இயங்கி வந்த விவசாய பீடத்தை மீண்டும் கிளிநொச்சிக்குக் கொண்டு வருவதில் தாமதங்களும் இழுபறிகளும் நடந்து கொண்டிருக்கும்போது பொறியியற் பீடம் இத்தனை விரைவாக இயங்க ஆரம்பித்திருக்கிறது என்றால் யாருக்குத்தான் ஆச்சரியம் வராது.

பொறியியற்பீடத்தை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப யோசனைகளை 39 ஆண்டுகளாக பலரும் முன்வைத்திருக்கிறார்கள். 1990 இல் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பேராசிரியர் அ. துரைராஜா இருந்தபோது, பொறியியற்பீடத்தை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். இதற்காக அவர் குடியியற்துறை எந்திரவியலாளர் ஒருவரைப் பேராசிரியராகவும் இரண்டு தொழில்நுட்பவியலாளர்களையும் நியமித்து பொறியியற்பீடத்தைத் திட்டமிடுவதற்கு ஏற்பாடு செய்தார். ஆனால் யுத்தமும் நாட்டு நிலைமையும் இந்த முயற்சிக்கு ஒத்து வரவில்லை.

பிறகு, 2002 இல் போர் நிறுத்த உடன்படிக்கை வந்திருந்தபோது, இந்தத் திட்டம் மீண்டும் தூசி தட்டி எடுக்கப்பட்டு மேசைக்கு வந்தது. அப்பொழுது துணைவேந்தராக பேராசிரியர் சு.மோகனதாஸ் இருந்தார். பொறியியற்பீடத்தை ஆரம்பிப்பதற்காக அவரும் சில ஆரம்ப நடவடிக்கைகளை ஆயத்தப்படுத்தினார். என்றாலும் யுத்தராஜன் அதற்கு இடமளிக்கவில்லை.

போர் முடிந்த பிறகு, 2009 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை இது குறித்துச் சிந்தித்தது. அப்பொழுது துணைவேந்தராக பேராசிரியர் நா. சண்முகலிங்கன் இருந்தார். 2010 ஆம் ஆண்டு பேராசிரியர் கந்தசாமி தலைமையில் பேராசிரியர்கள் சற்குணராஜா, ரவிராஜன் மற்றும் கலாநிதி சார்ள்ஸ் ஆகியோர் உள்ளடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு பொறியியற்பீடத்தை அமைப்பதைப் பற்றி திட்டமிடத் தொடங்கியது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அறிவியல் நகரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடத்தையும் விவசாயபீடத்தையும் ஆரமிக்கலாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவாலும் ஜனாதிபதியிடம் ஒரு கோரிக்கையை முன்வைத்ததன் விளைவாக ஏறக்குறைய 578 ஏக்கர் நிலமும் சில கட்டிடங்களும் கிடைத்தன. இந்தப் பகுதியில் ஏற்கனவே விடுதலைப் புலிகள் ஒரு பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்கு

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

## கிளிநொச்சி வளாகம்

☐ ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு 568 ஏக்கர்

☐ விவசாய பீடம் - ஆரம்பம் 1990.12.03

☐ பொறியியற் பீடம் - ஆரம்பம் 06-02-2014 விவசாய பீடத்தில் (யாழ்ப்பாணத்தில் ஆறு தனியார் வீடுகளில்) கற்கும் மாணவர்களின் எண் ணிக்கை 230

☐ பொறியியற் பீடத்தில் முதல் அணியில் (தற்போது) கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை - 48

☐ விவசாய பீடத்தின் நிர்மாணப் பணிகளுக் காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதி 393 மில்லியன்

☐ இந்திய அரசின் நிதி உதவி 300 மில்லியன் (அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற் றுள்ளது. ஆனால், இன்னும் இதற்கான உடன் படிக்கை செய்யப்பட வில்லை).

☐ பொறியியற் பீடத்தின் நிர்மாணத்துக்காக அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடு 1500 மில்லியன்

☐ இந்திய அரசாங்கத்தின் நிதி உதவி - 300 மில்லியன்



எனத் திட்டமிட்டு, அதற்கான சில நிர்மாணப் பணிகளையும் மேற் கொண்டிருந்தனர். அந்தக் கட்டிடங்களைப் பயன்படுத்திப் புதிய பீடங்களை இயங்க வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலதிக நிர்மாணப் பணிகளுக்காக அரசாங்கம் நிதியைத் தனியாக ஒதுக்கியது. முதற்கட்டமாக 2.54 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டு, பொறியியற் பீடத்தைக் கட்டுவதற் காக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. நிலையான கட்டிடத் தொகுதியைப் பின்னர் கட்டுவதாகவும் தற்பொழுது உடனடியாகப் பொறியியற் பீடத்தைத் தொடங்குதவற்கான கட்டிடங்களை நிர்மாணிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டு வேலைகள் தொடங்கின.

விளைவாக கடந்த 06-02-2014 பொறியியற்பீடத்தின் விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கான ஆரம்ப நிகழ்வுக்கு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க மற்றும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரான முருகேசு சந்திரகுமாரும் பல்கலைக்கழக சமூகத்தினரும் பிரசன்னமாகி யிருந்தனர். வட மாகாண சபையின் கல்வி அமைச்சர் நிகழ்வுக்கு வருவார் என்று எதிர்பார்க் கப்பட்டபோதும் அவர் ஏனோ கலந்து கொள்ளவில்லை என்று சொன் னார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இப்பொழுது திருநெல்வேலி, மருதனார்மடம், கைதடி, கிளிநொச்சி, வவுனியா என பல இடங்களில் பல பீடங்களையும் கொண்ட, பல துறைகளையும் போதிக்கும் ஒரு பெரும் பல்கலைக்கழகமாக விரிவாக்க மடைந்திருக்கிறது.

1974-07-19 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பல்கலைக்கழகம் 39 ஆண்டுகளில் இத்தனை பெரிய வளர்ச்சியைப் பெற்றிருப்பது பெரிய சாதனைதான் அதுவும்பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் யுத்தமும் இடப்பெயர்வுகளும் நெருக்கடிகளும் போராட்டங்களுமாக இருந்த நிலையில் இந்த வளர்ச்சியை அது எட்டியிருக்கிறது என்றால் அது வியப்புத்தான்.

யாழ் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 1979 ஆம் ஆண்டு மூதவையும் பேரவையும் பொறியியற் பீடம் மற்றும் விவசாய பீடங்களை ஆரம்பிக்க முடிவு செய்தது. அத்தோடு அதனை கிளிநொச்சியில் அமைக்கவும் தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது அது வேண்டாம் என்று எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தவர்களை நினைக்கும் போது சிரிப்பு வருகிறது. அன்றைய அந்த எதிர்ப்புக்குப் பணிந்தோ அதை ஏற்றோ இந்தப் பல்கலைக்கழகத்தை யாழ்ப் பாணத்தில் உருவாக்காமல் விட்டிருந்தால்....இன்று வடக்கிலே பல்கலைக்கழகமே இருந்திருக்க வாய்ப் பில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக் கழம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு, கிழக்கில் மட்டக்களப்பு (கிழக்கு) பல்கலைக்கழகமும் தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் என இரண்டு பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டு விட்டன.

எதையும் சிந்திக்கும் முறை யில்தான் எதுவும் உருப் பெறுகிறது. அது அழிவாக இருக்கலாம். ஆக்கமாக இருக்கலாம். கிளி நொச்சியின் பொறியியற் பீடம் வன்னிக்கு ஒரு புதிய வாசல். வன்னி மக்களின் அறிவுக்கு ஒரு சுடர்.

# முல்லைத்தீவில்?

## ஊழல்

## மோசடி

## முறைகேடுகள்

முல்லைத்தம்பி

கட்டுப்பாடில்லாத கட்டுப்படுத்த முடியாத பல காரியங்கள் முல்லைத்தீவில் அதிகமாகி வருகின்றன. கட்டாக்காலி மாடுகள் கட்டாக்காலி நாய்களின் தொல்லையல்ல இது. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், அலுவலகங்களில் நடக்கின்ற முறைகேடுகள் கட்டுப்பாடு இல்லாத அளவுக்குப் பெருகியிருக்கின்றன. எந்த முறைகேட்டையும் யாரும் கட்டுப்படுத்தி விடவும் முடியாது.

மிகத் தீவிரமான சமூக நோயாக வளர்ந்து கொண்டிருக்கும் முறைகேடுகள், ஊழல்கள் குறித்து எவரும் வாய்திறப்பதில்லை. நடப்பது நடக்கட்டும் நமக்கேன் வீண்வம்பு என்கின்ற மாதிரி பலரும் ஒதுங்கிக் கொள்கின்றார்கள். எல்லாவற்றுக்கும் அலைவதைவிட குடுக்கிறதைக் கொடுத்து குடுத்து நம்மட காரியத்தை முடிச்சிடுவம் என்று லஞ்சம் கொடுத்து தங்கள் தேவைகளைப் பூ ர்த்தி செய்துகொள்கின்றனர் மக்கள். கள்வரும் காவல்காரரும் என்ற மாதிரியான காரியங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

ஊழலுக்கும் லஞ்சத்துக்கும் உலகத்திலேயே ஒழுங்கும் இல்லை கட்டுப்பாடுமில்லை. ஒழுங்கும் கட்டுப்பாடுமில்லாத எந்தக் காரியமும் சரியாக இருப்பதில்லை. இதனால் பல தவறுகள் நடந்து விடுகின்றன.

காணிகளை விற்று வாங்குவது, காணிக்கு உரிமை கோருவது, மின்சாரம் வழங்குவது, பெறுவது, வாழ்வாதார உதவிகள் தொடர்பான நடவடிக்கைகள் வேலைவாய்ப்பு உட்கட்டுமான பணிகள், இயற்கை வளங்களை எடுத்தல், என்று எல்லாவற்றிலும் இந்த ஊழல், முறைகேடு, லஞ்ச நோய்கள் மிகத் தீவிரமாகப் பரவிவிட்டன. இவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் அரசியல் தரப்புகள் முட்டுக்கட்டை போடுகின்றன என்கிறார் மாவட்டத்தின் மூத்த அதிகாரி ஒருவர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் இயற்கை வளங்களான காட்டு மரங்களும், கல்லும், கிரவலும் சட்ட விரோதமாக எடுத்துச் செல்லப்படுகின்றன. சந்தனக்கடத்தல் வீரப்பனையும் விட அப்பனான ஆட்கள் முல்லைத்தீவு மற்றும் நெடுங்கேணிக் காடுகளில் ஏராளமான மரங்களை வெட்டி இரவும் பகலுமாக வெளியூ ர்களுக்கு அனுப்பிக்கொண்டிருக்கின்றார்கள். இதற்குக் கள்வரும், காவலரும் வலு ஒற்றுமையாக இருக்கின்றார்கள். இதைப்போலதான் ஆறுகளில் சட்டவிரோதமாக நடக்கும் மணல் அகழ்வும் நடந்து கொண்டிருக்கின்றது. இந்த மண் கொள்ளை ஆறுகளில் வழித்தடத்தையே சிதைத்து விடுகிறது. இதைப்பற்றி எத்தனை தடவை முறையிட்ட போதும் அதைக் கட்டுப்படுத்துவதற்கு எந்த கைகளும் முன்வரவில்லை.


(ஒருகாலம் காட்டு யானைக்கு பயந்து வாழ்ந்த வன்னி மக்கள் இப்பொழுது டிப்பர் வாகனங்களைக் கண்டு பயப்பிடுகிறார்கள்.)

கையும் களவுமாய்ச் சிக்கும் மரமேற்றி வண்டிகளை காப்பாற்றி விடுகின்றனர் காவலர்கள் என்று கவலைப்படு கின்றனர் கிராம வாசிகள்.

வேலியே பயிரை மேய்ந்தால் நாம் என்ன செய்ய முடியும் என்ற மக்களின் கேள்விக்கு யாரிடமும் பதில் இல்லை. மக்க ளின் கேள்விக்கு பதில் இல்லாத நாடு பேரழிவையே நோக்கிச் செல்லும்.

இயற்கை வளங்கள் சிலருடைய லாபங்களுக்காக அபகரித்துச் செல்லப்படுவது உலகத்தில் ஒன்றும் புதியதல்லதான். ஆனால், இயற்கை வளங்களை இழந்துவிடுகிற மக்களின் வாழ்க்கை எரிக்கப்பட்ட மரத்துக்குச் சமன். எனவே,

இப்பொழுது முல்லைத்தீவைக் காப்பாற்றுவது யார்?



தமிழ்



# வன்னியின் கூட்டுறவுத்துறையின் எதிர்காலம்?

இற்றைக்கு ஒரு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வன்னியில் கொடிகட்டிப் பறந்த ஒரு சில துறைகளில் கூட்டுற வுத்துறையே முதன்மை வகித்தது என்றால் அது மிகையாகாது. அந்தக் காலப்பகுதியில் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்றுக்கு அதாவது சங்கக்கடை ஒன்றுக்கு முகாமையாளராக வருவதற்கு ஏகோபித்த போட்டி காணப்பட்டது. கூட்டுறவுத்துறை கிளை ஒன்றின் முகாமையாளராக வருவ தனை பெரிய விடயமாக கருதிய காலம். கூட்டுறவுக்கிளை ஒன்றின் முகாமையாளர் ஒருவருக்கு சீதனச் சந்தையிலும் அதிக கிராக்கி காணப்பட்ட காலம்

2009 ஏப்ரல் வரைக்கும் வன்னி மக்களுக்கு கூட்டுறவுத்துறை ஆற்றிய சேவை மகத்தானது.

ஒவ்வொரு நாளும் சங்கக் கடைக்கு முன்னால் மக்கள் அட்டைகளுடன் நீண்ட வரிசைகளில் காணப்பட்ட காலமது. நிவாரணங்கள் வழங்கும் நாள்களில் அதிகாலை நான்கு,ஐந்து மணிக்கு எல்லாம் சங்கக்கடைக்குச் சென்று காட் (உணவு பங்கீட்டு அட்டை) அடுக்கிவிடுவார்கள். சிலர் தங்களின் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாது நிறுத்தி நிவாரணம் பெற அனுப்பி விடுவார்கள், முகாமையாளர் எட்டு அல்லது ஒன்பது மணிக்கு வருவார் அதுவரைக்கும் ஒரு பிளேன்ரிகூட இல்லாமல் வரிசையில் மக்கள் நிற்பார்கள். சிலர் வரிசையில் நிற்கும் தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு வீட்டில் இருந்து தேனீரும் காலை உணவும் கொண்டு வருவார்கள். சிலர் அதிகாலை வந்து இடம்பிடித்தவரை மாற்றி அவரை வீட்டுக்கு அனுப்பிவிட்டு தாங்கள் அந்த இடத்தில் வரிசையில் நிற்பார்கள். இவ்வாறு வரிசையில் நிற்பவர்கள் மதியம்வரை மனேஜரை நெருங்கா விட்டால், வீட்டிலிருந்து அடுத்தவர் வந்து அந்த வரிசையில் நின்றுகொண்டு காலையிலிருந்தவரை வீட்டிற்கு அனுப்பி விடுவர், அல்லது அவருக்கு மதிய உணவும் சங்கக்கடைக்கு வரும்.

இதற்கப்பால் சிலர் சங்கக் கடையின் காவலாளியினை பழக்கம்பிடித்து நிவாரணம் வேளைக்கு எடுத்தால் அரிசியோ, பருப்போ, சீனியோ, மாவோ, தரு வதாக கூறி முதல்நாள் இரவே அட்டையை அவரிடம் கொடுத்து அடுக்கி வைப்பதும் உண்டு.

இவ்வாறு யுத்த காலத்தில் நிவாரணத்தைப் பெறுவதற்கும், மண்ணெண்ணெய் பெறுவதற்கும் சங்கக் கடைகளுக்கு முன்னால் எப்போது பார்த்தாலும் ஒரு கூட்டம் நின்றுகொண்டேயிருக்கும், இதற்கிடையில் கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள் கிடைப்பதாலும், தட்டுப்பாடான பொருட்கள் இருப்பதனாலும் பணத்திற்கு பொருட்களை வாங்குபவர்கள் தனியார் கடைகளைவிட சங்கக் கடைகளேயே அதிகம் நாடுவார்கள்.

எனவே, யுத்தகால நெருக்கடிக்குள் வன்னியின் கூட்டுறவுத்துறை மக்களுக்கு ஆற்றிய சேவை என்பது மிகவும் பெரியது. நெருக்கடியான காலத்தில் பல சனங்களுக்கு சங்கக்கடை கோவிலாகவும், மனேஜர் கடவுளாகவும் தென்பட்டார். அந்தளவுக்கு கூட்டுறவுத்துறையின் சேவை காணப்பட்டது.

இறுதி யுத்தம் மிக மோசமாக நடந்துகொண்டிருந்தவேளை மக்கள் எழுந்து இருக்கவோ, நடக்கவோ, முடியாத அளவுக்கு நிலைமை காணப்பட்ட போதும்

➡

**ஒரு காலத்தில் எந்தநேரமும் சங்கக் கடைகடைகளுக்குமுன்னால் சனங்கள் நின்ற நிலைமை மாறி தற்போது சனங்கள் கூடாத இடங்களில் ஒன்றாக கூட்டுறவுச் சங்கங்கள் மாறியுள்ளன. எனவேதான் வன்னியின் கூட்டுறவுத்துறை தன்னை மீள்பரிசீலனை செய்து. ஏற்பட்டுள்ளதிறந்த போட்டி சந்தைக்குள் ஏற்ற வகையில்மாற்றியமைக்கப்பட வேண்டும். இல்லையெனில் வன்னியின் கூட்டுறவுத்துறையை கட்டுரைகளிலும். வரலாற்று குறிப்புகளிலும் என ஏடுகளிலேயே காணமுடியும்.**

வன்னியின் கூட்டுறவுத்துறை தறப்பாள் கூடாரத்திற்குள் இருந்துகொண்டு தங்களது சேவைகளை மக்களுக்கு வழங்கினர்.

எப்பொழுதும் செல்விழுந்து வெடிக்கலாம், தோட்டாக்கள் துளைத்துக்கொண்டு செல்லலாம் என்ற மிகவும் நெருக்கடியான நிலையிலும் துணிந்து நின்று மக்களுக்கு நிவாரணங்களை வழங்கியது வன்னியின் கூட்டுறவுத்துறை.

வன்னியின் கூட்டுறவுத்துறை 2009 இறுதி யுத்தம் நடைபெற்ற புதுமாத்தளன், வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் பிரதேசங்கள்வரை மக்களைப்போன்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடமாக இடம்பெயர்ந்து சென்று சேவைகளை வழங்கியது.

முதலாவது இடப்பெயர்வில் கூட்டுறவுத்துறையினர் தங்களிடம் உள்ள வாகனங்கள் மூலம் பழைய பொருட்கள் உள்ளிட்ட எல்லாவற்றையும் சொந்த இடத்திலிருந்து ஏற்றிச் சென்றார்கள். அதற்கான கால அவகாசம் இருந்ததோடு, நம்பிக்கை ஒன்று இருந்தது. அதாவது மீளவும் சொந்த இடத்திற்கு சிறிது காலத்தின் பின் திரும்பி வருவோம் என்று.

கடந்த காலத்தின் அனுபவமே இந்த நம்பிக்கைக்கு காரணமானது. யாழ்ப்பாணம் இடப்பெயர்வின் போதும், கிளிநொச்சி இடப்பெயர்வின்போதும் கூட்டுறவுத்துறையும் இடம்பெயர்ந்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்த யாழ்ப்பாணம் கூட்டுறவுத்துறை கிளிநொச்சியிலிருந்த கிளிநொச்சி கூட்டுறவுத்துறையையும் கூட்டிக்கொண்டு அக்கராயன், முழங்காவில், மல்லாவி, புதுக்குடியிருப்பு என வன்னியின் பல பிரதேசங்களை நோக்கி இடம்பெயர்ந்து அந்தந்தப் பிரதேசங்களில் பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் சேவை செய்தனர்.

குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் மீண்டும் கிளிநொச்சியில் சொந்த இடங்களில் பணியைத் தொடர்ந்தனர். 1995இல் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந பல கூட்டுறவுத்துறையினர் 2002 சமாதான உடன்படிக்கையோடு மீண்டும் யாழ்ப்பாணத்திற்கே சென்றுவிட்டனர். இந்த நம்பிக்கையே இறுதி யுத்தகாலத்திலும் இடம்பெயர்ந்த கூட்டுறவுத்துறையிடம் காணப்பட்டது.

அதனாலேயே முதலாவது இடப்பெயர்வில் அனைத்துப் பொருட்களையும் அள்ளிக்கொண்டு இடம்பெயர்ந்தார்கள்.

பின்னர் இரண்டாவதாக இடம்பெயரும்போது தேவையில்லை என கருதிய சில பொருட்களை விட்டுவிட்டு மிகுதிப்பொருட்களுடன் சென்ற கூட்டுறவு மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது இடப்பெயர்வுகளில் நல்ல நிலையில் பொருட்களை மட்டும் வாகனங்களில் ஏற்றிச்சென்றனர்.

பின்னர் இறுதியாக மிகவும் அத்தியவசிய பொருட்களான அரிசி, மா, சீனி, பருப்பு என்பவை மாத்திரமே ஏற்றிச் செல்லப்பட்டன. மிகுதிப்பொருட்கள் அந்தந்த இடங்களில் கைவிடப்பட்டன. இறுதி யுத்தகாலத்தில் எழுந்து இருக்கக்கூட அஞ்சும் சூழ்நிலையில் தறப்பாளுக் குள் இருந்து கொண்டு நிவாரணம் வழங்கிய பெருமை வன்னியின் கூட்டுறவுத் துறையினரையே சாரும்.

எனவே இவ்வாறு பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பெரும் பணியாற்றிய கூட்டுறவுத்துறை செட்டிக்குளம் மெனிக்பாம் முகாம்களிலும், மக்களுக்கான தங்களின் பணியினை மேற்கொண்டனர்.

அவ்வப்போது ஏற்பட்ட நெருக்கடியான காலகட்டத்திலும், சூழ்நிலையிலும் பெரும் பணியாற்றிய வன்னியின் கூட்டுறவுத்துறையினர் மீள்குடி யேற் றத்திற்கு பின்னர் திறந்து விடப்பட் டுள்ள வன்னியின் சந்தைக் குள், தனியார் துறையினரும், பல்தேசியக் கம்பனிகளும் எனப் பல தரப்பட்ட நிறுவனங்களினதும் செயற்பாடுகளை ஆரம்பித்தமையால் 2009இற்கு முன் ஏகபோக செயற்பாடுகளை தன்னகத்தே கொண்டு செயற்பட்ட வன்னி யின் கூட்டுறவுத் துறை தற்போதைய திறந்த சந்தைக்குள் ஏனைய துறையினருடன் சமாந்தரமாக போட்டி போட்டு பயணிக்க முடியாத நிலை யில் தள்ளாடிக் கொண்டு செல்கின்றது.

ஆங்காங்கே சில முக்கிய இடங் களில் எரிபொருள் நிலையங்களை கொண்டுள்ள கூட்டுறவுத்துறையினர் மட்டுமே ஓரளவு சமாளித்துக் கொண்டு செல்கின்ற நிலையில் ஏனையவர்கள் நம்பிக்கையற்ற எதிர்காலத்தை நோக் கிச் செல்கின்றனர்.

ஒரு காலத்தில் எந்தநேரமும் சங்கக் கடைகளுக்கு முன்னால் சனங்கள் நின்ற நிலைமை மாறி தற்போது சனங் கள் கூடாத இடங்களில் ஒன்றாக கூட்டு றவுச் சங்கங்கள் மாறியுள்ளன.

எனவே தான் வன்னியின் கூட்டுறவு த்துறை தன்னை மீள்பரிசீலனை செய்து, ஏற்பட்டுள்ள திறந்த போட்டி சந்தைக்குள் ஏற்ற வகையில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

இல்லையெனில் வன்னியின் கூட்டுறவுத் துறையை கட்டுரைகளிலும், வரலாற்றுக் குறிப்புகளிலும் என ஏடுகளிலேயே காணமுடியும்.

**அவ்வப்போது ஏற்பட்ட நெருக்கடியான காலகட்டத்திலும், சூழ்நிலையிலும் பெரும் பணியாற்றிய வன்னியன் கூட்டுறவுத்துறையினர் மீள்குடியேற்றத்திற்கு பின்னர் திறந்து விடப்பட்டுள்ள வன்னியின் சந்தைக்குள், தனியார் துறையினரும், பல்தேசியக் கம்பனிகளும் என பல தரப்பட்ட நிறுவனங்களி னதும் செயற்பாடுகளை ஆரம்பித்தமையால் கூட்டுறவுத்துறை தற்போதைய திறந்த சந்தைக்குள் ஏனைய துறையினருடன் சமாந்தரமாக போட்டி போட்டு பயணிக்க முடியாத நிலையில் தள்ளாடிக் கொண்டு செல்கின்றது.**



# வன்னியின் சமர் சாதனையாளர்களை உருவாக்க தவறின் வேதனையான விடயமாகிவிடும்.

**கி**ளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கும், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கும் இடையில் வருடந்தோறும் இடம் பெறுகின்ற வன்னியின் சமர் எனும் பெயரில் நடைபெற்றுகின்ற சிநேகபூர்வ துடுப்பாட்ட போட்டியானது சாதனையாளர்களை உருவாக்கும் களமாக அமைய வேண்டும் என்பது எல்லோரினதும் எதிர்பார்ப்பு. அதனை நோக்கியதாக போட்டிகள் நகர்த்தப்பட வேண்டும். இல்லையெனில், வருடந் தோறும் பெருமளவு பணச் செலவில் நடத்தப்படுகின்ற போட்டி ஒரு வேதனையான விடயமாகிவிடும்.

இரண்டு மாவட்டங்களுக்கும் இடையேயான நட்பு கிண்ண போட்டியாக இருந்தாலும், அந்த நட்புக்கு ஊடாக திறமைகள் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். அந்த திறமைகள் தேசிய மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்கு மாற்றமடைய வேண்டும். அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படும் போதே வன்னியின் சமர் முக்கியத்துவமிக்க போட்டியாக மாறும். வன்னியின் சமர்க்களத்தில் ஆடியவர்கள் தேசிய மற்றும் சர்வதேச களங்களை நோக்கி செல்கின்றபோதே வன்னியின் சமர் இலக்கை அடைந்ததாக அர்த்தப்படும்.

இல்லையெனில், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குள் வெறுமனே ஒரு நடப்பு நிகழ்வாக, சம்பிரதாயமாக மாறி விடுமேதவிர, ஒரு மிகச் சிறிய வீதத்திற்கு அப்பால் எந்த நன்மையையதரப் போவதில்லை.

2007 ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட வன்னியின் சமர் துடுப்பாட்ட போட்டியானது, யுத்தம் நிறைவுக்கு வருவதற்கு முன்னர் இரண்டு தடவையும், அதற்கு பின்னர் இரண்டு தடவையும் நடைபெற்றுள்ளது.

வன்னியின் சமர் தொடர்பில் போட்டியில் பங்குபற்றிய பாடசாலையில் ஒன்றான கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் அதிபர் பங்கையற்செல்வன் கருத்து தெரிவிக்கும் போது,

இரண்டு பாடசாலைகளுக்கும் இடையே 2014 நான்காவது தடவையாக கிளி–முல்லை நட்பு கிண்ண போட்டி நடைபெற்று சமநிலையில் முடிந்துள்ளது. இந்த போட்டியின் நோக்கம் இரண்டு பாடசாலை மாணவர்களிடையே காணப்படுகின்ற திறமைகளை வெளிக்கொண்டுவந்து தேசிய, சர்வதேச ரீதியில் போட்டிகளில் பங்கு கொள்ள வைப்பதற்கும் அதேவேளை இரு பாடசாலைகளுக்கு மிடையே கல்வி தொடர்பான நட்புறவு மூலம் ஆளுமை மிக்க மாணவர் சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்குமாக இந்த போட்டியை ஏற்பாடு செய்து நடாத்தி வருகின்றோம். உண்மையிலேயே மாணவர்களிடையே மறைந்து கிடக்கின்ற திறமைகளை வெளிக்கொண்டு வந்து ஆற்றல் உள்ள மாணவர்களை இந்த போட்டி உருவாக்கும் என நான் நம்புகிறேன் என்றார்.

இதேவேளை, வன்னியின் சமர்



போட்டியில் பங்குபற்றிய மற்றுமொரு பாடசாலையான முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் அதிபர் சுப்ரமணியேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்

இரண்டு பாடசாலைக்கும் இடையே விளையாட்டுக்கு அப்பால் கலை, கலாசார, பாரம்பரிய நட்புறவுகளை பேணிவருவது ஒரு மேலதிக விடயம். எங்களிடம் இருக்கின்ற நல்ல மற்றும் திறமையான விடயங்களை நட்புறவு பாடசாலையிடம் பகிர்ந்து கொள் வதற்கும், அவர்களிடம் இருக்கின்ற இதேபோன்ற விடயங்களை நாங்கள் பெற்றுக்கொள்வதற்கும் இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைகிறது. இது போன்ற போட்டிகள் பல நடைபெற வேண்டும். அதன் மூலம் இரண்டு மாவட்டங்களுக்கும் இடையே நல்லுறவு மேலும் பலமடையும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

இதேவேளை, கிளிநொச்சி மகா வித்தியாலய அணியின் தலைவர் விதுல்ஜன் போட்டியின் பின்னர் தனது உணர்வுகளை பின்வருமாறு வெளிப் படுத்தினார்,

இந்த போட்டி இரண்டு மாவட்டங் களுக்கும் இடையே நட்புறவு பாலமாக அமையும். நான்காவது வன்னியின் சமர் போட்டி சமநிலையில் முடிந்திருக்கிறது. வெற்றி வாய்ப்பு கிளிநொச்சி மகா வித்தியாலய அணிப்பக்கம் அதிகமாக இருந்தபோதும் மழை காரணமாக ஆட்டம் சமநிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பார்வையாளர்களுக்கு சிறந்த ஒரு துடுப்பாட்ட போட்டி ஒன்றை வழங்கி இருக்கின்றோம் என்ற மகிழ்ச்சி இரண்டு அணி வீரர்களிடமும் காணப்படுகிறது. இந்த போட்டியை சிறந்த ஒரு களமாக பயன்படுத்தி திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது எங்கள் எல்லோரினதும் விருப்பமாக இருக்கிறது. எதிர்காலத்தில் இந்த போட்டிக்கு ஊடாக திறமையான வீரர்கள் உருவாக வேண்டும் என்றார் அணித் தலைவர்.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணித்தலைவர் ஜிந்துசன்: இந்த போட்டியினை தேசியமட்ட போட்டிகளுக்கு செல்லும் வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வீரர்களும் திறமையாக விளையாடி வருகின்றனர். இந்த திறமைகள் மேலும் அதிகரிக்கப்பட்டு அவர்கள் மாவட்டத்திற்கு வெளியே சென்று விளையாடும் அளவுக்கு இருக்க வேண்டும். மேலும், இந்த போட்டியின் மூலம் எங்கள் இரு பாடசாலைகளுக்கிடையேயான உறவுகள் கட்டியெழுப்பப்படும். அதுமட்டுமன்றி இரண்டு பாடசாலை சமூகங்களுக்கிடையேயும். இரண்டு பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கிடையேயும் நல்ல உறவுகள் உருவாகும். எனவே, இந்த வன்னியின் சமர் நட்புக்கிண்ண போட்டி எங்களுக்கிடையே உண்மையிலேயே ஒரு நல்ல நட்பினை தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகமிருக்காது என்றார்.

எது எப்படியோ ஒரு நட்புக்கிண்ண போட்டியாக வன்னியின் சமர் ஆரம்பிக் கப்பட்டிருந்தாலும், அது சாதனையாளர் களை உருவாக்கும் களமாக மாற்றப்படவும் வேண்டும். அதுதான் இந்த போட்டியின் பெருமையை மேலும் அதிகரிக்கும். வன்னியின் சமர் போட்டியில் பங்குபற்றிய வீரர் ஒருவர் தேசிய அல்லது இலங்கையின் ஏ அணியில் இருக்கின்றார் என்ற செய்தி வரவேண்டும். அது வன்னியின் சமருக்கு மட்டுமல்ல முழு வன்னிக்குமே பெருமை சேர்க்கும்.

சுழியன்


பங்கையச்செல்வன்


சுப்ரமணியேஸ்வரன்


விதுல்ஜன்


ஜிந்துசன்





# சிறுவர் துஸ்பிரயோகங்கள்,

# வேலியே பயிரை மேய்கிறது!

மு.தமிழ்ச்செல்வன்

நாளாந்தம் நாங்கள் வாசிக்கின்ற பத்திரிகை, கேட்கின்ற வானொலி, பார்க்கின்ற தொலைக்காட்சி என்பவற்றின் செய்திகளில் சிறுவர், பெண்கள் மீதான பாலியல் துஸ்பிரயோகங்கள், வன்முறைகள் தொடர்பில் செய்திகள் இல்லாத நாட்களே இல்லை என்ற அளவில் நிலைமைகள் காணப்படுகின்றன.

சிறுவர்கள் மீதான வன்முறை என்பது பெருமளவிற்கு குடும்பத்திற்குள்ளேயே, குடும்ப உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

மூன்றாம் தரப்பில் மேற்கொள்ளப்டுகின்ற வன்முறைகள் என்பது மிக மிக குறைவானதே. தந்தை, தாய், சகோதரர்கள், சிறிய தந்தை, பெரிய தந்தை, மாமன், மச்சான், நண்பன், ஆசிரியர், அயலவன் என துஸ்பிரயோகங்களை மேற்கொள்வோரின் பட்டியல் தொடர்கிறது. முக்கியமாக இந்த வரிசையில் கடவுளுக்கு அடுத்த படியாக எமது சமூகம் மதிப்புக் கொடுக்கின்ற சில மதகுருமார்களும் சேர்ந்து கொள்கின்றார்கள்.

இது வேதனையிலும் வேதனை. மேற் குறிப்பிடப்பட்டுள்ள பாத்திரங்களில் உள்ள எல்லோரும் சிறுவர்கள் மீதான துஸ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றார்கள் என்பதல்ல கருத்து. சிலரே இவ்வாறு நடந்து கொள்கின்றனர்.

சிறுவர் துஸ்பிரயோகம் தந்தை, தாய் கைது அல்லது சிறிய தந்தை கைது அல்லது மாமன் கைது அல்லது வயோதிபர் ஒருவர் கைது அல்லது மதகுரு கைது அல்லது ஆசிரியர் கைது என செய்திகள் வெளிவராத பத்திரிகைகளின் பக்கங்கள் இல்லை. கடந்த சில மாதங்ளுக்குமுன் பாப்பரசர் அவர்கள் பாதிரியார்களின் சிறுவர் துஸ்பிரயோக நடவடிக்கைகளுக்கு ஏதிராக பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தார். அதேவேளை பாதிரியார்களின் சிறுவர் துஸ்பிரயோக நடவடிக்கைகளுக்கு எதிராக வத்திக்கான் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று ஐநாவும் தற்போது குற்றம் சாட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அல்லது துஸ்பிரயோகங்கள் என்பதைப் பொதுவாக எல்லோரும் பாலியல் ரீதியான துஸ்பிரயோகம் என்றே கருதுகின்றனர். ஆனால், துஸ்பிரயோகம் எனும் வரையறை என்பது அதுமட்டுமல்ல. 18 வயதுக்கு குறைந்த சிறுவர்கள், நான்கு வகையான துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றார்கள். அதாவது உடலியல் ரீதியான, உளவியல் ரீதியான, உணர்வு ரீதியான,புறக்கணிப்பு ரீதியான, துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவதாகும். இதில் பாலியல் ரீதியான துஸ்பிரயோகங்கள் என்பது சிறுவர் துஸ்பிரயோகத்தில் ஒரு மோசமான பகுதியே.

ஒரு சமூகத்தில் சிறுவர்கள் மீதான துஸ்பிரயோகங்கள் அதிகமாகக் காணப்படுகின்றது என்றால் அங்கே சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதில் சமூக மட்ட அமைப்புகளும் அரசும் தங்களது கடமைகளையும், பொறுப்புக்களையும் சரிவரச் செய்யவில்லை என்றே அர்த்தம்.

வன்னியைப் பொறுத்த வரையில் சிறுவர்கள் மீதான துஸ்பிரயோகம் நாட்டின்



ஏனைய பிரதேசங்களோடு ஏற்படும் போதும் குறைவாக இருந்தாலும் மகிழ்ச்சியளிப்பதாக இல்லை. ஏனைய பிரதேசங்கள் போன்று வன்னியிலும், தந்தையால், தாயால், சகோதரர்களால், சிறிய மற்றும் பெரிய தந்தையால் மாமனால், மச்சானால் என சிறுவர்கள் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

சிறுவர்களுக்கு எதிராக இடம் பெறுகின்ற துஸ்பிரயோகங்களில் ஒரு குறிப்பிட்ட விகித சம்பவங்கள் மாத்திரமே வெளியில் கொண்டு வரப்படுகின்றன. பெரும்பாலானவை அந்த இடத்திலேயே மூடி மறைக்கப்படு கின்றன. வெளிவருகின்ற பலவற்றிலும் சிலவற்றே சட்ட ரீதியான நிவாரணங்களை பெறுகின்றன. வன்னியில் மீள்குடியேற்றத்தின் ஆரம்ப காலங்களில் சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட துஸ்பிரயோகங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க படிப்படியாக தற்போது குறைவடைந்தே காணப்படுகின்றது. இருப்பினும் இதில் மேலும் முன்னேற்றங்களை அவசியமானது. 2010 முதல் 2014 வரையான ஐந்தாண்டு காலப்பகுதியில் கிளிநொச்சியில் பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவில் சிறுவர்களுக்கு எதிரான துஸ்பிரயோகங்கள் மட்டும் 62 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன. இதில் சிறுவர் பாலியல் வல்லுறவு 40, பாலியல் துஸ்பிரயோகங்கள், 08 என்பன வாகும்.

மேற்படி இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களாக தந்தை, மாமன், சிறிய தந்தை, உடன் பிறவா சகோதரன், வயோதிபர், நண்பன், போன்ற குறித்த துஸ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு பாதுகாப்பாக இருக்க வேண்டியவர்களே கானப்படுகின்றனர். எனவே, சிறுவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பது முதலில் குடும்பங்களுக்குள்ளேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். அதாவது சிறுவர் துஸ்பிரயோகத்திற்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கையினை முதலில் குடும்ப, மற்றும் நெருங்கிய உறவினர்கள் நண்பர்கள் போன்றோரிடமே எடுக்க வேண்டும்.



சிறுவர்கள் மீதான துஸ்பிரயோகங்கள் வறுமை தனிமை, கலாசார புறழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் ஏற்படுகின்றன. இதில் முக்கியமாக வறுமை முதன்மையானது, அடிப்படையுமான காரணமாக விளங்குகின்றது. மேலும், சிறுவர்கள் மீதான பாலியல் துஸ்பிரயோகங்கள் என்பது பெருமளவில் தனிமையின் காரணமாக ஏற்படுவதே அதிகமாக இருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரை

கடந்த ஐந்து ஆண்டுகளில் அதாவது 2008 தொடக்கம் 2012 வரை 20,840 சிறுவர் துஸ்பிரயோகம் நடந்துள்ளதாக பாராளுமன்றத்தில் அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். நாடளாவிய ரீதியல் நாள் ஒன்றிற்கு சராசரியாக 17 சிறுவர் துஸ்பிரயோகங்கள் இடம்பெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஆனால், வன்னியை பொறுத்தவரை இந்த நிலைமையில் ஓரளவு ஆறுதல் அளிக்கக்கூடிய வகையில் உள்ளது. நாட்டின் ஏனைய பாகங்களோடு ஒப்பிடுகையில் சிறுவர் துஸ்பிரயோகம் குறைந்தே காணப்படுகிறது. ஆனால், ஆங்காங்கே நடந்து கொண்டும் இருக்கின்றன. குறிப்பாக வன்னியின் கிராமங்களிலேயே அதிகளவான சிறுவர் துஸ்பிரயோகங்கள் ஏற்படுவதாக அவதானிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே வன்னியைப் பொறுத்தவரை சிறுவர் துஸ்பிரயோகத்திற்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் திருப்தி அடைய முடியாது. சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்கின்ற விடயத்தில் அந்தந்த தரப்பினர்களின் கடமைகளும், பொறுப்புக்களும், மிக முக்கியமானது. போரின் பாதிப்புக்களை நேரடியாக, அதிகம் சுமந்த வன்னியில், சிறுவர் துஸ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்கான அதிக வாய்ப்புக்களும், சூழ்நிலைகளும் உள்ளன. இந்த நிலையில் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்கள், பொலீஸ், சிறுவர் பெண்கள் பிரிவு, சமூக மட்ட அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள் என பலதரப்பட்டவைகளின் பணி இங்கே முக்கியமானது. இன்றைய சிறுவர்கள் நாளைய சமூகத்தின் தூண்கள். எனவே, அவர்கள் பாதுகாப்பாகவும், அவர்களுக்குரிய உரிமைகளுடன் வளர்க்க வேண்டிய பொறுப்பு இந்த சமூகத்திற்குரியது. சிறுவர் துஸ்பிரயோகங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் மட்டும் முழுமையான பயனை தந்துவிடப் போவதில்லை. அதற்கப்பாலான கல்வி கலாசார சமய ரீதியான பல நடவடிக்கைகள் அவசியம். எல்லாவற்றுக்கும் மேலாக முதலில் வறுமையை ஒழிக்க வேண்டும். இந்த உலகத்தில் இளமையில் வறுமை என்பது மிகவும் கொடுமையானது. அதுவே பெரும்பாலான சமூக விரோத பிரச்சினைகளுக்கும் காரணமாகவும் உள்ளது.

மேலும் பெரும்பாலான சிறுவர் துஸ்பிரயோகங்கள் குடும்பத்திற்குள்ளேயும், உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் என சிறுவர்களால் அதிகம் நம்பப்படுகின்றவர்களால் மேற்கொள்ளப்படுவதாகவே இருக்கின்றது. ஆங்காங்கே ஒரு சில விரல் விட்டு எண்ணக்கூடிய சிறுவர் துஸ்பிரயோகங்களே பாதிக்கப்படுகின்ற சிறுவர்களுக்கு முன்பின் தெரியாதவர்களால் மேற்கொள்ளப்படுகிறது. ஏனைய எல்லாமே சம்பவங்களால் பாதிக்கப்படுகின்ற சிறுவர்களுக்கு மிகவும் நெருங்கிய நாளாந்தம் அந்த சிறுவர்களுடன் பழகுகின்றவர்களாலேயே மேற்கொள்ளப்படுகிறது.

எனவே சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், துஸ்பிரயோகங்களில் வேலியே பயிரை மேய்கின்ற நிலைமையே அதிகம் ஆதலால் பாதுகாப்பு நடவடிக்கைகளும் முதலில் அங்கேயே மேற்கொள்ளப்படல் வேண்டும்.



## வன்னியின் தகவல் பெட்டி

இரணைமடுக்குள புனரமைப்பு மற்றும் யாழ் - கிளிநொச்சி குடிநீர்த் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 27,000 மில்லியன்

யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பொறியியல் பீடம், விவசாய பீடம் ஆகியவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 600 மில்லியன்

பல்கலைக்கழக நகர அபிவிருத்தி நிதிக்கு 2270 மில்லியன்

பல மில்லியன் ரூபாய் செலவில் கிளிநொச்சி நகரில் நிர்மாணிக்கப்பட்டு வந்த விளையாட்டரங்கின் வேலைகள் கைவிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வந்த வடக்கின் பொருளாதார சந்தையின் பணிகள் முற்றுப்பெறுகின்றன.

பரந்தன் தபால் நிலையம், பூநகரி பிரதேச வைத்தியசாலை, பளை பொது விளையாட்டரங்கு ஆகியன நீண்டகாலமாகவே திறந்துவைக்கப்படாமல் மூடப்பட்டிருக்கின்றன.

ஒரு காலம் காட்டு யானைகளுக்கு பயந்து வாழ்ந்த வன்னி மக்கள் இப்பொழுது டிப்பர் வாகனங்களைக் கண்டு பயப்படுகிறார்கள்.

வழமையாக 10,000 ஏக்கர் பரப்பில் விதை செய்யப்படும் இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக செய்கை இந்த ஆண்டு 800 ஏக்கராகக் குறைந்துள்ளது.



# கிளிநொச்சியின் வாழ்வும் அபிவிருத்தியும்,

கிளிநொச்சியான்..

நீண்ட மூன்று தசாப்தகால உள்நாட்டு போர் முடிவுக்கு வந்துவிட்ட நிம்மதியில் இருந்த வன்னி மண்ணில் நிலைத்திருக்க வேண்டும் என்ற பெருவிருப்புடன் முள்ளிவாய்க்கால் வரை சென்று அந்த நம்பிக்கையை காப்பாற்றியவர். அதே மண்ணுக்கு மீண்டும் மீள்குடியேறி புதிய நம்பிக்கைகளுடன் தமது பயணத்தை தொடங்கியுள்ளனர். சூழல் வெகுவாக மாறுபடவில்லை. அதே நிலையில் அதே குடும்ங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக புதிய நுளைவுகள் வந்திருந்தாலும் அவர்கள் வாழவேண்டும் என்ற எண்ணத்துடன் வேளைக்கே வெளியேறி சென்றவர்கள் தான். முப்பது வருடகால இடைவெளி என்பதால் சில சமூக விழுமியங்கள் மாறுபட்டுள்ளன. ஆயினும் வன்னியில் நிலைத்திருப்போரில் பெரும்பங்கினர் ஒரு தூய இயல்புடையவர்களாக இருப்பதனால் வன்னிப் பண்பாட்டை இந்த பிரிவினர் குழப்பிவிடப் போவதில்லை. வன்னியிலிருந்து நிலைத்திருந்தவர்களின் வாழ்க்கை ஒன்றும் சுலபமானது என சொல்ல முடியாது. நவீன உலகில் உற்பத்தி செய்யப்பட்ட புதிய வடிவிலான அனைத்து ஆயுத உற்பத்திகளுக்கான பரிசோதனைகளும் களம் அமைக்கப்பட்டிருந்த காலத்தில் 03 தசாப்தகாலமாக முகம் கொடுத்து வாழ்ந்தவர்கள் அல்லது உயிர் பிழைத்தவர்கள் இடம்பெயரும் ஒவ்வொரு தடவைகளிலுமே நாம் வாழப்பிறந்தவர்கள் என்பதை உறுதிசெய்து உரம் பெற்றவர்கள். மாறும் சூழலில் நிலைத்திருப்பது என்பதுதான் விஞ்ஞானம் வலியுறுத்தும் தக்கன பிழைத்தல் கோட்பாடு. சூழலுக்கு ஏற்ப தம்மை தயார்ப்படுத்தி மாற்றங்களை வென்றவர்கள் என்பதனால் அபிவிருத்தி குறித்தும் நிலைத்திருக்கும் வளர்ச்சி குறித்தும் இம்மக்கள் பின் நிற்க போவதில்லை. இந்த

உள்ளக காரணிதான். மீள் குடியமர்வு முடிந்து ஐந்து வருடங்கள் கூட நிறைவுறாத சூழலில் அவர்கள் மன ரீதியாகவும் பண்பளவிலும் (Qualitative) தொகையளவிலும் (Quantitative) பாரிய வளர்ச்சியை கண்டு வருகிறார்கள். இந்த இடத்தில் நாம் ஒரு தெளிவான எண்ணக்கருவை புரிந்து கொள்ளல் வேண்டும். வடபுல மக்கள் தமது கடந்த 03 தசாப்தகால வாழ்வில் அபிவிருத்திக்காகவும் அதிகார பரவலாக்கத்திற்குமாக ஆரம்பித்துக் கொண்ட இந்த கடினமான பயணத்தில் அதிகார ரீதியான கொடுக்கல் வாங்கல்கள் நிறைவுறுத்தப்பட்டனவா என்பது தொடர்பாக குறிப்பிட்டு அவ்விடயம் தொடர்பான ஆய்வுகளையே விசாரிப்புகளையோ செய்யாது அபிவிருத்தி குறித்த அபிலாசை மீது அர்த்த பூர்வமாக செய்யப்பட்டுள்ள மாற்றங்களை மட்டுமே இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

2007 ஆம் வருடத்தின் நடுப்பகுதியிலேயே கிளிநொச்சியின் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற ஆய்வுரையொன்றில் வடபுலத்தில் உள்ள விமர்சகர்களில் ஒருவரான திரு. நிலாந்தன் அவர்கள் பேசும்போது கிளிநொச்சி ஒரு தோல்வியடைந்த நகரம் என குறிப்பிட்டு அது சாரப்பட இம்மாவட்டம் எழுவதும் வீழ்வதுமாக இருந்து வருகிறது என்றார். அப்போது அது சரியான கருத்துப்போல பலர் நினைத்தும் இருந்தார்கள். என்போன்ற ஒரு சிறிய பிரிவினர் இது மிக தவறு என உடனேயே தெரிவித்தும் இருந்தோம். அந்த விமர்சனத்தை அடியோடு நீக்கி அபிவிருத்தி தொடர்பில் ஒரு காத்திரமான செயல்பாடுகள் மீள்குடியேற்றத்தை தொடர்ந்து நிறைவுற தொடங்கியிருக்கிறது. 2009 இல் ஆரம்பித்த மீள்குடியேற்றமானது அவ்வருடம் ஒரு ஆரம்ப செயற்பாடு என்ற வகையில் 69 மில்லியன் ரூபா மட்டுமே அரச முதலீடாக இம் மாவட்டத்தில் செய்யப்பட்டது. அதிலும் குறிப்பாக மீள் குடியேற்றத்துக்கென 19 மில்லியனும், கல்வித்துறைக்காக 18 மில்லியனும், வீதி அபிவிருத்திக்காக 12 மில்லியனும் ஒதுக்கப்பட்டதோடு விவசாயம், சுகாதாரம் ஆகிய துறைகளிலும் முதலீடுகள் இடம்பெற்றிருக்கிறது. ஆனால், 2010 ஆம் வருடத்தில் அரசின் முதலீடு 50 மடங்குகளாக அதிகரித்துக்கொண்டது. 3,269 மில்லியன் இலங்கை ரூபா இவ் வருடத்தில் அரச முதலீடாக இம் மாவட்டத்துக்கு செலவிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக,



சர்வதேச தரம் வாய்ந்த நிலையில் பிரதான A9 வீதிகளான யாழ் - கண்டி வீதி, பரந்தன் - பூநகரி வீதி, பூநகரி மன்னார் வீதி முழுமையாக காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டதால் சந்தைப்படுத்தல் வாய்ப்பும் பிற மாவட்ட சந்தைகளுடனான தொடர்பும் மிக உயர்ந்த மட்டத்துக்கு சென்றுள்ளது.

உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான முதலீடுகளாக அமைய வேண்டும் என்பதில் மிக கவனம் செலுத்தப்பட்டது. பொருளாதார ரீதியில் உட்கட்டமைப்புக்களின் அபிவிருத்தியை பின்வருமாறு பிரித்துக் கொள்ளப்படுகிறது.

01. மனித அபிவிருத்திக்கான குடியேற்ற உட் கட்டமைப்புக்கள் - வீடமைப்பு நீர் வழங்கல், மீள் குடியேற்றம், வாழ்வாதாரம், நிர்வாக வலுவூட்டல்

02. சமூக அபிவிருத்திக்கான உட்கட்டமைப்புக்கள் - கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, கூட்டுறவு,

கிராமிய அமைப்பு அபிவிருத்தி, கலாசார விளையாட்டு அபிவிருத்தி

03. பொருளாதார உட்கட்டமைப்புக்கள் - மின்சாரம், வீதிகள், பாலங்கள், கட்டிட நிர்மானங்கள், கைத்தொழில்கள்

04. விவசாய உட்கட்டமைப்பு – விவசாயம், நீர்ப்பாசனம், மீன்பிடி, கால்நடை, சிறு ஏற்றுமதி அபிவிருத்தி, தெங்கு அபிவிருத்தி

இவ்வகையில் 2010 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மிக அதிக செலவீனம் வீடமைப்பின் மீதே மேற்கொள்ளப்பட்டது. வட கிழக்கு வீடமைப்பு அபி விருத்தித்திட்டம் (NEHRP) எனும் உலக வங்கியின் நிதியுதவி யுடனான திட்டத்துடன் பல்வேறு பொது நிறுவனங்கள் செலவிட்ட தொகை மூலம் 1,819 மில்லியன் ரூபா நிரந்தர வீடுகளின் நிர் மாணிப்புக்காகவும் புனரமைப்புக் காகவும் செலவிடப்பட்டன. இதனைவிட மீள்குடி யேற்றத் துக்காக 231 மில்லியனும், வீதிகளின் அபிவிருத்திக்காக 190 மில்லியனும் நீர்ப்பாசன அபிவிருத்திக்காக 160 மில்லியனும், கிராமிய அமைப்புக்களின் வலுவூட்டலுக்காக 158 மில்லியனும் விவசாயத்துக்கென 141 மில்லியனும் செலவிடப்பட்டதுடன், அனைத்து துறைகளின் மீதும் குறிப்பிடத்தக்க செலவீனம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

2010 ஆம் வருடத்தின் முதலீடுகள் அடிப்படையில் மீள்குடியமர்ந்தோரது வாழ்வாதார கட்டமைப்பு நிலைப்படுத்துவதற்கான காசுக்கான வேலை (Cash for works) உணவுக்கான வேலை என்பவற்றுக்கூடாக வழங்கப்பட்ட முதலீடுகள் இருநிலை நன்மைகளை ஏற்படுத்தியிருந்தது. உள்ளூரில் உள்ள உள்ளக வீதிகள் விளையாட்டு திடல்கள் பொதுத் தேவைக் காணிகள் மதவழிபாட்டுத் தலங்கள் என்பவற்றை இயங்கு நிலைக்கு எடுத்துவர உதவியாகியிருந்தன. மறுநிலையில் வேலைவாய்ப்பற்ற சூழலில் இருந்த மக்களுக்கான வருமானம் ஒன்றை பெற்றுக் கொடுத்தது. அது அவர்களின் அன்றாட வாழ்வின் தொடக்கத்துக்கு உதவியாய் இருந்தது. எவ்வாறாயினும் இவ் வருடத்தில் முதலீடுகள் மக்களின் அடிப்படைச் செயற்பாடுகள் ஆரம்பிப்பதன் மீதே கவனம் செலுத்தப்பட்டது. விவசாய ஆரம்பிப்புக்கென விதை நெல், உப உணவு விதைகள் என்பன மானியமாக வழங்கப்பட்டது. விவசாய உபகரணங்களும் மானிய அடிப்படையில் வழங்கப்பட்டது. ஆடுகள், மாடுகள், கோழிகள், என்பன மீள்நிரப்புச் செய்வதற்காக வழங்கப்பட்டது. புதிய பிரதேச மொன்றின் செயல் தொடக்கமாக இது அமைந்திருந்தால் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டம் பெருமளவுக்கு பாரிய கட்டிடங்களின் நிர்மானிப்புக்காக கொடுத்திருந்த முக்கியத்துவத்தைவிட சிறிய வேலைத் திட்டங்களின் மீதே அதிகம் கவனம் செலுத்தியது. இவ்வாண்டின் முதலீடுகள் நம்பிக்கை ஒன்றை கட்டியெழுப்பும் ஒரு ஆண்டாக நிறைவடைந்து சென்றது.

2011 ஆம் ஆண்டின் முதலீடானது ஒரு முதலீட்டு பூரிப்புக் காலம் என கருத முடியும். 2010 உடன் ஒப்பிடுகையில், ஒரு மடங்கு அதிகரிப்பை பதிவு செய்ததாக அமைந்தது. 2011 ஆம் ஆண்டின் மொத்த முதலீடாக 7,193.48 மில்லியன் ரூபாவாக உயர்வடைந்ததுடன் இவ்வருடத்திலும் நிரந்தர வீடமைப்புக்கென 2,553 மில்லியனும் சுகாதார அபிவிருத்திக்கென 1,642 மில்லியனும், பொது நிர்வாகப்படுத்தலுக்காக 692 மில்லியனும், மின்சார விநியோகத்துக்கென 423 மில்லியனும் மீள் குடியேற்றத்துக்கென 383 மில்லியனும், வாழ்வாதார அபிவிருத்திக்கென 380 மில்லியனும், கால்நடை அபிவிருத்திக்கென 293 மில்லியனும், நீர்ப்பாசன அவிவிருத்திக்கென 264 மில்லியனும் செலவு செய்யப்பட்டதுடன் பெருமளவு துறைசார் முதலீடுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதில் வீடமைப்புத் துறையில் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் தொடக்கப் பகுதியாக இருந்ததுடன் அரசுசார நிறுவனங்களினாலும் நிரந்தர வீடுகள் அமைத்து வழங்கப்பட்டன. குறிப்பாக கரித்தாஸ், கியூடெக், சுவீஸ் அபிவிருத்தி நிறுவனம், யூஎன் கபிட்ராட், இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம் ஆகியனவும் பெருமளவில் வீடுகள் கட்டுவதில் பங்களித்தன. சுகாதாரத்துறையில் மாவட்ட மருத்துவமனையின் பல்வேறு புனரமைப்புக்களுடன் சுற்றயல்கூறு மருத்துவ மனைகளான அக்கராயன், வேரவில், பூநகரி, தர்மபுரம், பளை, வட்டக்கச்சி, ஆகியன புதிய நிர்மான தொகுதிகளை பெற்றதுடன் கண்டாவளை, உருத்திரபுரம், போன்ற கிராமிய வைத்திய நிலையங்களும் புனரமைப்புச் செய்ய ப்பட்டன. கரைச்சி மற்றும் பச் சிலைப்பள்ளி பிரதேச செய லகங்கள் புதிதாக கட்டப்பட்டதுடன் மாவட்ட செயலகமும் புனரமைப்புச் செய்யப்பட்டது. அரச கால்நடை வைத்திய நிலையங்களும் பல்வேறு தங்கு விடுதிகளும் புதிதாக அமைக்கப்பட்டன. துரித மீட்சித்திட்டம் (ENREP) மீளெழுச்சி திட்டம் (Rap) ஆகிய கருத் திட்டங்களின் கீழ் பெருமளவு கட்டட நிர்மானம் பாடசாலைகளிலும் அரச அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. இதனூடாக அரச சேவை வழங்கலில் எதிர் நோக்கப்பட்ட பல சவால்கள் கடக்கப்பட்ட ஆண்டாக இது அமைந்ததுடன் அடிப்படை கட்டுமான வளர்ச்சியை நிலைப்படுத்திய ஆண்டாக இது நிறைவு பெற்றிருந்தது.

2012 ஆம் ஆண்டு 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 40 சதவீதம் குறைவாக முதலீடு இடப்பட்ட ஒரு ஆண்டாக அமைந்தது. இவ்வருடத்தில் 4,866 மில்லியன் ரூபா அரச முதலீடாக இடம்பெற்றுள்ளது. அதில் வீடமைப்புத்துறை அதிக முன்னுரிமையுடன் முதலிடப்பட்ட துறையாக அமைந்துள்ளது. 1,734 மில்லியன் ரூபா நிரந்தர வீடமைப்புக்காக இடப்பட்டது. இந்திய நிதியுதவியுடனான நிரந்தர வீடுகளை அமைப்பதற்கென 7,100 நிரந்தர வீடுகளும் 1,000 பகுதிச் சேத வீடுகளும் நிதியொப்புதல் அளிக்கப்பட்டதுடன் 3,000 இற்கும் சற்று அதிகமான வீடுகள் கட்டி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. உண்மையில் 550,000 ரூபா நன்கொடையாக வழங்கப்படும் இவ்வீடுகளுக்கு ஒவ்வொரு பொது

மகனும் 40,000 வரையான சுய முதலீட்டை செய்தே இத்திட்டம் முழுமைப்படுத்தப்படுகிறது. இவ் வகையில் வீடுகளின் மீதான தனியார் முதலீடு அதிகளவில் இடம்பெற்று வருகிறது. தனியார் துறை முதலீடுகள் அதிகம் இடம்பெறுவது வீடமைப்புடன் காணிகளின் அபிவிருத்தி, மீள நடுகை ஆகிய பிரதான துறைகளில் பெருமளவு இடம்பெற்று வருகின்றது. 450 மில்லியன் ரூபாய் இவ்வருடத்தில் இத்துறை மீது இடப்பட்டுள்ளதுடன் அடுத்து சுகாதாரத்துறைக்கென 270 மில்லியன் ரூபாய்களும், மின்சார வழங்கலுக்கென 224 மில்லியனும் இடப்பட்டுள்ளது. அடுத்து உள்ளக கட்டுமான அபிவிருத்திக்கென 237 மில்லியன் செலவிடப்பட்டன. 2012 ஆம் ஆண்டில் குறிப்பிடக்கூடிய மற்றுமொரு அபிவிருத்தி முதலீடாக தனியார்துறை கம்பனிகளான Mass குழுமத்தின் விடியல், வானவில் ஆகிய இரு ஆடை தொழிற் சாலைகள் உருவாக்கப்பட்டதுடன் Cargill's Food City யின் பழங்கள் பதனிடும் நிலையமும் உருவாக் கப்படுள்ளது. பெருமளவு வறிய படித்த இளைஞர்கள் மத்தியில் வேலைவாய்ப்பு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வகையில் 2012 ஆம் வருடத்திலிருந்து உட் கட்டமைப்புக்களின் நிலையான அபிவிருத்தி நோக்கி உறுதியான முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. 2012 வருடத்தைப் பொறுத்தவரை அபிவிருத்தி நோக்கிய ஆரம்ப முதலீடு இடம்பெற்ற வருடமாகவே இதனை கருத முடியும். நிலைமாறு காலகட்டத்திலிருந்து அபிவிருத்தி நோக்கிய முதலீடுகள் இடம் பெறத்தொடங்கியது.

2013 ஆம் வருடத்திலும் இதன் தொடர்ச்சி மகிழ்ச்சிக்குரியதாகவே அமைந்திருக்கின்றது. 2013 இல் மொத்த முதலீடாக 4,308 மில்லியன் ரூபா அரச முதலீடாக செய்யப்பட்டதுடன் வீதி அபி விருத்திக்கென 328 மில்லியன் ரூபாய்கள் முதலிடப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து 316 மில்லியன் ரூபாய் சுகாதார துறையிலும் மின்சாரத்துக்கென 245 மில்லியன் ரூபாய்களும், நீர்ப்பாசனத்துக்கென 236 மில்லியன் ரூபாய்களும் செலவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக கொங்கிறீற் கல்லிலான 100 வீதிகள் அமைத்தல் திட்டம், இணைப்பு வீதிகள் அபிவிருத்தி ஆகியன இடம்பெற்றதுடன் மாவட்டத்தின் 41 சதவீதத்தினருக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. சிறிய நீர்ப்பாசன குளங்களின் அபி விருத்தி பாடசாலை கட்டிட வச திகளின் அபிவிருத்தி என்பன குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை பதிவு செய்ததுடன் நவீன வச திகளுடனான விளையாட்டு மைதானம், நவீன வசதிகளுடனான வங்கி சேவைகள் நவீன மாவட்ட செயலகம் என்பன குறிப்பிடத்தக்க அபிவிருத்தித் திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டன.

அபிவிருத்தி தொடர்பில் உட் கட்டமைப்பு அபிவிருத்தி சார்ந்து பெருமளவு முன்னேற்றங்கள் இவ் ஐந்து ஆண்டுகளில் இடம் பெற்றுள்ள போதிலும் மனிதவள அபிவிருத்தி தொடர்பில் செய் யப்பட்டுள்ள முதலீடுகள் திருப்தியான மட்டத்தை சென்றடைந்ததா என்ற கேள்வியும் காணப்படுகிறது. வேலை வாய்ப்பு தொடர்பில் நிர்மாணத்துறையில் அதிகளவு சந்தர்ப்பம் ஏற் படுத்தப்பட்டதுடன் பல்வேறு சுய தொழில் முயற்சிகளும் ஆரம் பிக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி தொடர்பில் A9 வீதியின் கிளிநொச்சி பிரதேச எல்லைப் பரப்பினுள்ளும் தொடராகவும் செய்யப்பட்ட 14,210 மில்லியன் ரூபா முதலீடு தனித்துவமாகவும் உத்தே சிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண – கிளிநொச்சி நீர்வழங்கல் திட்டத்துக் கென ஒதுக்கப்பட்டுள்ள 18,645 மில்லியன் ரூபாய் முதலீடு மற்றும் கல்வித்துறையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் 2010 இல் 23 மில்லியனும் ஒதுக்கிடப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது. இது ஆய்வு பல அரச முதலீட்டில் சேர்க்கப்படாத தொகையாகும்.

சர்வதேச தரம் வாய்ந்த நிலையில் பிரதான Aதர வீதிகளான யாழ் - கண்டி வீதி, பரந்தன் - பூநகரி வீதி, பூநகரி – மன்னார் வீதி என்பன முழுமையாக காப்பற் வீதிகளாக மாற்றப்பட்டதால் சந்தைப்படுத்தல் வாய்ப்பும் பிற மாவட்ட சந்தை களுடனான தொடர்பும் மிக உயர்ந்த மட்டத்துக்கு சென்றுள்ளது. தேசிய தரத்திலான 24 மணிநேர சந்தை மையம் கனகபுரத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த செயல் திட்டம் 2015 இல் நிறைவு பெறும் போது தம்புள்ள நகருக்கு அடுத்து இலங்கையில் உறங்காத நகரமாக கிளிநொச்சியும் மாற்றியமைக்கப்படவிருக்கின்றது.

**"2010 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற் கொள் ளப்பட்ட முதலீடுகள் மிக அதிக செலவீனம் வீடமைப்பின் மீதே மேற் கொள்ளப்பட்டது.**

**வட கிழக்கு வீடமைப்பு அபி விருத்தித்திட்டம் (NEHRP) எனும் உலக வங்கியின் நிதியுதவி யுடனான திட்டத்துடன் பல்வேறு பொது நிறுவனங்கள் செலவிட்ட தொகை மூலம் 1,819 மில்லியன் ரூபா நிரந்தர வீடுகளின் நிர் மாணிப்புக் காகவும் புனரமைப்புக் காகவும் செலவிடப்பட்டன.**

**இதனைவிட மீள்குடி யேற்றத் துக்காக 231 மில்லியனும், வீதிகளின் அபிவிருத்திக்காக 190 மில்லியனும் நீர்ப்பாசன அபி விருத்திக்காக 160 மில்லியனும், கிராமிய அமைப்புக்களின் வலு வூட்டலுக்காக 158 மில்லியனும் விவசாயத்துக்கென 141 மில் லியனும் செல விடப்பட்டதுடன்,**

**அனைத்து துறைகளின் மீதும் குறிப்பிடத்தக்க செலவீனம் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றது."**





# தளிர்கள்



## நன்றாய் நடந்தது

கொட்டும் பனியில் நனைந்து
குறுக்கு வழியால் நடந்து
கட்டுப் புத்தகம் சுமந்து
கடந்து வந்தோம் ஆற்றினை.

எட்டு மணிக்குத் தொடங்கும்
எங்கள் பாடசாலையை
வீட்டு முகில்கள் விலகவே
விருப்பம் இல்லை போலும்

நாங்கள் உள்ளே சென்றதும்
நழுவி முகில்கள் ஓடின
வாங்கும் மேசையும் நிறைந்திட
வகுப்பும் நன்றாய் நடந்தது.

## வீடு கட்டுவோமே

வீடு கட்டுவோமே
வீடு கட்டுவோமே

கூடு கட்டி வாழும்
குருவிக் கூட்டம் போல
வீடு கட்டுவோமே
வீடு கட்டுவோமே

எலிக்கு புற்றே வீடாம்
எறும்பின் வீடும் அதுவே
புலிக்கு குகையே வீடாம்
புறாவின் வீடே கோபுரம்

மண்ணில் நல்ல வீடு
மனம் போலக் கட்டியே
எண்ணம் போல
வாழ்வோம்
என்றும் ஒன்று கூடியே



**கலாபூசணம் துரைசிங்கம்**

இயல்வாணன்



# பாக்கியம் பாட்டியின் விண்வெளிப் பயணம்...

இரணைமடு ஏவுதளம் பரபரப் பாயிருந்தது. வெண்ணிலா விண்கலம் வானில் ஏவுவதற்குத் தயாராக இருந் தது. இன்னும் சில நிமிடங்களில் புறப்படப் போகும் வெண்ணிலா விண்கலத்தில் பாக்கியம் பாட்டியும் பயணம் செய்ய இருக்கிறார். விண் வெளியில் ஒரு சிறு கிரகம் போல் நீள்வட்டப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் தாயகம் விண் வீட்டில் பாக்கியம் பாட்டியின் மகன் விஞ்ஞானி சத்தியசீலனும், அவரது மனைவி வித்தியாவும், அவர்களது செல்லக் குழந்தை சுடர்விழியும் வசிக்கிறார்கள். அவர்கள் கடந்த ஆறு ஆண்டுகளாக அங்கு வசித்து வருகின்றனர். அவர்களது தொழிலும் வாழ்க்கையும் அந்த விண்வீடுதான்.

சீலன் பாக்கியம் பாட்டியின் ஒரே மகன். ஆள் உதவியில்லாமல் இருக் கும் பாக்கியம் பாட்டி தான் இறந் தாலும் மகனுடனே இருந்து இறக்க வேண்டும் என்ற ஒரே பிடி வாதத்துடன் இருந்தார். இதற்காகக் கல்லு வைத்த கோவிலெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டார். கடந்த ஐந்து வருடங்களாக தாயின் நச்சரிப்பைப் பொறுத்துக் கொண்ட சீலன் இனியும் தாமதிக்கக் கூடாது. எப்படியென்றாலும் அம்மாவின் ஆசையை நிறைவேற்றி வைக்க வேண்டும். அம்மாவை விண்வீட்டிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள். என்று தனது கனிஸ்ட விஞ்ஞானிகளுக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.


ஒரு வருட காலமாகப் பாக்கியம் பாட்டிக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. வெள்ளைக் கரை போட்ட சாறியைத் தவிர வேறெதையும் கட்ட மாட்டேன் என்று அடம் பிடித்த பாட்டி இப்போது விசேட ஜீன்ஸ் அணிந்து சப்பாத்தும் போடப் பழகி விட்டார். பழஞ் சோறும், கொடுவா மீன் தலையும் சாப்பிட்ட உடம்புக்கு பல் துலக்கும் பற்பசை அளவில் உணவைக் கொடுத்து அதைச் சாப்பிடச் செய்வதில் கனிஸ்ட விஞ்ஞானிகள் படாத பாடுபட்டனர். சோர்ந்து சுருக்கம் கண்ட தசைகளில் அடிக்கடி ஸ்ரிக்கர் அடித்து இரத்தப் பரிசோதனை செய்தும், பல தடவை மல்ரி டிசீஸ் ஸ்கானருக்குள் ஆளை நுழைத்து அவரது உடல் நிலையைப் பரிசோதித்தும், பாட்டியின் உறுதியைப் பரிசோதித்துக் கொண்டனர்.

பாட்டியின் உடல் உறுதியை விட மனவுறுதி உயர்வாக இருப்பதாக பரிசோதனை முடிவுகள் காட்டின. சாதாரணமாக இந்த வயதில் இருக்கக் கூடிய மனவுறுதியை விட நாற்பது வீதம் பாட்டிக்கு உயர்வாக இருப்பதாக கனிஸ்ட விஞ்ஞானிகள் கூறிய போது சீலன் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். சீலனுக்கு ஐந்து வயதாக இருக்கும் போதே தந்தையார் இறந்துவிட தன்னந் தனியனாக இருந்து அவரை வளர்த்த தாயாரின் கண்டிப்பும் அரவணைப்பும் அவரது நினைவில் வந்து கண்ணீர்த் துளிகளைத் தரையில் சிந்த வைத்தது.

ஏற்கனவே விமானத்தில் ஏற்றி பல இடங்களுக்கும் பாட்டியை அழைத்து வந்திருந்தனர். சுப்பசொனிக் விமானத்தில் ஏற்றி விரைவாகப் பயணிக்கச் செய்தும் பாட்டி அசையவில்லை. எனவே விண்வெளி செல்வதற்கு பாக்கியம் பாட்டிக்கு பச்சைக் கொடி காட்டப்பட்டது. பாட்டியின் உடல், உள நிலைமைகள் சீரான நிலையை அடைந்திருக்கிறதா என்ற பரிசோதனையிலும் வெற்றி கிட்டவே புதிதாக விண்வீட்டை நோக்கிச் செல்லும் வெண்ணிலா ரொக்கட்டில் அவரை அனுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அங்கு சென்றால் திரும்பி வரலாமோ தெரியாது என்பதால் பாட்டி சில பிரயாணங்களை ஆரம்பித்தார்.முதலில் அவரது விருப்பத்துக்கு ஏற்ப சில ஆலயங்களுக்கு யாத்திரை சென்று வந்தார். அடுத்து தன்னுடைய உறவுக்காரர், தன் வயது நண்பியர் வீடுகளுக்குச் சென்று வந்தார். எல்லாரிடமும் தனது பிரியாவிடையைச் சொன்னார். மனிசருக்கு சாப்பிடுறதும், சாப்பிட்ட தையும் குடிச்சதையும் மலசலமாய்க் கழிக்கிறதுந்தானே பிரச்சினை. அங்கை அந்தப் பிரச்சினை எதுவும் இல்லை. உந்த உறுத்தல் ஏதும் இல்லாமல் பிரீயா இருக்கலாம் என்று பாட்டி தனது நண்பியருக்குச் சொல்லிப் பெருமைப்பட்டார்.

➡




இஞ்சை கோவில் கோவிலெண்டு திரிவாய் பாட்டி. அங்கை என்ன செய்யப் போறாயணை என்று பக்கத்து வீட்டுப் பங்கயம் கேட்டாள். போடி போக்கத்தவளே! கைலாயத்துக்குப் பக்கத்திலைதானே விண்வீடும் இருக்குது. நேரை போய் தேவர்களையும் கடவுளையும் பாத்திட்டு வந்தால் போச்சுது. மகனைக் கேட்டால் கூட்டிக் கொண்டு போவன்தானே! என்று பதில் சொன்னார். பாட்டிக்கு மகனைக் காண்பது மட்டுமல்ல கைலாயத்துக்குப் போறது எண்ட சந்தோசமும் சேர்ந்து மட்டற்ற மகிழ்ச்சியில் திளைத்தார்.

கையெடுத்துக் கும்பிட்ட கோவில்களின் விபூதிகளையெல்லாம் ஒரு பையுக்குள் போட்டுக் கொண்டார். போதாததுக்கு காவல் கயிறுகளையும் பூசையில் வைத்து மந்திரித்து எடுத்து வந்தார். மகனுக்குப் பிடித்த பலகாரங்கள் கொஞ்சத்தையும் செய்வித்து ஒரு பார்சலாக்கினார். சேலை கட்ட முடியாது என்று சொன்ன போதும் கைகாவலாய் இருக்கட்டுமே என்று இரண்டு வெள்ளைச் சீலைகளையும் எடுத்து வைத்தார்.

குறித்த நாளும் வந்தது. தம்பியவை நல்ல நாளிலை சுபநேரத்திலை தான் போகவேணும். அட்டமி நவமி அமாவாசை பறுவமெண்டால் நான் வரமாட்டன் என்று பாக்கியம் பாட்டி நிபந்தனை போட்டிருந்தார். அந்த நாள்கள் சூரிய சந்திர ஈர்ப்பில் பிரச்சினை தரும் என்பதால் அந்த நாள்கள் தவிர்க்கப்பட்டன. பாட்டி பஞ்சாங்கத்தை எடுத்துப் பார்த்தார். சுவர்க்க வாயில் ஏகாதசி என்று திதி போட்டிருந்தது. பாட்டி இறைவனைத் தொழுது நல்ல நாளில்தான் கடவுள் அழைக்கிறார் என காணுகின்ற எல்லோருக்கும் சொல்லிக் கொண்டார்.

விண்வெளி நிலையத்தில் பலரும் கூடியிருந்தனர். சீனாவிலிருந்து இரண்டு விஞ்ஞானிகள், அமெரிக்காவிலிருந்து கோடீஸ்வர வர்த்தகர், யப்பானிலிருந்து ஒரு விஞ்ஞானித் தம்பதி ஆகியோரும் வெண்ணிலாவில் பயணிக்க இருக்கிறார்கள். அத்துடன் தமிழ்நாட்டிலிருந்து வெண்ணிலா விண்கலத்தின் கட்டுப்பாட்டு அறை யுடன் தொடர்பில் இருப்பதற்கும், பழுது பார்ப்பதற்குமென வெங்கடா சலபதியும் வந்திருந்தான்.

வழியனுப்புவதற்கு வந்தவர்கள் விடைபெற்றுக் கொள்ள எல்லோரும் விண்கலத்துள் ஏற்றப்பட்டனர். பாக்கி யம் பாட்டி விண்கலத்துக்குள் ஏறிய பின்னர்தான் தான் ஒரு பொருளை எடுத்துவரத் தவறி விட்டதை உணர்ந்தாள். மேனை வெங்கடா சலபதி! ஒரு சின்ன உதவியடா... சின்னச் சொப்பிங் பையுக்குள்ளை இரணைமடு மண் கொஞ்சத்தை எடுத்துத் தா அப்பு என்று கேட்டார்.வெங்கடாசலபதிக்கு ஒருபுறம் எரிச்சல் ஏற்பட்ட போதும் மறுபுறம் சிரிப்பும் வந்தது. கடைசிக் கந்தா யத்திலை நின்று பாக்கியம் பாட்டி கேட்கிறா. நாளைக்கு ஒண்டெண்டால் இந்த மனிசி கேட்டதை நினைச்சே கண் கலங்க வேண்டி வரும் என்று எண்ணிய வெங்கிட்டு ஓடிச் சென்று மண்ணை எடுத்து வந்து கொடுத்தான். நீ நல்லாய் இருப்பாய் என்று பாட்டி ஆசீர்வாதம் வழங்கினார்.

ஆயத்த சமிக்ஞை விளக்கு எரியத் தொடங்கியது. விண்கலம் புறப்படத் தயாராகிறது. பறப்பதற்குத் தயாராகுங்கள்.புதிய உலகைக் காண்போம் என்று அறிவித்தல் கெட்போனுக்கு ஊடாக அங்கிருந்த வர்களின் காதுகளை வந்தடைந்தது.

தடாரென ஒரு வெடிப்பு. ஸ்..ஸ்...என்ற உந்தலோடு விண்ணை நோக்கிக் காற்றைக் கிழித்தபடி வெண்ணிலா விண்கலம் பறக்கத் தொடங்கியது. சஸ்டியை நோக்கச் சரவண பவனார்... என்று பாக்கியம் பாட்டி கந்தசஸ்டி கவசத்தை வாய்க்குள் முணுமுணுக்கத் தொடங்கினார்.

# வன்னியை வாட்டி வதைக்கும் உள சமூகப் பிரச்சினைகள்

பெரும்பாலான குடும்பங்களில் குடும்பத்தை வழி நடத்துகின்ற தலைவர் இல்லாமல் இருப்பது துரதிஸ்டவசமாகும். இக்குடும்பங்கள் துடுப்பிழந்த கட்டு மரம் போல காணப்படுகின்றன. இதன் காரணமாக குடும்பத்தலைவி குடும்பத்தை தலைமை தாங்குவதற்கு நிர்ப்பந்திக்கப் படுகின்றாள். குறித்த பெண் தொழில் வாய்ப்புக்கள் தேடி வெளி ஊருக்கும், நகரங்களுக்கும் செல்ல முற்படுகின்றபோது அப்பெண் பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளால் இலகுவில் பாதிக்கப்படக் கூடிய vulnerable பெண்ணாக மாற்றப்படுகின்றாள். .



**கொ**டிய யுத்தம் முடிவிற்கு வந்து ஐந்து ஆண்டுகள் கடந்த நிலையில் பல்வேறுபட்ட புதிய சவால்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர் வன்னி மக்கள். இவற்றில் கொடிய வறுமை, குடும்ப வன்முறை, தற்கொலை, கலாசாரம், மதுபானம், போதைப்பொருள் பாவனை, துஸ்பிரயோகங்கள், இளவயதுக் கர்ப்பங்கள் அல்லது திருமணமாகாத கர்ப்பங்கள் போன்றவை பெரும்பாலும் பதிவாகிக் கொண்டிருக்கின்ற பிரச்சினைகளாக காணப்படுகின்றன. போருக்குப் பின்னான காலப்பகுதியில் (Post war scenario) இது போன்ற பிரச்சினைகள் எல்லா இடங்களிலும் அதிகரித்துக் காணப்படுவது சாதாரணமானதுதான். ஆனால், இனப்பிரச்சினைகளின் தன்மையும் விளைவையும் விளங்கிக்கொண்டு அப்பிரச்சினைக்கு மக்களின் விழிப்புணர்வுச் செயற்பாட்டினூடாக வெற்றி கொள்வதுவே இதற்குரிய தீர்வாகும்.

மேலும், இத்தீர்வானது சுயாதீனமானதாகவும், பிரச்சினையை எதிர்கொள்ளும் மக்கள் வாழும் சமூகத்திலிருந்தே தேடி எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அப்போதுதான் அத்தீர்வு நிரந்தரமானதாகவும், நிலையானதாகவும் அமையும். மேலும், அடிப்படைக் கல்வி அறிவு குறைந்த எம் மக்களையும், இளஞ்சந்ததியினரையும் அறிவூட்டுவதன் மூலமும் விழிப்புணர்வூட்டுவதன் மூலமும் மாத்திரமே உண்மையான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். அதைவிடுத்து வெளிநாட்டு உதவித் திட்டங்களும் வாழ்வாதார முயற்சிகளும் இப்பிரச்சினைக்குரிய தற்காலிக படிநிலைகளாகவே காணப்படுகின்றன. இவற்றை எமது மக்கள் நன்குணர்ந்து தற்காலிக உதவித்திட்டங்களினூடாக தங்களுடைய கடின உழைப்பு, சுயகௌரவம், நேர்நோக்கும் தன்மை போன்றவற்றை இழந்து தங்கிவாழும் மனநிலையை Dependent Mentality சொந்தமாக்கி நீண்டகால சமூக பொருளாதார அபிவிருத்தியை Socio Economical Development இழந்து விடுகின்றார்கள். இக்கட்டுரையானது சவால்களும் அதை எதிர்கொள்ளும் வழிமுறைகளையும் உள்ளடக்கி உதாரணங்களுடன் வெளிவருகின்றது. இங்கு உள சமூகப் பிரச்சினைகள் ஒவ்வொன்றாக அலசி ஆராயப்படும்.

## குடும்பக் கட்டமைப்பும், உறவுமுறை விரிசல்களும்

குடும்பம் என்பது ஒரு சமூகத்தினது அடிப்படைக் கட்டமைப்பு. தொழிற்பாட்டு அலகாகும். குடும்பத்தினது கட்டமைப்பு ஒழுங்காக பேணுவதோடு, தொழிற்பாட்டினையும் சீராகப் பேணுதல் முக்கியமானதாகும். கட்டமைப்பும், உறவுமுறைகளும் சரியாகப் பேணப்படுகின்ற குடும்பங்கள் நன்கு தொழிற்படும் குடும்பங்களாக Organized family கருதப்படும். கட்டமைப்பிலும் உறவுமுறைகளிலும் விரிசல் ஏற்படுகின்ற போது சிதைவடைந்த குடும்பங்களாக மாற்றமடைகின்றது. Disorganized இவ்வாறு சிதைவடைந்த குடும்பங்களாயின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற போது அதன் காரணமாக பல்வேறு உள சமூகப் பிரச்சினைகள் எழுகின்றன.

## குடும்பக் கட்டமைப்பு

ஒரு குடும்பக் கட்டமைப்பிலே குடும்பத் தலைவன், குடும்பத் தலைவி, பிள்ளைகள், குடும்பத்தைச் சார்ந்து வாழ்கின்றவர்கள் போன்ற அங்கத்தவர்கள் அடங்குவார்கள். இன்றைய நிலையில் பெரும்பாலான குடும்பங்களில் குடும்பத்தை வழி நடத்துகின்ற தலைவர் இல்லாமல் இருப்பது துரதிஸ்டவசமாகும். இக்குடும்பங்கள் துடுப்பிழந்த கட்டுமரம் போல காணப்படுகின்றன. இதன் காரணமாக குடும்பத் தலைவி குடும்பத்தை தலைமை தாங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றாள். இதன்போது அப்பெண் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகம் கொடுக்கின்றாள். இவ்வாறான குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் Female headed family என அழைக்கப்படும். இதன்போது குடும்ப அங்கத்தவர்கள் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு குறித்த பெண் தொழில் வாய்ப்புக்கள் தேடி வெளியூர்களுக்கும், நகரங்களுக்கும் செல்ல முற்படுகின்ற போது அப்பெண் பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளால் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய vulnerable பெண்ணாக மாற்றப் படுகின்றாள். இந்த நிலையானது மென்மேலும் குறித்த குடும்பத்தை சிதைவடைய செய்து தொழிற்பாட்டிழப்பை ஏற்படுத்துகின்ற செயன் முறையாகும். இச் செயன் முறையின் போது குடும்ப அங்கத்தவர்களுக்கு இடையேயான உறவுமுறையில் விரிசல்கள் ஏற்படுத்துகின்றன. இதன் விளைவாக ஆண், பெண்களிடையே ஒன்றுக்கு மேற்பட்ட துணைகளை Multiple partners முறையில் Multiple partner உருவாக்கிக கொள்ளும் நிலை ஏற்படும். இந்நிலையானது பிள்ளைகளையும், அக்குடும்பத்தினைத் தங்கி வாழ்கின்ற அங்கத்தவர்களையும் பாரிய பாதிப்புக்குள்ளாக்கின்றது.

**மா.ஜெயராசா**
**(உளநல மருத்துவர், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி.)**

# Solaivanam

# சோலைவனம்

## விருந்தினர் விடுதி

No.79,Uthayanagar west.
Kilinochchi.

இல: 79, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

16-குளிரூட்டப்பட்ட அறைகள்
48 பேர் தங்கும் வசதி

**திறந்த மண்டபம்**

பயிற்சிகள், கருத்தரங்குகள், நிகழ்வுகள்.

**கலந்துரையாடல் மண்டபம்**

சிறு பயிற்சிகள், நேர்முகத் தேர்வு, கலந்துரையாடல்

**மற்றைய சேவைகள்.**

பிறந்தநாள், ஒன்று கூடல் நிகழ்வுகள்,
வீடுகளிற்க்கு தேவையான உணவு வகைகள் தயாரித்து
எம்மால் உங்கள் இடத்திற்கு விநியோகிக்கப்படும்.

வீடுகள், காரியாலயங்களிற்கு நீங்கள்
வேண்டிய உணவுகள் தயாரித்து வழங்கமுடியும்



T.P: 0212283933
Mob: 0777763355
E-mail: solaivanamguesthouse@gmail.com






# கிளிநொச்சி நகரில் .....

- உயர்தர கலர் போட்டோக்கொப்பி High Quality Colour Photo Copy
- உயர்தர கலர் பிறிண்ட் High Quality Colour Print
- லெமினேற்றிங் Laminating
- பக்ஸ் அனுப்புதல் Fax
- ஈமெயில் அனுப்புதல் E.mail
- இணையப் பாவனை Net Browsing
- முகம்பார்த்து கதைத்தல் Skype
- ஸ்கானிங் Scanning
- சீடி றைற்றிங் CD Writing
- கணினி தட்டச்சு, பக்க வடிவமைப்பு Computer Typing, Page Setup
- வாழ்த்து மடல்கள் வடிவமைப்பு Greeting Cards Designing





- விசிற்றிங்காட், சான்றிதழ்கள், அழைப்பிதழ்கள் வடிவமைப்பு Visiting Cards, certificates, Invitation Creating
- புத்தகம் கட்டுதல் Book Binding
- பாடசாலை மாணவர்களுக்கான செயற்திட்டங்கள், அட்டைப்படம் வடிவமைத்தல்








# Maxico
## மக்சிகோ

All Kind OF Computer Printing Work & Net Browsing

சகல விதமான கணினி பிறிண்டிங் வேலைகள், இணையத்தள பாவனை.

Opp - To Kachcheri, A9 Road, Kilinochchi. கச்சேரி முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி.
Phone & Fax : 0212285608. E.mail: maxico5608@hotmail.com